# தலைப் பிறைக் கருத்து வேறுபாடுகளும் நடைமுறைச் சிக்கல்களும்

முஹம்மத் ஹுஸைன் இப்னு முஹம்மத் றபீக் (பயானி)

# பொருளடக்கம்

முன்னுரை

**பகுதி :1 சகோதரரின் ஐந்து குற்றச்சாட்டுகளுக்கான தெளிவும் சகோதரரின் தொகுப்பில் காணப்படும் ஏனைய தவறுகளும்.**

- பதில்களும் விளக்கங்களும் - குற்றச்சாட்டுக்களும் பதில்களும்
- கண்டுகொள்ளப்படாத நியாயங்கள்

**பகுதி :2 எமது நிலைப்பாட்டுக்கான ஆதாரம்.**

**பகுதி :3 சகோதரரின் பகுதி 2 இற்கான விமர்சனம்**

**பகுதி :4 சர்வதேசப் பிறையிலே உள்ள சிக்கல்கள்**

**1- சிக்கலிலும் சிக்கல்**
**2- துல்ஹஜ் மாதத்தில் மாத்திரம் வித்தியாசமான அணுகுமுறையா?**
**3- உங்களிடம் பிரச்சினையே இல்லையா?**
**4- சர்வதேச தேதிக் கோடு**

**பகுதி :5 அறபு மொழித் தொகுப்பின் தமிழாக்கத்தின் சுருக்கம்**

# இணைப்பு

- சர்வதேசப் பிறையை நியாயப்படுத்த உலமாக்கள் மீது இட்டுக்கட்டலாமா?

- இறுதியாக

بسم الله الرحمن الرحيم

**إن الحمد لله ، نحمده ونستعينه ونستغفره ونعوذ بالله من شرور أنفسنا ومن سيئات أعمالنا . من يهده الله فلا مضل له ، ومن يضلل فلا هادي له ، وأشهد أن لا إله إلا الله وحده لا شريك له ، وأشهد أن محمدًا عبده ورسوله.**

**{ يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ}[1] {يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا}[2] {يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا }{ يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا }[3] .**

**أما بعد فإن أصدق الحديث كتاب الله وأحسن الهدي هدي محمد (*صلى الله عليه وسلم*) وشر الأمور محدثاتها وكل محدثة بدعة وكل بدعة ضلالة.**

---

[1] (آل عمران: 102)

[2] (النساء: 1)

[3] (الأحزاب: 70-71)

## முன்னுரை

பல அறிஞர்களின் பிறை தொடர்பான கருத்துக்கள் அடங்கிய ஒரு அரபு மொழித் தொகுப்பைத் தயரித்து பல மௌலவி சகோதரர்களுக்கு சென்ற ரமழானில் (ஹி1431) கொடுத்தேன். மாபெரும் பொய்யனான யஹ்யா சில்மி[1] மற்றும் சிலர், தாங்கள் முழுமையாக உலமாக்களின் வழிகாட்டலில் தான் செயல்பட்டு வருவதாகவும் சர்வதேசப் பிறையை தற்காலத்தின் பேரறிஞர்களான அல்பானி, இப்னுபாஸ் போன்றோர் வழியுறுத்தி கூறியதாகவும் பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் இதே அறிஞர்கள் சர்வதேசப் பிறையை நடை முறைப்படுத்துவது சம்பந்தமாக என்ன கூறியிருக்கின்றார்கள் என்பது பலருக்கு தெரியாது. அதனை தெளிவு படுத்துவதையும் ஒரேபகுதியில் வாழும் மக்கள் பிரிந்து பிளவுபட்டு வெவ்வேறு நாட்களில் நோன்பையோ பெருநாளையோ எடுப்பது கூடாது என்பதை வழியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே அத்தொகுப்பு தாயரிக்கப்பட்டது.

அதற்கு மறுப்பாக சகோதரர் சில்மி (மதனி) அவர்கள் சர்வதேசப் பிறை பற்றிய விமர்சனத்திற்கான பதில் என்ற தலைப்பில் ஒரு ஆக்கத்தை எழுதி எம்மிடம் கையளித்தார். எமது தொகுப்பின் மீது அவரால் முன்வைக்கப்பட்ட அணைத்து குற்றச்சாட்டுகளும் அர்த்தமற்றவை என்பதை தெளிவு படுத்துவதற்காகவும் அவ்வாக்கத்தில் காணப்படும் தவறுகளை சுட்டிக் காட்டுவதற்காகவும் சர்வதேசப் பிறையின் நடைமுறைச் சிக்கல்களை சுட்டிக் காட்டுவதற்காகவும் எமது நிலைபாட்டை தெளிவு பதுத்துவதற்காகவும் இந்த ஆக்கத்தை எழுத விரும்புகிறேன். இவ்வக்கத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்துள்ளோம்.

1. சகோதரரின் ஐந்து குற்றச்சாட்டுகளுக்கான தெளிவும் சகோதரரின் தொகுப்பில் காணப்படும் ஏனைய தவறுகளும்.

2. எமது நிலைப் பாட்டுக்கான ஆதாரம்.

3. சகோதரரின் பகுதி 2 இற்கான விமர்சனம்

4. சர்வதேசப் பிறையிலே உள்ள சிக்கல்கள்

5. அறபு மொழித் தொகுப்பின் தமிழாக்கம்.

[1] ஏன் நாம் யஹ்யா சில்மியை பொய்யன் என்று சொல்கிறோம் - என்று சிலர் ஆச்கரியப்படலாம். ஆனால் உண்மை அது தான். அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதும் உலமாக்கள் மீதும் இட்டுக்கட்டான செய்திகளை சொல்லி அதற்காக வாதாடி இதுவரை தவ்பாவைப் பகிரங்கப்படுத்தவில்லை. எனவே இப்படியானவர்களின் தகவலை உறுதிப்படுத்தாது நம்புவது ஹராமாகும். இதனை எந்த இடத்திலும் நிரூபிக்க நாம் தயாராகவே இருக்கிறோம். (அல்லாஹ் அவருக்குத் தகுதியானதைக் கொடுக்கட்டும்). மேலதிக விபரங்களுக்கு “இஸ்லாம் கூறும் அடிமைப் பெண்கள் இன்றும் உள்ளனரா?” என்ற எமது மறுப்பு VCD களைப் பார்க்கவும்.

## பகுதி - 1

### ஐந்து குற்றச்சாட்டுகளுக்கான தெளிவும் சகோதரரின் தொகுப்பில் காணப்படும் ஏனைய தவறுகளும்.

அவரது பதிலில் பின்வரும் குறைப்பாடுகள் காணப்படுகின்றன.

1. எமது தொகுப்பில் உள்ள சில விடயங்களை கண்டு கொள்ளாமை
2. நாம் சொல்லாததை சொன்னதைப் போன்று சித்தரிக்கும் வார்த்தைகள்
3. எமது தலைப்பிற்கு சம்பந்தமில்லாத விடயங்களை குறிப்பிடுதல்
4. முரண்பாடற்றதை முரண்பாடாக காட்டுதல்
5. மேலும் சில தவறான குற்றச்சாட்டுகள்

அவருடைய ஆக்கத்தை அலசுவதற்கு முன்னால் ஒரு விடயத்தை சுட்டடிக்காட்ட விரும்புகிறேன். அதாவது எமது தொகுப்பில் எந்த ஒரு இடத்திலும் நாம் சர்வதேசப் பிறையையோ உள்நாட்டுப் பிறையையோ சரிகாணவோ பிழைகாணவோ இல்லை. சர்வதேச பிறையை ஆதரிப்பவர்களானாலும் உள்நாட்டுப் பிறையை ஆதரிபவர்களானாலும் தம்முடன் வாழும் மக்கள் எந்த கருத்தை நடை முறைப்படுத்துகிறார்களோ அதற்கு அவர்கள் மாற்றம் செய்யக்கூடாது என்பதையே வலியுறுத்தியுள்ளோம். உதாரணமாக இலங்கையில் மக்கள் உள்நாட்டுப் பிறை அடிப்படையில் செயல்படுவதால் நாமும் உள்நாட்டுப் பிறை அடிப்படையில்செயல்பட வேண்டும். இலங்கை மக்கள் சர்வதேசப் பிறையை நடைமுறைப்படுத்தினால் அதை நாமும் நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதே எமது நிலைபாடாகும். தற்காலத்தில் சர்வதேசப் பிறையை ஆதரிக்கின்ற அறிஞர்களும் உள்நாட்டுப் பிறையை ஆதரிக்கின்ற அறிஞர்களும் நடைமுறையில் வேறுபடக்கூடாது என்றே கூறியுள்ளனர் என்பதையே விளக்க முற்பட்டோம்.

இப்போது சகோதரருடைய ஆக்கத்தை அலசுவோம். சர்வதேசப் பிறை பற்றிய விமர்சனத்திற்கான பிதில் என்று சகோதரர் தனது மறுப்பிற்கு தலைப்பிட்டிருக்கின்றார். இதனை படிக்கின்ற சிலர் எமது அரபு மொழித் தொகுப்பு, சர்வதேசப் பிறை என்ற கருத்தை விமர்சிப்பதாக கருதலாம். அப்படி யாராவது நினைத்தால் அது தவறாகும். சர்வதேச பிறையா உள்நாட்டு பிறையா சரியனது? அல்லது தவறானது? ஓவ்வொன்றுடையவும் ஆதாரங்கள் என்ன? ஒவ்வொன்றிலும் உள்ள நடைமுறைச் சிக்கள்கள் என்ன? போன்ற விடயங்களை நாம் அத்தொகுப்பில் அலசவில்லை. அத்தொகுப்பை அப்போதே தமிழில் சற்று சுருக்கமாக மொழி பெயர்த்து வெளியிடாமல் வைத்திருந்தோம். இப்போது அதனையும் இந்த ஆக்கத்தின் இறுதிப்பகுதியாக இணைத்துள்ளோம்.

***“இத்தொகுப்பில் பிறைபார்ப்பது சம்பந்தமாக வந்துள்ள ஹதீஸ்கள் அளசப்படவில்லை. சகோதரருடைய தொகுப்பில் ஹதீஸ்களை ஆராய்வது உள்ளடக்கப்படவில்லை என்பதாலும் அத்தகைய வேளைக்கு தற்போதைய நிலமை நேரம் தறமாட்டாது என்பதாலும் அதனை இங்கு தவிர்த்துக் கொள்கிறேன்.”*** என்று மௌலவி சில்மி குறிப்பிடுகிறார்.

*எமது விளக்கம்:*

நாம் பிறைப்பார்ப்பது பற்றிய ஹதீஸ்களை ஆராயவில்லை என்று அவர் கருதினால் அது சரியானது தான் ஏனெனில் அது எமது தலைப்பிற்கு உட்பட்டதல்ல. சகோதரருடைய தொகுப்பில் ஹதீஸ்களை ஆராய்வது உள்ளடக்கப்படவில்லை என்று அவர் சொல்வதன் மூலம் பொதுவாக எந்த ஹதீஸ்களையும் நாம் ஆராயவில்லை என்று அவர் கருதினால் அது தவறாகும். ஏனெனில் எமது நிலைப்பாட்டைக் கூறக்கூடி “நீங்கள நோன்பு நோற்கும் நாளில் தான் நோன்பு; நீங்கள் பெருநாள் எடுக்கும் நாளில் தான் பெருநாள்” என்ற ஹதீஸை நாம் குறிப்பிட்டு அதனை அல்பானி (ரஹ்) அவர்கள் சரிகண்டுள்ளதாகவும் அதற்கு அவர் வழங்கிய விளக்கத்தையும் குறிப்பிட்டுள்ளோம்.

சகோதரர் எமது தொகுப்பிற்கு ஐந்து பதில்களை குறிபிட்டுள்ளார் அவையே அவர் எம்மீது வைக்கும் குற்றச்சாட்டுகளும் கூட. முறையே ஒவ்வொரு பதிலையும் அலசுவோம்.

சில்மி மௌலவியின் பதில்- 1

***“பதில் 1 : சர்வதேசப் பிறையை சரிகாணும் அறிஞர்கள் தமது கருத்தை அமுல்படுத்துவது குறித்து கூறியது என்ன? என்ற தலைப்பில் சகோதரரின் தொகுப்பு இருந்தும் அல்பானி, இப்னு பாஸ் போன்ற ஒரு சில அறிஞர்களின் நிலைப்பாட்டை மாத்திரம் கூறுவதை எவ்வாறு நோக்கலாம்? ஏனைய பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துக்களை அறியவில்லையா? அல்லது எவ்வித விதிவிலக்குமின்றி சர்வதேசப்பிறையை சரிகாணும் அவர்களது கருத்துக்களையும் முன்வைத்தால் வாதம் பிழைத்து விடும் என்பதாலா?”***

*எமது விளக்கம்:*

இந்த வாதம் அர்த்தமற்றதாகும். சர்வதேசப் பிறையை சரிகாணும் அறிஞர்களில் இன்னும் பலர் தமது கருத்தை நடைமுறைபடுத்துவது சம்பந்தமாக இதே கருத்தை தான் கூறியிருக்கிறார்கள். அவர்களில் முக்கியமான ஓரிருவரின் கருத்துக்களை மேற் கோள் காட்டினால் போதுமானது. அவர்கள் அணைவருடைய வார்த்தைகளையும் கூறவேண்டிய அவசியமில்லை.

ஒரு நாட்டில் பெரும்பாலான மக்கள் உள்நாட்டுப் பிறையை நடைமுறைப்படுத்தும் போது அவர்களைப் பிரிந்து சர்வதேசப் பிறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று யாராவது கூறியுள்ளார்களா? அப்படி இருந்தால் தான் உங்கள் கேள்வி நியாயமானது அப்போது தான் சில அறிஞர்களின் நிலைப்பாட்டை விட்டு விட்டு ஒரு சில அறிஞர்களின் நிலைப்பாட்டை நாம் கூறியதாக குற்றம் சாட்ட முடியும்.

எவ்வித விதிவிலக்குமின்றி ஒரு அறிஞர் சர்வதேசப் பிறையே சரியானது என்று கூறினால் அதிலிருந்து ஒரு பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கு மாற்றமாக இருந்தாலும் ஒரு சிலர் மாத்திரம் இந்தக் கருத்தை நடைமுறை படுத்தலாம் என்று விளங்க முடியாது. ஏனெனில் அவர்கள் அதைப்பற்றிப் பேசவில்லை. அது ஒரு தனியான பிரச்சினையாகும். அறிஞர்கள் சர்வதேசப் பிறையா? உள்நாட்டுப் பிறையா? என்று பேசும் போது அவர்கள் ஆதரிக்கும் கருத்தை சொல்லிவிட்டுச் செல்வார்கள். நடைமுறையில் தாங்களுக்கு மாற்றமான கருத்தே தம்முடன் இருக்கும் பெரும்பாலானவர்களால் நடைமுறைப் படுத்தப்படுகிறது என்று வினவப்பட்டால்

அல்லது அதைப்பற்றி அவர்கள் ஆராய்ந்தால் அந்த நேரத்தில் அவர்கள் சொல்லும் பதிலே எமது ஆய்வுக்குறிய விடயமாகும். அப்படியான கட்டத்திலும் கூட்டத்தோடு சேராமல் பிளவு பட்டு செயல்படுமாறு அவர்கள் கூறியிருக்கிறார்களா? என்பதே எமது கோள்வியாகும். உதாரணமாக இப்னு பாஸ் (ரஹ்) அவர்களிடம் சர்வதேசப் பிறை சரியானதா? அல்லது உள்ளநாட்டு பிறை சரியானதா? என்று கேட்டால் சர்வதேசப்பிறையையே அவர் ஆதரிப்பார். ஆனால் நடைமுறையில் பெரும்பாலான மக்கள் உள்நாட்டுப்பிறையே நடைமுறை படுத்துகிறார்கள்? என்று வினவப்படும் போது அப்படியான சூழ்நிலையில் தம்முடன் இருக்கும் மக்களுடன் சேர்ந்து நோன்பு நோற்க வேண்டும் பெருநாள் எடுக்க வேண்டும் என்று கூறுவார். இவ்வாறு தான் அவர்கள் கூறியிருப்பதை அவருடைய பத்வாக்களில் காணலாம். அவ்வாறு தான் அல்பானி (ரஹ்) அவர்களும் சர்வதேசப் பிறை என்ற தனது கருத்தை மிகவும் வலியுறுத்தி கூறினார்கள். நடைமுறையிலே உள்ள பிரச்சினையை அவதானித்த போது சர்வதேசப் பிறையை தனிநபர்கள் நடைமுறைப்படுத்தி ஒரே சமூகத்திற்குள் பிளவுபடுவது இஸ்லாத்திற்கு மாற்றமானது என்பதை விளக்கியுள்ளார்கள்.

சில்மி மௌலவியின் பதில்- 2

***“பதில் 2: இஸ்லாமிய உலகில் வாழ்ந்து மறைந்த பெரும்பான்மை அறிஞர்கள் உலகில் ஏதாவது ஒரு இடத்தில் பிறை தென்பட்டால் அனைத்து முஸ்லிம்களும் அதனைப்பின்பற்ற வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளார்கள் என்றும் இமாம் அல்பானி, இப்னு பாஸ் போன்றோரின் கருத்தைப் போன்று தற்காலிகத் தீர்வை அவர்கள் எவரும் கூறவில்லை என்பது பிக்ஹு கிதாபுகளைப் புரட்டி பார்க்கின்றவர்களுக்கு வெளிச்சமாகும். தேவைப்படுகின்றவர்களுக்கு பின்வரும் கிதாபுகளை சுட்டிக்காட்டுகின்றோம்.***

1. ***அர்ரத்துல் முஹ்தார் அலத் துர்ரில் முக்தார் (2/393)***
2. ***கவானீன் அல் அஹ்காமிஷ்ஷரஇய்யா (134 - 135)***
3. ***காயத்துல் முன்தஹா பில் ஜம்இ பய்னல் இக்னா வல் முன்தஹா (1/319-320)***
4. ***கஷ்ஷாபுல் கினா (1/504)***
5. ***அல் முக்னீ (3/87-88)***
6. ***அல் மஜ்மூ.். ஷர்ஹுல் முஹத்தப் (6/247)***
7. ***நய்லுல் அவ்தார் (3/189)***
8. ***அர்ரவ்ளதுன் நதிய்யா (1/224-225)***
9. ***மஜ்மூஉ பதாவா இப்னு தைய்மியா (25/62-67)***
10. ***தமாமுல் மின்னா (398)***
11. ***பிக்ஹுஸ் ஸுன்னா (323)***
12. ***பதாஇஉஸ்ஸனாஇ.். (2/83)***
13. ***பத்ஹுல் கதீர் (இமாம் கமால் இப்னுல் ஹமாம்) (2/313)***
14. ***அத்தகீரா (2/490)***
15. ***அல் இன்ஸாப் (3/193)***
16. ***மஜல்லதுல் முஜம்ம.். அல்பிக்ஹு (2/1085-3)”***

*எமது விளக்கம்:*

சகோதரர் தனது முதலாவது பதிலின் ஆதாரத்தையே இரண்டாவது பதிலில் விளக்கியுள்ளர். முதலாவது பதிலுக்கு நாம் அளித்த விளக்கமே இரண்டாவது பதிலின்

விளக்கமாகும். இஸ்லாமிய உலகில் வாழ்ந்து மறைந்த பெரும்பான்மை அறிஞர்கள் உலகில் ஒரு இடத்தில் பிறை தென்பட்டால் அணைத்து முஸ்லிம்களும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதற்கும் எமது பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை. அவர்களுடைய கருத்திற்கும் அல்பானி, பின் பாஸ் ஆகியோரின் கருத்துகளுக்குமிடையில் முரண்பாடும் இல்லை. இவ்விரு அறிஞர்களும் அவ்வறிஞர்களின் கருத்தையே சொல்லியுள்ளர்கள். இவ்விரு அறிஞர்களும் இன்னும் பல தற்கால அறிஞர்களும் பேசக்கூடிய வித்தியசமான ஒரு நடைமுறை பிரச்சினைப் பற்றியே எமது தொகுப்பு பேசுகிறது.

முற்கால அறிஞர்கள் இந்தப்பிரச்சினை பற்றி பேசவேண்டிய அவசியம் இருக்கவில்லை. பெரும்பாலும் அவர்கள் இஸ்லாமிய கிலாபத்துகளின் கீழ் வாழ்ந்தார்கள். பிறை விடயத்தில் எந்தக் கருத்துடைய அறிஞர்களாக இருந்தாலும் இஸ்லாமிய அரசாங்கத்தின் தீர்ப்பையே நடைமுறைப்படுத்தியிருப்பார்கள். அதே போன்று பெரும்பாலும் மக்கள் மத்ஹப்களை பின்பற்றியே வாழ்ந்தார்கள். தாங்கள் பிரதேசத்தில் உள்ள மத்ஹப்களின் தீர்ப்பையே அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் இன்று தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து விட்டதாலும் முஸ்லிம்கள் அதிகமாக இஸ்லாமிய ஆட்சி இல்லாத பிரதேசங்களில் வாழ்வதாலும் ஓரிடத்தில் பிறை கண்ட தகவல் உடனுக்குடன் ஏனைய பிரதேசங்களுக்கு கிடைத்து விடுவதால் அதை நடைமுறைப்படுத்த சர்வதேசப் பிறையை ஆதரிப்பவர்கள் முயற்சிக்கின்றனர். அப்பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மை மக்கள் உள்நாட்டுப் பிறையை ஆதரிக்கின்றவர்களாக இருப்பதால் அங்கே ஒரே ஊரில் ஒரே வீட்டில் வெவ்வேறு நாடுகளில் பெருநாள் கொண்டாடும் நிலமை ஏற்படுகின்றது. இந்தப்பிரச்சினையைப் பற்றியப் பேசும் போது தான் சர்வதேசப் பிறையை ஆதரிக்கும் அறிஞர்கள் கூட பிளவுபடக்கூடாது; பெரும்பான்மை மக்களின் தீர்ப்புக்கு மாறுபடக்கூடாது என்று கூறுகின்றனர். இப்பரச்சினை முற்காலத்தில் இருக்கவில்லை.

சகோதரர் தனது வாதத்திற்கு ஆதாரமாக 16 நூற்களை குறிப்பிட்டுள்ளர். பெரும்பான்மை அறிஞர்கள் சர்வதேசப் பிறையை ஆதரிக்கின்றனர் என்று இந்த நூற்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதற்காக அவற்றை அவர் பட்டியலிடபப்டிருக்கலாம். இதற்கு பதினாறு அல்ல நூற்றுக்கணக்கான நூற்களையும் பட்டியலிடலாம். இதுவல்ல அவர் செய்யவேண்டியது. மாறாக தம்மோடு வாழும் பெரும்பான்மை சமூகத்திற்கு மாற்றமாக இருந்தாலும் சர்வதேசப் பிறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறக்கூடிய ஒரு நூலையாவது காட்டியிருக்க வேண்டும். அவர் குறிப்பிட்ட 15 நூற்களில் எமது பிரச்சினை பற்றி கூறப்பட வில்லை.

ஒரு இடத்தில் பிறைகண்ட சாட்சியத்தை இஸ்லாமிய ஆட்சியாளர் ஏதோ ஒரு காரணத்தால் ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிறைப் பார்த்தவர்கள் தனித்து விடாமல் ஆட்சியாளரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு அனைத்து மக்களோடும் நோன்பை நோற்க வேண்டும் என்பதை சகோதரரும் ஏற்றுக் கொள்கிறார். இப்போது நாம் அவரிடம் கேட்பது நீங்கள் பட்டியலிட்ட கிதாபுகளில் ஒரு இடத்தில் பிறை கண்டால் அனைத்து முஸ்லிம்களும் அதனைப் பின்பற்ற வேண்டும் என பெரும்பான்மை அறிஞர்கள் கூறியிப்பதாக எவ்வித விதிவிலக்கும் இன்றி உள்ளதல்லவா? ஆட்சியாளருக்கு கட்டுப்பட்டு பிறை கண்ட பிறகும் நோன்பு பிடிக்கக்கூடாது என்பதை அங்கே அவர்கள் விதிவிலக்கு செய்யவில்லையே? அதற்கு சகோதரர் சொல்லும் பதிலென்ன? ஆட்சியாளர்கள் இது போன்ற விடயங்களில் அசட்டையாக நடந்து கொண்டாலும் அவர்களுக்கு எதிராக கிளர்ந்தெழாமல் கட்டுப்பட்டு இஸ்லாமிய சமூகத்தின் ஒற்றுமையையே கவனத்திற்கொள்ள வேண்டும் என்பது இஸ்லாத்தின் அழகிய

வழிகாட்டலாகும் என்று தான் சகோதரர் பதில் சொல்வார். அப்படித்தான் பதில் 5 இல் குறிப்பிட்டும் இருக்கிறார்.

ஆட்சியாளருக்கு கட்டுப்பட்டு உள்ளநாட்டு பிறையை நடை முறைப்படுத்துவது, எப்படி சர்வதேசப் பிறையை ஆதரிக்கும் அறிஞர்களின் கருத்திற்கு முரணில்லையோ அதே போன்று தான் ஒரு சமூகத்தின் பெரும்பான்மையினர் உள்நாட்டுப் பிறையை நடைமுறைப்படுத்தும் போது சிலர் மாத்திரம் சர்வதேச பிறையை நடை முறைப்படுத்தக் கூடாது என்பதும் சர்வதேசப்பிறையை ஆதரிக்கும் அறிஞர்களின் கருத்திற்கு முரணில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

பல அறிஞர்கள் சரவதேசப்பிறையை பின்பற்ற வேண்டும் என்று கூறியதற்கும் ஆட்சியாளர் அதை ஏற்றுக்கொள்ளாத போது நாம் அதை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று அவர்களில் சிலர் கூறியதற்கும் எவ்வாறு முரண்பாடு இல்லையோ அதேபோன்று தான் பலர் சரவதேசப் பிறையை பின்பற்ற வேண்டும் என்று கூறியதற்கும் பெரும் பான்மை மக்கள் அதை ஏற்றுக்கொள்ளாத போது நாம் அதை நடைமுறைபடுத்தக் கூடாது என்று அவர்களில் சிலர் கூறியதற்கும் முரண்பாடு இல்லை.

உதாரணமாக சர்வதேச பிறையை ஆதரிப்பவர்கள் அவர்களின் இஸ்லாமிய ஆட்சியளர் உள்நாட்டுப் பிறையை நடைமுறைப்படுத்துபவராக இருந்தால் ஆட்சியாளரின் கருத்தையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சர்வதேசப்பிறையை ஆதரிக்கும் அறிஞர்கள் கூறியுள்ளார்கள் என்ற கருத்தில் ஒருவர் ஒரு தொகுப்பைத் தயாரித்தார் என்று வைத்துக்கொள்வோம். சர்வதேசப் பிறையை ஆதரிக்கும் எந்த ஒரு அறிஞரும் ஆட்சியாளருக்கு கட்டுப்பட தேவையில்லை என்று கூறவில்லை என்றும் அவர்களில் பெரும்பாலானவர்கள் அதைப்பற்றியே பேசவில்லை என்றும் வைத்துக் கொள்வோம். ஏன் எவ்வித விதிவிலக்கு மின்றி சர்வதேசப் பிறையை சரிகாணும் அறிஞர்களின் கூற்றுக்களை முன்வைக்கவில்லை? உங்கள் வாதம் பிழைத்து விடும் என்பதாலா? என்று அதை தொகுத்தவரிடம் கேள்வி எழுப்ப முடியுமா? அப்படி அவர் வினவப்பட்டால் சர்வதேசப் பிறையை ஆதரிக்கும் அறிஞர்களில் எவராவது ஆட்சியாளருக்கு கட்டுப்பட தேவையில்லை என்று கூறியுள்ளாரா? என்று தான் திருப்பி கேட்பார். இல்லை அவர்களில் பெரும் பாலானவர்கள் அதைப்பற்றிப் பேசவில்லை; சர்வதேசப் பிறையை பின்பற்ற வேண்டும் என்று விதிவிலக்கின்றி கூறியுள்ளார்கள் என்பது பதிலாக அமையாது. ஏனென்றால் இது ஒரு தனியான பிரச்சினையாகும்.

சிலர், சகோதரர் மேற்கோள் காட்டிய கிதாபுகள் அனைத்தும் சர்வதேசப் பிறையை ஆதரிக்கின்றவை என்று நினைத்தால் அது தவறாகும். அவற்றில் அல்மஜ்மூ∴, பிக்ஹுஸ் ஸுன்னா, பதாஇஉஸ்ஸனாஇ∴ ஆகியவை, சர்வதேசப் பிறைக்கு மாற்றமான கருத்தை ஆதரிக்கின்றன. அவற்றில் தமாமுல் மின்னா என்ற அல்பானி (ரஹ்) அவர்களின் நூல் சர்வதேசப்பிறையை அடித்துக் கூறுகின்றன அதே வேளை எமது பிரச்சினையான உள்நாட்டுப் பிறையை நடைமுறைப் படுத்தும் சமூககத்தில் சர்வதேசப் பிறையை நடைமுறைப் படுத்தி பிளவு படக்கூடாது என்று கூறுகிறது.

அதே போன்று “அல்முஜம்ம∴ அல்பிக்ஹீ” என்ற முக்கிய பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்மானம் எடுக்கும் இஸ்லாமிய அறிஞர் சபையின் சஞ்சிகையையும் குறிப்பிட்டுள்ளர். விபரம் தெரியாதவர்கள் மேற்படி அறிஞர் சபையும் சர்வதேசப்பிறையை தான் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கூறுவதாக கருதக் கூடும். அப்படி தவறாக புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக அச்சபையின்

தீர்மானத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகக் கருதுகிறேன். அச்சபையின் 16(7/4) என்ற தீர்மானத்தின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. “இஸ்லாமிய உலகில் பிறைகளையும் பெருநாட்களையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்பதற்கு அழைப்பு விடுவது அவசியமில்லை. இக்கருத்தை ஆதரிக்கின்ற அதிகமானவர்கள் ஊகிப்பதைப் போன்று (அப்படி ஒன்றுபடுவது) முஸ்லிம்களின் ஒற்றுமையை உறுதி செய்யப்போவதில்லை. இப்பிரச்சினையை இஸ்லாமிய நாடுகளில் உள்ள பத்வா மற்றும் நீதி வழங்கும் நிறுவனங்களிடம் விட்டுவிட வேண்டும். அதுவே இஸ்லாமிய பொது நலனுக்கு ஏற்றதாகும். உம்மத்தை ஒற்றுமை படுத்தி அவர்களுக்கு மத்தியிலேயே கருத்தொற்றுமையை உறுதி செய்வது யாதெனில் அவர்கள் தாங்கள் அனைத்து விடயங்களிலும் குர்ஆன், சுன்னாவைக் கொண்டு செயல்படுவதற்காக ஒற்றுமைப்படுவதாகும்.” மேற்படி தீர்மானத்தில் அப்துல்லாஹ் இப்னு ஹுமைத், முஹம்மத் அலி ஹரகான், இப்னு பாஸ், முஹம்மத் ருஷைதி, முஹம்மத் அஸ்ஸபீல், ஹஸனய்ன் மஹ்லூப், முஹம்மத் ரஷீத், உஸைமீன், அப்துல் முஹ்ஸின் அல்-அப்பாத், முஹம்மத் ஷாதுலி, மஹ்மூத் ஸவ்வாப், அப்துல் குத்தூஸ் ஹாஷிமி, மப்ரூக் அவாதி ஆகிய அறிஞர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

எனவே இவ்வரிஞர் சபையும் பிறை விடயத்தை ஆளுக்காள் கையில் எடுத்துப் பிளவு படக்கூடாது; அது அறிஞர்களிடமும் இஸ்லாமிய நீதிமன்றங்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்பதை வழியுறுத்தியுள்ளார்.

சில்மி மௌலவியின் பதில்- 3

***“பதில் 3: இமாம் அல்பானியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முனைந்த போது அவரது கூற்றின் கடைசிப் பகுதியை மாத்திரம் எடுத்துக் கொண்டு முன்பகுதி விடப்பட்டிருப்பது அவரின் பூரண நிலைப்பாடாக அமைய முடியாது. இஸ்லாமிய நாடுகள் ஒன்று சேறும் வரை ஒவ்வொரு நாட்டு மக்களும் தத்தமது நாட்டுடன் நோன்பை நோற்றுக் கொள்ளட்டும் என்ற அவரது கருத்தின் முன்னால் “அனைத்து நாடுகளுக்கும் ஒரே பிறைதான் என்பதே சத்தியமாகும். அது அல்லாத வேரொன்று சரியாக முடியாது. ஒவ்வொரு நாட்டுக்கும் பிறை காண வேண்டுமென்பது பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு மாற்றமானதாகும். இவ்வாறு அனைத்து நாடுகளும் ஒரே பிறையை பின்பற்றுவது இன்று மிகவும் இலகுவான ஒன்றாகும். என்றாலும் அதனை யதார்த்தமாக மாற்றுவது இஸ்லாமிய நாடுகளின் கவனத்தை வேண்டி நிற்கின்றது” என்ற இந்த கூற்றைத் தொடர்ந்தே சகோதரர் குறிப்பிட்ட கூற்று அமைந்துள்ளது. ஒவ்வொறு நாட்டுமக்களும் தற்காலிகமாக தத்தமது நாட்டுடன் நின்று கொள்வதையே நான் கருதுகிறேன் என்பது எவ்வாறு அவரது நிலைப்பாடோ அவ்வாறே சர்வதேசப் பிறைதான் மாற்றுக்கருத்திற்கு இடமில்லாத சத்தியமாகும். அதனை சாத்தியப்படுத்தி வைக்க இஸ்லாமிய நாடுகள் கவனம் செலுத்த வேணடும் என்பதும் அவரது நிலைப்பாடென்பதை நாம்மறந்துவிடக்கூடாது. ஆனால் சர்வதேசப் பிறையை பிழை காணுகின்றவர்களது நிலைப்பாட்டிற்கும் இமாம் அல்பானியின் நிலைப்பாட்டிற்கும் மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்தியாசமென்பதை யாரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.”***

*எமது விளக்கம்:*

சகோதரர் இதையே **“சில அறிஞர்களின் கூற்றுக்களில் தேவையான பகுதி மாத்திரம் எடுக்கப்பட்டு ஏனையவை விடப்பட்டும்”** இருப்பதாக ஆரம்பத்தில் கூறி எம்மை குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்படி வார்த்தைகள் நாம் வேண்டுமென்றே சில பகுதிகளை மறைத்து விட்டதாக மற்றவர்களை ஊகிக்க செய்கின்றன. சகோதரரை அல்லாஹ் மன்னிக்கட்டும். அல்பானியின் (ரஹ்) கூற்றில் ஒரு பகுதியை மறைத்து நாம் இலாபமும் அடையப் போவதில்லை. எமது தலைப்பிற்கு உட்பட்ட விடயத்தையே நாம் குறிப்பிட்டோம். பிறை விடயத்தில் அல்பானியின் முழுமையான நிலைபாடு என்ன? என்பதோ அவர் பிறை விடயமாகப் பேசிய அனைத்துக் கருத்துக்களையும் தொகுப்பதோ எமது தலைப்பாக இருக்கவில்லை. ஓரே பகுதியில் சிலர் நோன்பும் சிலர் பெருநாளும் என்ற நிலை தவறானது என்பதே எமது தலைப்பிற்கு உட்பட்டதாகும். அல்பானி (ரஹ்) சர்வதேசப் பிறையை அடித்து சொல்லக்கூடியவர் என்று எமது தொகுப்பு கொடுக்கப்பட்ட மௌலவிகளுக்கு மாத்திரமின்றி அதிகமான பொது மக்களுக்கும் தெரிந்ததே. அதனால் தான் அவரின் கூற்றை முதலாவதாக குறிப்பிட்டோம் இத்தொகுப்பை பெற்றுக் கொண்ட மௌலவிகளில் எவரும் தமாமுல் மின்னாவை புரட்டிப்பார்க்க மாட்டார்கள் என்று நாம் கருதவில்லை. அதனால் தான் பக்கத்தையும் குறிப்பிட்டுள்ளோம்.

அதுமாத்திரமல்ல அப்பானி (ரஹ்) சர்வசேப் பிறையை கூறக்கூடியவர் என்று குறிப்பிட்ட பிறகு தான் அவரின் கூற்றை நாம் முன்வைத்துள்ளோம்.

சகோதரர் அல்பானி (ரஹ்) வின் கருத்தை பதில் 3இல் மொழிபெயர்த்துள்ளார் அதை அவர் முழுமையாக மொழிபெயர்க்கவில்லை முதல் இரு வசனங்களுக்கும் பிறகு பல வசனங்களை விட்டிருக்கிறார். எமது தொகுப்பில் குறிப்பிடப்பட்ட பகுதியையும் அவர் முழுமையாக மொழிபெயர்க்கவில்லை. இதனால் சகோதரரின் ஆக்கத்தை வாசிக்கும் அரபு மொழி தெரியாதவர்கள் அல்பானியின் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்றும் அவரின் கூற்றின் சில பகுதி விடப்பட்டிருப்பது அவரின் பூரண நிலைப்பாட்டாக அமையாது என்றும் நாம் விமர்சித்ததாக வைத்துக் கொள்வோம். அப்போது சகோதரர், சொல்லும் பதில் எப்படி இருக்கும்? அல்பானி (ரஹ்) அவர்கள் ஒரே சமூகத்திற்குள் பிளவுபட்டு ஒருவர் நோன்பும் மற்றவர் பெருநாளும் எடுக்கக்கூடாது என்று சொல்லியிப்பதை அவர் அவ்வாறு சொல்லவில்லை என்று நாம் மறுக்கவில்லை என்றும் அதை நாம் ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் தற்காலிகமாக தத்தமது நாட்டுடன் நின்று கொள்வதையே நான் கருதுகிறேன் என்ற அல்பானி (ரஹ்) வின் கூற்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளோம் என்றும் பதிலளிப்பார். இதே பதிலைத் தான் நாமும் அவருக்கு கூறுகிறோம். அப்பானி (ரஹ்) சர்வதேசப் பிறையை கூறக்கூடியவர்களில் ஒருவர் என்பதை நாம் மறுக்கவில்லை. அதுமாத்திரமின்றி அவர் அக்கருத்தை கூறுபவர் என்பதை தெளிவாக குறிப்பிட்ட பிறகு தான் எமது தலைப்புடன் சம்பந்தப்பட்ட அவரின் கூற்றை எடுத்துக்காட்டியுள்ளோம். அது பரவலாக அறியப்பட்ட விடயமுமாகும்.

அல்பானி (ரஹ்) அவர்கள் சர்வதேசப் பிறையை அடித்துச் சொல்லியிருக்கும் வார்த்தைகளை நாம் குறிப்பிடாமல் இருந்ததால் எமது கருத்து வலுப்பட்டு விடவில்லை. மாறாக அந்த அழுத்தமான வார்த்தைகளைக் குறிப்பிட்டு விட்டு எமது தலைப்புடன் சம்பந்தப்பட்ட விடயத்தைக் குறிப்பிடிருந்தால் எமது கருத்து இன்னும் அதிகமாக வலுப்பெறும். இந்த அளவு சர்வதேசப் பிறைக்கு அழுத்தம் கொடுத்த

இமாம் அல்பானி (ரஹ்) அவர்களே, நடைமுறையில் முரண்பட்டு கொள்ளக் கூடாது என்று கூறியிருக்கிறார்கள் என மக்கள் புரிந்து கொள்வார்கள்.

சர்வதேசப் பிறையை பிழை காணுகின்றவர்களது நிலைப் பாட்டிற்கும் இமாம் அல்பானியின் நிலைப்பாட்டிற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் என்ற சகோதரரின் கூற்றை நாமும் ஏற்றுக் கொள்கிறோம் அவ்விரு நிலைப்பாடுகளும் ஒன்று என்று நாம் கூறவில்லை. அதனால் தான் பிறைவிடயத்தில் முரண்பட்ட அறிஞர்கள் அது விடயத்தில் உடன்பட்டார்கள்? என்று தலைப்பிலேயே கூறியிருந்தோம். ஆனாலும் மலையிலே இருப்பவர் கூட இஸ்லாத்தின் நலனுக்காக மடுவிற்கு இறங்கி வர வேண்டும்; பெரிய விளைவை சிறிய விளைவால் தடுக்க வேண்டும் என்ற கருத்தை அல்பானி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

சில்மி மௌலவியின் பதில் - 4

***"பதில் 4: 14 நூற்றாண்டுகள் கடந்துவிட்ட இந்த சமுதாயம் ஒரே பிறையில் ஒன்றுபட்டதை நாம் அறிய முடியாது எனவே இந்த விடயம் இது வரைக்கும் எவ்வாறு இருந்ததோ அவ்வாரே இருப்பதை நாம் கருதுகிறோம் என்ற சவுதி அரேபியாவின் அறிஞர்கள் ஒன்றியத்தின் நிலைப்பாட்டையும் அதற்கு நேர்முரணான இமாம் அல்பானியின் மேற்சொல்லப்பட்ட நிலைப்பாட்டையும் ஒரே தொகுப்பில் ஒரே விடயத்திற்கு மேற் கோள் காட்டுவது முரண்பட்ட இரு கருத்துக்களையும் முரண்பாடற்ற கருத்துக்களாக காட்டுவதற்கு முனைவதாக இருக்கின்றது."***

*எமது விளக்கம்:*

பிறை விடயத்தில் சவுதி அரேபியாவின் பேரறிஞர் சபையின் ஒவ்வோர் அறிஞர்களின் நிலைப்பாடும் அல்பானியின் நிலைப்பாடும் ஒன்றே; அவற்றுக்கிடையில் எந்த முரண்பாடும் இல்லை என்று எமது தொகுப்பில் கூறப்படவே இல்லை. அவ்வறிஞர் சபையில் இமாம் இப்னு பாஸ் போன்ற சர்வதேசப் பிறை ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள். சர்வதேசப் பிறையை பிழை காணுகின்றவர்களும் இடம் பெற்றுள்ளார்கள். ஆனால் இவ்விரு முரண்பட்ட கருத்துக்களை உடைய அறிஞர்களும் ஒரு விடயத்தில் உடன்பட்டுள்ளார்கள் என்பதே எமது வாதமாகும். அதனால் தான் பிறைவிடயத்தில் முரண்பட்ட அறிஞர்கள் எது விடயத்தில் உடன்பட்டார்கள்? என்று தலைப்பில் குறிப்பிட்டோம். அதாவது சர்வதேசப் பிறையை சரிகாணும் ஒரு முஸ்லிம் தன்னுடன் வாழும் பெரும்பான்மை முஸ்லிம்கள் உள்நாட்டுப் பிறையை நடை முறைப் படுத்தும் போது நடைமுறையில் முரண்பட்டு விடாமல் அவர்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். அதே போன்று உள்நாட்டுப் பிறையை சரிகாணும் ஒரு முஸ்லிம் தன்னுடன் வாழும் பெரும்பான்மை முஸ்லிம்கள் சர்வதேசப் பிறையை நடைமுறைப் படுத்தும் போது நடைமுறையில் முரண்பட்டு விடாமல் அவர்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். அவ்விரு வேறுபட்ட கருத்துக்களையுடைய அறிஞர்களும் இந்த விடயத்தில் ஒற்றுமைபட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டவே எமது தொகுப்பு முயன்றுள்ளது.

"14 நூற்றாண்டுகள் கடந்து விட்ட இந்த சமுதாயம் ஒரே பிறையில் ஒன்று பட்டதை நாம் அறிய முடியாது. எனவே இந்த விடயம் இதுவரைக்கும் எவ்வாறு இருந்ததோ அவ்வாரே இருப்பதையும், இது பிரச்சனையாக்கப்படாமல் இருப்பதையும் ஒவ்வொரு இஸ்லாமிய நாட்டுக்கும், <u>மேற்படி இரு கருத்துக்களில் தன்னுடைய அறிஞர்கள் மூலமாக ஒரு கருத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது</u> என்பதையும் நாம் கருதுகிறோம். ஏனெனில் அவ்விரு கருத்துக்களில் ஒவ்வொன்றிற்கும்

ஆதாரங்கள் உள்ளன.” என்ற சவுதி அரேபியாவின் பேரறிஞர் சபையின் தீர்ப்பில் இருந்து ஒரு விடயம் தெளிவாகின்றது. அதாவது ஒரு நாடு மேற்படி இரு கருத்துக்களில் எதை நடைமுறைப் படுத்தினாலும் அங்குள்ள முஸ்லிம்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்; முரண்பட்டு தனித்து விடக்கூடாது. சர்வதேசப்பிறையை ஆதரிப்பவர் உள்நாட்டுப் பிறையை நடைமுறைப்படுத்தும் நாட்டில் முரண்பட்டு செயல்படுவது தவறானது என்ற இவ்வறிஞர்களின் கருத்திற்கும் சர்வதேசப் பிறை தான் சரியானது; அந்த கருத்தை ஒரு நாடு ஏற்றுக் கொள்ளத போது அந்த நாட்டு மக்கள் தங்களுக்குள் பிளவு பட்டு ஒருவர் தனது நாட்டுடனும் மற்றொருவர் வேறு நாட்டுடனும் நோன்பு பிடிப்பது கூடாது என்ற அல்பானி (ரஹ்) வின் கருத்திற்கும் இடையில் வேறுபாடு இருப்பதைப் போன்றே ஒரு உடன்பாடும் இருக்கிறது.

அது தான் தனது நாட்டில் நடைமுறைப்படுத்தும் கருத்துக்கு முரண்படக் கூடாது என்பதாகும். வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்ட அறிஞர்களும் உடன்பட்ட இந்த விடயத்திற்கு மேற்கோள் காட்ட மேற்படி இரு கருத்துக்களுடைய அறிஞர்களின் நிலைப்பாட்டையும் ஒரே தொகுப்பில் குறிப்பிடுவது தவறல்ல. முரண்பட்ட இரு கருத்துக்களையும் முரண்பாடற்ற கருத்துக்கலாக காட்டுவதற்கு நாம் முயல்வதாக சகோதரர் குற்றம் சாட்டுவது ஏற்றுக் கொள்ள முடியாத அர்த்தமற்ற வாதமாகும்.

ஒவ்வொரு முஸ்லிமும் தனது நாட்டுடன் நோன்பைப் பிடிப்பதும் விடுவதும் அவசியம் என்று நாம் தலைப்பில் குறிப்பிட்டதை மேற்படி இரு கருத்துக்களையுடைய அறிஞர்களும் உறுதி செய்துள்ளனர். இதனை முரண்பாடு என்று கூறுவது எந்த வகையில் நியாாமானது? (அல்லாஹ் போதுமானவன்)

சில்மி மௌலவியின் பதில் - 5

***“பதில் 5: இத்தொகுப்பிலே அறிஞர்களான ஸன்ஆனி, இப்னுல் கய்யிம், அபுல் ஹஸன் சின்தி, இப்னு தைய்மியா போன்றோரின் தீர்புகள் இடம் பெற்றுள்ளன. சாதாரண அறபுப் புலமையுள்ளவரால் கூட அத்தீர்ப்புகளுக்கும் எமது பிரச்சினைக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்பதை அறிந்து கொள்ளலாம். அவர்களது தீர்ப்பு இஸ்லாமிய ஆட்சி நடைபெறுகின்றபோது ஒரு இடத்தில் ஒரு முஸ்லிம் அல்லது ஒரு சில முஸ்லிம்கள் பிறை கண்டு ஏதோ ஒரு காரணத்தால் அதை இஸ்லாமிய ஆட்சியாளர் ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிறை பார்த்தவர்கள் தனித்து விடாமல் ஆட்சியாளரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு அனைத்து மக்களோடும் நோன்பை நோக்க வேண்டும் என்பது தான் அவர்களது கூற்றின் சாரம்சமாகும். இது பிறை விஷயத்தில் மாத்திரமல்ல தொழுகை, ஹஜ், ஜிஹாத் போன்ற விடயங்களில் ஆட்சியாளர்கள் அசட்டையாக நடந்து கொள்கின்றபோது அவர்களுக்கெதிராக கிளர்ந்தெழாமல் கட்டுப்பட்டு இஸ்லாமிய சமூகத்தின் ஒற்றுமையையே கவனத்திற்கொள்ள வேண்டும் என்பது இஸ்லாத்தின் அழகிய வழிகாட்டலாகும். இதற்கான ஆதாரங்கள் ஹதிஸ்களிலே தாராளமாக இருக்கின்றன விரிவஞ்சித் தவிர்த்துக் கொள்கின்றேன். சர்வதேசப் பிறையை சரிகாணுகின்ற நாமும் கூட மேற்கூறப்பட்ட இமாம்களின் தீர்ப்புக்களை மறுக்கவில்லை. ஆனால், இந்தத் தீர்ப்பை எமது பிரச்சினைக்குத் தீர்வாகக் கூறுவது மொட்டைத் தலைக்கும் முலங்காலுக்கும் முடிச்சுப்போடுவதாகவே இருக்கின்றது. மேற்சொல்லப்பட்ட அறிஞர்களில் ஒருவரான இமாம் இப்னு தைய்மியாவின் தீர்ப்பு அவரது மஜ்மூஉல் பதாவா என்ற நூலின் 25ம் பாகம் 67ம் பக்கத்தில் பதியப்பட்டுள்ளது. அதற்கு சற்று முன் சென்று 62ம் பக்கம் முதல் 67ம் பக்கம் வரை வாசித்தால் சர்வதேசப் பிறை தான் சரியென்பதை மிக அழகாக நிருவுவதைப்பார்க்கலாம்.”***

*எமது விளக்கம்:*

நாம் சம்பந்தமற்ற விடயங்களை குறிப்பிட்டு மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாக சகோதரரின் குற்றச்சாட்டு அமைந்துள்ளது. இது எந்த அளவு தவறான வாதம் என்பதைப் பார்ப்போம்.

1. ஸன்ஆனி, இப்னுல் கய்யிம், சின்தி ஆகிய அறிஞர்களின் கருத்தை நாம் நேரடியாகக் குறிப்பிட வில்லை. நாம் எமது கருத்துக்கு ஆதாரமாகக் கருதும் "நீங்கள் நோன்பு நோற்கும் நாளில் நோன்பு; நீங்கள் பெருநாள் கொண்டாடும் நாளில் பெருநாள்." என்ற ஹதீஸை அல்பானி (ரஹ்) சரிகண்டுள்ளனர் என்று கூறிவிட்டு அந்த ஹதீஸிற்கு அவர் அளித்திருக்கும் விளக்கத்தை குறிப்பிட்டோம். அந்த ஹதீஸின் விளக்கத்தில் தான் திர்மிதி, ஸன்ஆனி, இப்னுல் கய்யிம், சின்தி ஆகியோரின் கருத்துக்களையும் ஆயிஷா (ரலி) அவர்களின் விளக்கத்தையும் அல்பானி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

2. அவ்வறிஞர்களின் கருத்துக்கள் எமது தலைப்பிற்கு சம்பந்தமில்லாதவை என்பது தவறாகும். எமது தொகுப்பின் தலைப்புக்களில் "நோன்பு நோற்பதும் விடுவதும் கூட்டத்தோடும் அதிக மக்களோடும் தான் தனிப்பட்டவர்களோடு அல்ல." என்பதை குறிப்பிபட்டுள்ளோம். அந்த தலைப்பை மேற்படி அறிஞர்களின் கருத்துக்கள் உறுதி செய்கின்றன.

"நீங்கள் நோன்புபிடிக்கும் நாளில் தான் நோன்பு; நீங்கள் பெருநாள் எடுக்கும் நாளில் தான் பெருநாள்." என்ற ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு நாம் கண்ட பிறையை கூட ஆட்சியாளர் மறுத்து மக்களும் அதை நடைமுறைப்படுத்தாத போது நாம் பிளவு படாமல் மக்களுடன் சேர்ந்து ஒற்றுமையைக் கடைபிடிக்க வேண்டும் என்ற கருத்தில் அவ்வறிஞர்கள் விளக்கமளித்துள்ளனர். அதே ஹதீஸை ஆதாரமாக கொண்டு தான் மக்களுக்கு முரணாக சர்வதேசப் பிறையையோ உள்ளநாட்டுப் பிறையையோ அமுல்படுத்தக் கூடாது என்று நாமும் கூறுகிறோம். "நீங்கள் நோன்பு நோற்கும் நாள்" என்பது பெரும்பாலான மக்கள் நோன்பு நோற்கும் நாள் என்ற கருத்தில் அவ்வறிஞர்கள் விளக்கம் கொடுத்திருப்பது எமது பிரச்சினைக்கு சம்பந்தமே இல்லை என்பது சரிதான? பெரும்பான்மை மக்கள் என்பதன் மூலம் எம்மைச் சூழ உள்ள பெரும்பான்மை மக்களைத் தான் அவர்கள் குறிப்பிடுகிறார்களே தவிர சிலர் நினைப்பதைப் போல உலகப் பரும்பான்மையை அல்ல என்று விளங்குவதற்கு அவ்வறிஞர்களின் விளக்கம் உதவியக உள்ளது.

அத்தொகுப்பில் அந்த அறிஞர்களின் கூற்றுக்கள் கூறப்பட்டதில் இப்படிப்பட்ட பல நியாயங்கள் இருக்கும் போது அது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் செயல் என்று அதனை வர்ணிப்பதில் எந்த ஒரு நியாயமுமில்லை.

இப்போது இமாம் இப்னு தைமியாவின் கூற்றுக்கும் எமது தலைப்பிறைக்கும் என்ன சம்பந்தம் என்பதை பார்ப்போம். மேற்படி அறிஞர்களின் கருத்துக்கள் கூறப்பட்டதற்குறிய நியாயங்களில் 2 ஆவது மற்றும் 3 ஆவதாக நாம் குறிப்பிட்ட நியாயங்கள் இதற்கு பொருத்தமானவையாகும்.

ஒரு நகரத்தைச் சேர்ந்த சிலர் துல்ஹஜ் மாதத்தின் தலைப்பிறையைக் கண்டும் அதனை அந்நகர ஆளுனர் ஏற்றுக் கொள்ளாதபோது அவர்கள் கண்ட பிறையின் அடிப்படையில் பத்தாவது நாளாகவும் மக்களிடத்தில் வெளிப்படையாக ஒன்பதாவது நாளாகவுமிருக்கும் தினத்திலே அவர்கள் அரபா நோன்பு நோற்க வேண்டும் (அது

பெருநாள் தினமாக அமையாது) என்று இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். அதற்கு ஆதாரமாக நீங்கள் நோன்பு பிடிக்கும் நாளில் தான் உங்களுடைய நோன்பு அமைந்திருக்கும் .......'' போன்ற ஹதீஸ்களை ஆதாரம் காட்டியுள்ளார். இதனடிப்படையில் தான் அனைத்து முஸ்லிம் அறிஞர்களும் செயல்பட்டு வருகிறார்கள் என்று அவர் விளக்குகிறார்.

இப்னு தைமியா(ரஹ்)வின் இந்த கருத்து அவர் அந்த ஹதீஸை எவ்வாறு விளங்குகிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. எமது கருத்துக்கு நாம் ஆதாரமாக முன்வைக்கும் ஹதீஸிற்கு நாமாக விளக்கம் கொடுக்கவில்லை. அவ்வாறு தான் பல இடங்களில் சர்வதேசப் பிறையை பற்றி கூறியுள்ள இப்னு தைமியா(ரஹ்) அவர்களும் புரிந்து கொண்டார்கள். இதை சுட்டிக்கட்டுவது தலைப்பிற்கு முரணானதா?

''தலைப்பிறையை தீர்மானிப்பதற்கும் பொறுப்புச்சாட்டப்பட்ட தலைவர், நேர்மையான சாட்சியாளர்களின் சாட்சியத்தை, அவர்களின் நம்பகத் தன்மையை சரியாக அலசிப்பார்க்காமல் அல்லது அவருக்கும் அவர்களுக்கும் இடையில் இருக்கும் பகைமைக் காரணமாகவோ அல்லது மார்க்கத்தில் இல்லாத வேறு எந்தக் காரணத்திற்காகவோ அல்லது வானவியாளர் அன்றைக்கு பிறை தென்பட முடியாது என்று கூறியதைக் காரணமாக வைத்தோ மறுத்தாலும் அவரின் தீர்ப்பையே ஏற்றுக் கொள்ள வேண்டும் அவர் தவறிழைத்தாலோ திறக்குறைவு செய்தாலோ அது அவரையே சாறும் தவறிழைக்காத முஸ்லிம்களை அல்ல" என்பதையும் அங்கு இப்னு தைமியா(ரஹ்) விளக்கியுள்ளர். அது அதுமாத்திரமன்று வானவியல் அடிப்படையில் செயல்படுபவர் தவறிழைத்தவர்; பித்அத் செய்தவர்; வழிதவரியவர் என்று கடுமையாக விமர்சித்துக் கொண்டு செல்கிறார்.

இமாம் அவர்கள் வானவியல் அடிப்படையில் செயல்படுவதை கடுமையாக விமர்சித்த அதேவேளை வானவியல் அடிப்படையில் பொறுப்பாளர் தீர்மானம் எடுத்தால் அதனை மக்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லியிருப்பதில் சிலருக்கு பதில் இருக்கிறது. எமது நாட்டின் பிறைக் குழுவில் பித்அத்வாதிகள் இருக்கிறார்கள் அல்லது வானவியல் அடிப்படையில் இன்று பிறை தென்படுவது சாத்தியம் இல்லை என்று கூறப்படும் போது அதை ஏற்று பிறை கண்ட சாட்சியத்தை மறுக்கிறார்கள் போன்ற காரணங்களை முன்வைத்து சர்வதேசப் பிறையை பின்பற்றுவது நல்லது என சிலர் கூறுகின்றனர். ஆனால் பெரும்பான்மை முஸ்லிம் மக்கள் அக்குழுவை ஏற்று அதன் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதால் அவர்களுக்கு நாம் முரண்பட முடியாது என்பதும் எமது நிலைப்பாடாகும்.

இஸ்லாமிய ஆட்சி இல்லாத நாடுகளில் பிறை விவகாரத்தில் பெரும்பாலான முஸ்லிம்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற அமைப்பின் தீர்ப்பை முஸ்லிம்கள் ஏற்க வேண்டும் என்பதும் பல இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும். அக்கருத்தையே சவுதியின் ஆய்வுகளுக்கும் பத்வா வழங்குவதற்குமான அமைப்பின் தீர்ப்பும் கூறுகிறது. அத்தீர்ப்பையும் அரபு மொழித் தொகுப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம். அப்படி ஒரு பிறை குழுக்குழு இல்லாவிட்டாலும் கூட பெரும்பாலான மக்களுக்கு மற்றமாக பிறை விடயத்தில் பிளவுபடக் கூடாது என்ற எமது கருத்தை உறுதி செய்யவே இப்னு தைமிய(ரஹ்)வின் பத்வாவையும் அத்தொகுப்பில் குறிப்பிட்டோம். அது எமது பிரச்சினைக்கு சம்பந்தப்படவில்லை என்று சொல்ல முடியாது.

பிறை கண்ட தகவல் எங்கிருந்து கிடைத்தலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை இப்னு தைமியா(ரஹ்) அவர்கள் கொண்டிருந்தார்கள்

என்பதை நாம் மறுக்கவில்லை. அதைச் சுட்டிக்காட்டி விட்டுத்தான் அவரின் மேற்படி பத்வாவை இடம் பெறச் செய்துள்ளோம்.

சகோதரரின் மேற்படி ஐந்து பதில்களும் தான் அவர் எம்மீது வைத்த குற்றச்சாட்டுக்கள். ஆனால் எம்முடன் இருக்கும் மக்களுடன் நோன்பு நோற்று அவர்களுடன் பெருநாள் கொண்டாட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை உறுதி செய்யும் பல நியாயங்கள் மேற்கோள் காட்டப்பட்ட அறிஞர்களின் கூற்றுக்களில் கூறப்பட்டிருந்தன. அவற்றில் எதைப் பற்றியும் சகோதரர் பேசவில்லை.

அவற்றில் முக்கியமானது

1. ''நீங்கள் நோன்பு நோற்கும் நாளில் தான் நோன்பு; நீங்கள் பெருநாள் எடுக்கும் நாளில் தான் பெருநாள்'' என்ற நபி (ஸல்)அவர்களின் ஹதீஸாகும்.

மேலும் சில நியாயங்களும் குறிப்பிடப் பட்டுள்ளன.அவையாவன:

2. ''பெரிய விளைவைத் தவிர்ப்பதற்காக சிறய விளைவை செயற்படுத்துதல்'' என்ற இஸ்லாமிய சட்ட மூலாதார கலையின் விதி.

3. ''ஒரே சமூகத்திற்குள் கருத்து வேறுபாட்டின் வட்டத்தை விசாலப்படுத்துதல்''[2] (அதாவது முழு உலகத்தையும் ஒற்றுமைப்படுத்தும் நோக்கத்திற்காக சொல்லப்படும் கருத்து ஒரு ஊருக்குள்ளேயே பிளவை ஏற்படுத்துகின்றமை)

4. குழப்பம், வாக்குவாதத்தைத் தூண்டுதல், பிரச்சினைகள் ஏற்படுத்துதல் மற்றும் இஸ்லாம் போதிக்கும் உடன்படுதல், ஒற்றுமை, நல்ல காரியத்திலும் இறையச்சத்திலும் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைத்தல் போன்ற விடயங்களுக்கு முரணாக அமைதல்.[3]

5. இஸ்லாமிய அரசாங்கங்கள் இல்லாத நாடுகளில் பிறை விடயத்தில் அங்குள்ள பெரும்பான்மை முஸ்லிம்களால் அங்கீகரிக்கப்படும் பிறைக்குழுவின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளல்.[4]

6. நோன்பு, பெருநாள், ஜமாஅத் தொழுகை போன்ற ஒரு கூட்டு வணக்கத்தில் தனிப்பட்டவர்களின் கருத்தை, அது அவர்களின் பார்வையில் சரியாக இருந்தாலும் சரீஆ சட்டம் ஏற்றுக் கொள்ளாது.[5]

சகோதரர் எமது அரபு தொகுப்பின் குறைகளை ஆராய்ந்தது போன்றே, இல்லை அதைவிடவும் முக்கியமாக மாற்றுக்கருத்துடையவர்களின் ஆதாரங்களுக்கும் நியாயங்களுக்கம் பதில் கூறி தனது கருத்தைக் காப்பாற்றுவது அவரின் பொறுப்பாகும். ஆனால் அவரது ஆக்கத்தின் முதற்பகுதியில் எமகது பதில் கூறப்போவதாகக் குறிப்பிட்டு விட்டு எமது நிலைப்பாட்டிற்கான ஆதாரங்களையும், நியாயங்களையும் அவர் கண்டு கொள்ளவில்லை.

## பகுதி - 2

[2] மேற்படி இரு நியாயங்களையும் அல்பானி(ரஹ்) குறிப்பிட்டுள்ளார்கள்.
[3] இதனை இப்னு பாஸ்(ரஹ்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்
[4] இதனை சவுதியின் ஆய்வுகளுக்கும் பத்வா வழங்குவதற்குமான சபை சுட்டிக்காட்டியுள்ளது.
[5] இதனை அல்பானி(ரஹ்) சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

## எமது நிலைப்பாட்டிற்கான ஆதாரம்.

இப்போது எமது ஆதாரத்தை சற்று அலசுவோம் “நீங்கள் நோன்பு பிடிக்கும் நாளில் தான் நோன்பு; நீங்கள் நோன்பை விடும் நாளில் தான் நோன்பை விடுவதும் இருக்கிறது. (நீங்கள் நோன்புப் பெருநாள் எடுக்கும் நாளில் தான் நோன்புப் பெருநாள்) நீங்கள் உழ்ஹிய்யா கொடுக்கும் நாளில் தான் உழ்ஹிய்யா கொடுப்பது அமைந்திருக்கும். (நீங்கள் ஹஜ்ஜுப் பெருநாள் எடுக்கும் நாளில் தான் ஹஜ்ஜுப் பெருநாள்)” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

இந்த ஹதீஸின் நோக்கங்களில் நோன்பு, பெருநாள் ஆகிய இரு கூட்டு வணக்கங்களில் ஒன்றுபட்டு நடக்க வேண்டும் என்பது உள்ளடங்கி உள்ளது. “நீங்கள் நோன்பு பிடிக்கும் நாள், நீங்கள் பெருநாள் கொண்டாடும் நாள்” என்பது ஒரு சமூகத்தில் அவர்களுடன் வாழும் மக்களையே முதலில் குறிக்கின்றது என்பது எமது கருத்தாகும். இந்தக் கருக்கைப் பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதனால் தான் எமது பிரச்சினையைப் பற்றிப் பேசிய பல தற்கால அறிஞர்கள், அவர்களில் சர்வதேசப் பிறையை ஆதரிப்பவர்கள் கூட இந்த ஹதீஸை ஆதாரமாகக் காட்டி ஒரு சமூகத்தின் பெரும்பாலான மக்கள் இஸ்லாமிய அறிஞர்கள் காலாகாலமாக கருத்து வேறுபட்டுக் கொண்டிருக்கும் பிறை விடயத்தில் ஏதாவது ஒரு கருத்தை நடைமுறைப்படுத்தும் போது அச்சமூகத்தில் உள்ளவர்கள் அவர்களுக்கு ஒத்துப்போக வேண்டும்; பிளவு படக் கூடாது என்று கூறியுள்ளார்கள்.

இதே போன்று தான் இப்னு தைமியா(ரஹ்) போன்ற (ரஹ்)போன்ற பழைய அறிஞர்களும் எமது பிரச்சனைக்கு ஒப்பான பிரச்சினையான ஒரு ஊரின் நீதிதியால் பிறை கண்ட சாட்சியம் மறுக்கப்பட்டு அதைப் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொண்டு நடக்கும் போது பிறைக் கண்டவர்களும் அவர்களுடைய தகவலை அறிந்தவர்களும் தாம் கண்ட பிறை அடிப்படையில் செயல்படாமல் மக்களுடன் ஒத்துப்போக வேண்டும் என்பதற்கு மேற்படி ஹதீஸையே ஆதாரம் காட்டியுள்ளனர். அந்த ஹதீஸில் நீங்கள் என்று குறிபிடப்பட்டுள்ளது அவர்களுடன் வாழும் மக்களைக் குறிக்கின்றது என்று அவ்வறிஞர்கள் கருதியதால் தான் அவ்வாறு அவர்கள் தீர்ப்புக் கூறியுள்ளனர்.

அதே போன்று தான் ஆயிஷா(ரலி) அவர்களும் விளங்கியிருக்கிறார்கள் என்பதை பின்வரும் சம்பவம் எமக்கு தெளிவுபடுத்துகின்றது.

மஸ்ரூக்(ரஹ்) அவர்கள் கூறுகிரார்கள்: அரபா தினத்தில் ஆயிஷா(ரலி) அவர்களிடம் நான் சென்ற போது அவருக்கு “ஸவீகை” சாப்பிடக் கொடுங்கள் அதில் இனிப்பைஅதிகப்படுத்துங்கள் என்று கூறினார்கள். அதற்கு, நான் (அரபா) நோன்பு நோற்காமல் இருந்தது இன்று பெருநாள் தினமாக இருக்குமோ என்ற அச்சத்தால் தான் என்று கூறினேன். அப்போது ஆயிஷா(ரலி) அவர்கள் கூறினார்கள்: மக்கள் எந்த நாளில் அறுத்துப்பழியிடுகிறார்களோ அந்த நாளில் தான் ஹஜ்ஜுப் பெருநாள்; மக்கள் எந்த நாளில் நோன்பை விட்டு விடுகிறார்களோ அந்த நாளில் தான் நோன்புப் பெருநாள். (பைஹகீ)

மக்கள் என்று ஆயிஷா(ரலி) அவர்கள் குறிப்பிட்டது உலகத்தில் உள்ள மக்களையோ மக்காவில் உள்ள மக்களையோ அல்ல தங்களுடன் மதீனாவில் வாழும் மக்களைத் தான் என்பது சிந்தித்துப்பார்த்தால் விளங்கிக் கூடிய விடையமாகும்.

இன்று சிலர் ‘‘நீங்கள்’’ என்று ஹதீஸில் குறிப்பிடப்பட்டது உம்மத்தைக் குறிக்கம் என்று வாதிடுகின்றனர். நாம் கேட்கிறோம் இன்று முஸ்லிம் உம்மத் உலகில் இரண்டு, மூன்று நாட்களில் பெருநாளைக் கொண்டாடுகிறார்கள். இவர்கள் அனைவரும் முஸ்லிம் உம்மத்தைச் சேர்ந்தவர்கள் தான். காபிர்கள் அல்லர். அப்படியானால் இவர்களில் யாருடன் பெருநாளை எடுக்க வேண்டும்? முதலாம் நாளில் பெருநாள் எடுத்த கூட்டத்தோடு சேர வேண்டும் என்றால் இரண்டாம் மூன்றாம் நாட்களில் பெருநாள் எடுத்தவர்கள் உம்மத்தை சேர்ந்தவர்கள் இல்லையா?

இன்னும் சிலர் உலகில் வாழும் பெரும்பான்மை முஸ்லிம்களை குறிக்கும் என்ற வாதிடுகின்றனர். இதுவும் தவறான வாதமாகும். உலகில் பெரும்பான்மையான மக்கள், இரண்டு அல்லது மூன்று நாட்களில் எந்த நாளில் பெருநாள் எடுத்தார்கள் என்பதை உடனே அறிய முடியாது. முதலாவது அல்லது இரண்டாவது நாள் முடிந்த பிறகு தான் அறிய முடியுமே தவிர செயல் படுத்துவதற்கு முன்னால் அறிய முடியாது. ஒரு இடத்தில் பிறை கண்ட உடனே எத்தனை மக்கள் அதனை நடைமுறைப்படுத்தப் போகின்றார்கள் என்பதை உடனே கணக்கிட்டு சொல்லி விட முடியாது. அதே போன்று பிறை கண்ட நாட்டில் பெருநாள் ஆரம்பிக்கும் போது எத்தனையோ நாடுகள் அந்த நாளை அது வரைக்கும் அடையாமல் இருக்கலாம். அல்லது எத்தனையோ நாடுகள் அந்த நாளின் மாலைப் பொழுதில் இருக்கலாம். இப்படியான சூழ்நிலையில் எந்த நாளில் பெரும்பான்மை மக்கள் பெருநாள் எடுக்கப்போகிறார்கள் என்பதை உடனே கணக்கிட முடியாது. இதனால் இந்தவாதம் சாத்தியமற்றது.

சர்வதேசப்பிறையைப் பின்பற்றுகின்ற ஒரு சிலர் இந்த வாதத்தை வைப்பது ஆச்சரியமாக இருகின்றது. ஏனெனில் பொதுவாக சர்வதேசப் பிறைக்காரர்கள் முதல் நாளில் பெருநாள் எடுக்கிறார்கள். அதிகமான சந்தர்ப்பங்களில் இந்த நாளை விட இரண்டாம் நாளில் இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, பங்காளதேஷ் போன்ற நாடுகளில் வாழும் அதிகமான முஸ்லிம்கள் பெருநாள் எடுக்கின்றர். இவர்களின் வாதம் இவர்களின் செயலுக்கே முரண்படுகின்றது.

இன்னும் சிலர் ஹதீஸில் “நீங்கள்” எனக்குறிபிடப்பட்டது சரியான கருத்தைப் பின்பற்றுபவர்களைக் குறிக்கும் எனக் கூறுகின்றனர். இதுவும் தவறாகும்

1. நீங்கள் என்பது பொதுவாகத்தான் கூறப்பட்டுள்ளதே தவிர பலமான கருத்தைப் பின்பற்றுகின்ற நீங்கள் எனக் கூறப்படவில்லை.

2. சர்வதேசப் பிறையா? உள்நாட்டு பிறையா? என்ற கருத்து வேறுபாடு சஹாபாக்களின் காலத்தில் இருந்து பல நூற்றாண்டுகளாக மார்க்கப் பற்றும் அறிவுத் திறனும் உள்ள பேரறிஞர்களுக்கு மத்தியில் ஏற்பட்டு இன்று வரை தொடர்ந்து கொண்டிருகிறது. ஒவ்வொருவரும் தமது கருத்தே சரியானது என்று நம்புகிறார்கள். இப்படியான கட்டத்தில் சரியான கருத்தை கொண்டவர்களைத் தான் “நீங்கள்” என்ற வாசகம் குறிக்கும் என்றால் ஒவ்வொருவரும் தாம் தான் சரியான முடிவில் இருப்பவர்கள் என்று சொல்லிக் கொள்வர். அங்கே ஒரு ஒன்றுபட்ட பெருநாளோ ஒன்று நோன்போ ஏற்பட முடியாது. முஸ்லிம் சமூகம் பிளவு பட்டுக்கொண்டே இருக்கும். ஒவ்வொருவரும் தமது கருத்தை நடைமுறைப்படுத்துவர். இந்த ஹதீஸின் நோக்கமே அர்த்தமற்றதாகிவிடும். நோன்பு, பெருநாள் என்பது ஏனைய கருத்து வேறுபாடுகளைப் போல தனி நபர்களுடன் நின்று விடுவதில்லை. இது ஒரு சமூக, கூட்டு வணக்கமாகும்.

இரண்டு பக்கத்திலும் உள்ள அறிஞர்களும் தங்கள் சுய லாபத்திற்காக கருத்துகளை கூறவில்லை. ஒவ்வொருவரும் குர்ஆன் சுன்னாவில் இருந்து தமக்கு விளஙங்குகின்ற கருத்தைத்தான் கூறுயிருக்கிறார்கள். அப்படியானால் இது மார்க்கத்தில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட முடியுமான ஒரு பிரச்சினையாகும். இது மார்க்கத்தில் தெட்டத்தெளிவாகச் சொல்லப்பட்டகருத்து வேறுபாடே ஏற்பட முடியாத விடயமல்ல. இப்படியான விடயங்களில் நாம் கருதுவது தான் சத்தியம்; அடுத்தவர்களின் கருத்து வழிகேடு என்று கூறமுடியாது. எமது கருத்துத் தான் நூறு வீதம் உறுதியான எந்த ஒரு சந்தேகத்திற்கும் இடமில்லாத கருத்து என்று ஒரு கருத்தை நாம் சொல்வதாக இருந்தால் அதற்கு மாற்றமாக நடப்பது வழிகேடாகும். அதற்குறிய ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதைச் செய்பவர்கள் வழிகேடர்கள் என்று சொல்ல முடியுமானதாக இருக்க வேண்டும். மார்க்கத்தின் அடிப்படை கொள்கைகள் விடயத்தில் இப்படித்தான் நாம் நடந்து கொள்கிறோம். (فماذا بعد الحق إلا الضلال) சத்தியத்திற்குப் பிறகு வழிகேட்டைத் தவிர வேறில்லை என்று அல்லாஹ் கூறுகிறான்.

இது போன்ற பிக்ஹ் மஸாயில்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் ஒவ்வொருவரும் எது சரியானது என்று அறிந்து கொள்வதற்காக எடுக்கும் ஆய்வு முயற்சியினாலே ஏற்படுகின்றன. மனோ இச்சைக்கு அப்பால் நின்று ஆய்வு செய்து ஒருவர் சரியான முடிவுக்கு வந்தாலும் தவறான முடிவுக்கு வந்தாலும் அவருக்கு அல்லாஹ்விடம் கூலி கிடைக்கும். முடிவு சரியானதாக இருந்தால் இரண்டு கூலிகளும் தவறானதாக இருந்தால் ஒரு கூலியும் கிடைக்கும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இப்படியான கட்டத்தில் இரண்டு பிரிவினரும் சத்தியத்தைத் தேடுபவர்கள் தான் வழிகேடர்கள் அல்லர். அவர்களில் ஒருவரின் முடிவு தவறாக இருக்கலாம். அதனால் அவர் அசத்தியவாதியாகி விடமாட்டார். வழிகெட்டவராகமாட்டார். ஸலபுஸ்ஸாலிஹீன்களின் வழியில் நடக்கும் சத்தியத்தில் இருக்கும் வெற்றிபெற்ற கூட்டமான “அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாத்” என்னும் ஒரே கூட்டத்துக்குள் பிறைவிடயத்தில் கருத்து வேறுபாடு இருகின்றது என்றால் ‘‘நீங்கள்” என்ற ஹதீஸின் வாசகம் அவர்களில் யாரைக் குறிக்கின்றது? ஆய்வு செய்யத் தெரியாத பொதுமக்கள், அஹ்லுஸ்ஸுன்னாவைச் சேர்ந்த அறிஞர்கள் சொல்வதை எடுத்து நடப்பது கடமையாகும். அவர்களில் ஒருவர் ஒரு தீர்ப்பு மற்றொருவர் வேறொர் தீர்ப்பும் கொடுத்திருக்கும் போது ஒவ்வொரு பொதுமக்களும் அவரவருக்கு நம்பிக்கையான அறிஞர் சொல்வதை ஏற்றுக் கொள்வர். ஓவ்வொருவரும் “நீங்கள்” என்ற வாசகம் எங்களை குறிக்கிறது; நாங்கள் தான் சரியான முடிவில் இருக்கிறோம் என்று சொன்னால் முஸ்லிம் உம்மத்தின் நிலைமை எப்படி இருக்கும்?

இன்றைக்கு ஒருவர் நாளைக்கு ஒருவர் என்று பெருநாள் கொண்டாடுவார்கள்; ஒவ்வொருவரும் தாம் தான் சத்தியத்தில் இருப்பதாக வாதிடுவார்கள்; அஹ்லுஸ்ஸுன்னாவைச் சேர்ந்தவர்களின் ஒரே வீட்டுக்குள் தந்தைக்குப் பெருநாள் மகனுக்கு நோன்பு, கணவனுக்குப் பெருநாள் மனைவிக்கு நோன்பு என்ற நிலை ஏற்படும் இதை செயல்படுத்தவா நபி(ஸல்) அவர்கள் இந்த ஹதீஸை கற்றுத் தந்தார்கள்?

எந்த ஹதீஸ் ஒற்றுமையைக் நோக்கமாக கொண்டு சொல்லப்பட்டதோ அந்த ஹதீஸுக்குக்கு கொடுக்கப்படும் விளக்கம் அஹ்லுஸ் ஸுன்னாஹ் வல்

ஜமாஅத்தின் ஒற்றுமையை கூறுபோடுவதற்கு வழி வகுக்கிறது என்றால் அது சரியான விளக்கமாக இருக்க முடியுமா?

"நீங்கள்" என்ற வாசகம் சரியான முடிவில் இருப்பவரைக் குறிக்கிறது என்றும் பிறை விடயம் கருத்து வேறுபாடு ஏற்பட முடியுமானது என்றும் ஒருவர் ஏற்றுக் கொண்டால் அது எத்தகைய பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதைப் பார்த்தீர்கள். ஏனெனில் ஒருவர் ஒரு விடயத்தை கருத்து வேறுபாடு ஏற்பட முடியுமான விடயம் என்று ஏற்றுக் கொண்டால் அதில் அவர் மாற்றுக் கருத்துடையவரைப் பார்த்து நீங்கள் வழிகேட்டில் இருக்கின்றீர்கள் என்று சொல்ல முடியாது. அதற்கு காரணம் ஒவ்வொருவரும் தான் சரியான முடிவில் இருப்பதாக மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட ஆய்வின் மூலம் முடிவு செய்திருக்கிறார். இப்படியான சூழ்நிலையில் நீங்கள் என்ற வாசகம் எங்களுக்கு சொந்மானது என்று ஓவ்வொருவரும் உரிமை கொண்டாடுவதை தவிர்க்க முடியாது. ஆதனால் ஒரே நாளில் பெருநாள் ஒரே நாளில் நோன்பு என்பது சாத்தியமற்றதாகிவிடும். எனவே நிச்சயமாக இப்படியான விளைவை ஏற்படுத்தும் விளக்கத்தின் அடிப்படையில் நபி(ஸல்) அவர்கள் அதை கூறியிருக்க மாட்டார்கள்.

3. அல்லாஹ், மார்க்கத்தின் அடிப்படை விடயங்களில் அஹ்லுஸ்ஸுன்னாக்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட முடியாததாக அவற்றை மிகவும் தெளிவாக்கி வைத்திருக்கிறான். அதே போன்று பிறை விடயத்தையும் வைத்திருந்தால் ''நீங்கள்" என்பது சரியான முடிவில் இருப்பவர்களைத்தான் குறிக்கிறது என்று கூறலாம்.

ஆனால் பிறைக் கருத்து வேறுபாடு சத்தியத்தைச் சுமந்தவர்களுக்கு மத்தியிலே ஏற்பட்டுள்ளது. ஆகவே ''நீங்கள்" என்பது அவர்களில் ஒரு சாராரை குறிக்க மாட்டாது. இல்லை அவர்களில் ஒரு சாராரைத்தான் குறிக்கிறது என்றால் இந்த ஹதீஸ் அவர்களைப் பிளவுபடுத்தும். எனவே அது தவறான விளக்கமாகும்.

''நீங்கள் நோன்பு நோற்கும் நாள்", "நீங்கள் பெருநாள் எடுக்கம் நாள்" என்பது பெரும்பான்மை மக்கள் நோன்பு நோற்கும் நாள் பெரும்பான்மை மக்கள் பெருநாள் எடுக்கும் நாள் என்பதே சரியான பொருத்தமான விளக்கமாகும். அது உலகப் பெரும்பான்மையோ நாட்டின் பெரும்பான்மையோ மாநிலத்தின் பெரும்பான்மையோ அல்ல. அந்த நேரத்தில் எங்களுடன் வாழும் மக்களின் பெரும்பான்மை. உதாரணமாக பலகத்துறையில் வாழும் பெரும்பான்மை மக்கள் சர்வதேசப் பிறையை அமுல்படுத்துகிறார்கள் என்றால் உள்நாட்டுப் பிறையை ஆதரிப்பவர்கள் அவர்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். ஒரே சூழலில் வாழ்கின்றவர்கள் ஒற்றுமைப்பட்ட பிறகுதான் அதை விடப் பெரிய ஒரு ஒற்றுமையைப் பற்றிப் பேச வேண்டும். தனது சூழலுக்கு வெளியில் உள்ள பெரும் பான்மையைத் தீர்மாணிப்பது எப்போதும் சாத்தியமானது அல்ல.

## பகுதி - 3

## சகோதரரின் இரண்டாவது பகுதிக்கான விமர்சனம்

சகோதரரின் இரண்டாவது பகுதிக்கு நாம் பதில் சொல்வது கட்டாயமில்லை. நாமும் நாட்டுக்கு நாடு பிறையைக் கொள்கை அளவில் சரிகாணவில்லை. எமது தொகுப்பை, சர்வதேசப் பிறை என்ற நிலைப்பாட்டில் இருந்து சகோதரர் விமர்சித்ததைப் போன்று வேறு ஒருவர் உள்நாட்டுப் பிறை என்ற நிலைப்பாட்டில் இருந்தும் விமர்சிக்கலாம். ஓரிடத்தில் வாழும் பெரும்பான்மை மக்கள் சர்வதேசப்பிறையை நடைமுறைப் படுத்தும் போது அவர்களில் சிலர் உள்நாட்டுப் பிறையை நடைமுறைப்படுத்தக் கூடாது என்பதும் அத்தொகுப்பில் உள்ளடங்கியுள்ளது.

உள்நாட்டுப் பிறையில் எல்லைப் பிரச்சினை என்ற சிக்கல் இருக்கின்றது. சகோதரர் அதையே முக்கியமாக பல கோணங்களில் பல உதாரணங்களைக் கூறி விமர்சித்துள்ளார். அவர் விமர்சித்ததைப் போன்றே பல வருடங்களாக இன்னும் பலரும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். ஆனால் சர்வதேசப் பிறையிலும் வேறு பல சிக்கள்கள் உள்ளன. அதே போன்று உள்நாட்டு பிறை பற்றிய சகோதரரின் விமர்சனத்தில் எமக்குப் பல கேள்விகளும் விமர்சனங்களும் உள்ளன. அதனால் அவரது விமர்சனத்தை எமது நிலப்பாட்டில் இருந்து விமர்சிக்க விரும்புகிறோம். அவர் பத்து ஐயங்களையும் சிக்கல்களையும் முன்வைத்துள்ளார். அவற்றை ஒவ்வொன்றாக அலசுவோம்.

### ஐயமும் சிக்கலும் -1

***“1. உள்நாட்டுப் பிறையை சரிகாணுகின்றவர்கள் முன் வைக்கும் முக்கியமான நொண்டிச் சாட்டுதான் அது சமூக ஒற்றுமைக்கு வழி வகுக்குமென்பது.”***

மார்க்க அறிஞர்களுக்கு மத்தியில் ஏற்படும் பிக்ஹ் கருத்து வேறுபாட்டில் மாற்று கருத்தை விமர்சிக்கும் போது அவர்களின் வாதங்களை நொண்டிச்சாட்டு, குருகிய கண்ணோட்டம் என்று வர்ணிப்பது நல்லதல்ல என்று நாம் கருதுகிறோம். இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் சில பிரச்சாரர்கள் இப்படியான போக்கை கடைப்பிடிப்பது பொது மக்கள் பிக்ஹ் கருத்து வேறுபாடுகளை அகீதா கருத்து வேறுபாடுகளைப் போன்று பெரும் பிரச்சினைக்கு உரியதாக மாற்றிக் கொள்வதற்கு காரணமாக அமைகிறது என்பது எமது தாழ்மையான கருத்தாகும். கடும் சொற்கள், சாதாரண கருத்து வேறுபாட்டை உள்ளங்கள் வேறுபடுவதற்கு காரணமாக அமைத்து விடுகின்றன.

இப்னுபாஸ், அல்பானி, உசைமீன் போன்ற பேரறிஞர்கள் ஒற்றுமையை காரணம் காட்டி பெருநாளிலும் நோன்பிலும் பிளவு படாமல் உள்நாட்டுப் பிறையைக் கடைபிடிக்குமாறு கூறியிருக்கிறார்கள். அவர்களின் போக்கையும் நொண்டடிச்சாட்டு, குருகிய கண்ணோட்டம் என்று வர்ணித்தவராகி விடுவீர்கள்.

***“எனவே, இந்திய முஸ்லிம்கள் தமக்குள் ஒற்றுமையாகவும் பாகிஸ்தான் முஸ்லிம்கள் தமக்குள்ளும் பங்களாதேஷ் முஸ்லிம்கள் தமக்குள்ளும் ஒற்றுமையாக இருந்து நோன்பையும் பெருநாளையும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாட்டு முஸ்லிம்களும் அடுத்த எல்லையில் இருக்கின்ற முஸ்லிம்கள் எப்போது நோன்பு நோற்றார்கள் எப்போது பெருநாள் கொண்டாடினார்கள் என்பது பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்பது இவர்களது வாதத்தின் பிரதிபலனாகும். முஸ்லிம் உம்மத்தை இவ்வாறு புவியியல் ரீதியாகக் கூறுபோட்டு ஒற்றுமைப்படுத்துவது எந்தக்***

***குர்ஆனில் அல்லது எந்த சுன்னாவில் வழிகாட்டப்பட்டிருக்கிறது? இக்குறுகிய கண்ணோட்டம் முஸ்லிம் உம்மத்தை ஒற்றுமைப்படுத்தியதா? அல்லது உம்மத்தின் ஒரு சாரார் இன்று நோன்பாளிகளாகவும் மறு சாரார் நாளையும் இன்னொரு சாரார் மறு நாளும் என்று கூறுபோட்டதா? என்பதை இக்கருத்தை வாதிடுகின்றவர்கள் சிந்திக்கட்டும்."***

இதே போன்று உங்களிடமும் நாம் கேட்கிறோம். சர்வதேசப்பிறையை ஆதரிப்பவர்கள் அதனால் முழு உலகமும் ஒற்றுமைப்படும் என்று காரணம் கூறுகிறார்கள். பெரும்பான்மை மக்களுக்கு மாற்றமாக சர்வதேசப் பிறையை நடைமுறைப் படுத்துகிறார்கள். இந்தக் கண்னோட்டம் ஒற்றுமையை ஏற்படுத்தியதா? அல்லது உம்மத்தில் அல்ல, ஊரிலே ஒரே அகீதாவிலே உள்ள, முஸ்லிம்களுக்கும் தாயிற்கும் மகளுக்கும் கணவனுக்கம் மனைவிக்கும் சகோதரனுக்கும் சகோதரிக்கும் மத்தியிலே பிளவை ஏற்படுத்தி ஒருவர் நோன்பு நோற்க மற்றவர் பெருநாள் எடுக்கும் நிலமையை உருவாக்கியதா? முழு உலகிற்குமான ஒரு இஸ்லாமிய ஆட்சி ஏற்படாதபோது அறிஞர்கள் ஒன்றுபடாத வரையில் இந்த ஒற்றுமை தான் ஏற்படுமா? 1400 ஆண்டுகளாக ஒன்றுபடாத அிறிஞர்கள் இனிமேல் ஒன்றுபட்டு விடுவார்களா? அல்லது காலாகலமாக ஒரே ஊருக்குள் ஒரே வீட்டுக்குள் வெவ்வேறு நாட்களில் பெருநாள், நோன்பு என்ற சோகமான நிலைமை நீடிக்குமா?

இஸ்லாமிய ஆட்சியாளர் உள்ள நாடுகளில் ஆட்சியாளர் உள்நாட்டுப் பிறையை செயல்படுத்தினால் அங்குள்ள மக்களும் அதையே செயல்படுத்த வேண்டும் என்று சகோதரரும் ஏற்றுக் கொள்வார். அப்படியானால் அவர் குறிப்பிட்ட அனைத்து நாடுகளிலும் இஸ்லாமிய ஆட்சியாளர் இருந்து அவர்கள் அனைவரும் உள்நாட்டுப் பிறையை அமுல்படுத்தினால் சகோதரர் தன்னுடைய கேள்விக்கு என்ன பதில் கூறுவார்?

அதாவது அடுத்தடுத்து இருக்கின்ற ஒவ்வொரு நாட்டு முஸ்லிம்களும் அடுத்தடுத்த எல்லையில் இருக்கின்ற முஸ்லிம்கள் எப்பொழுது நோன்பு நோற்றார்கள் எப்போது பெருநாள் கொண்டாடினார்கள் என்பது பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்பது மேற்படி வாதத்தின் பிரதிபலனாகும். முஸ்லிம் உம்மத்தை இவ்வாறு கூறுபோட்டு ஒற்றுமை படுத்துவது எந்தக் குர்ஆனில் அல்லது எந்த சுன்னாவில் வழி காட்டப்பட்டிருக்கின்றது? என்று நாம் சகோதரரிடம் கேட்டால் சகோதரர் என்ன பதில் சொல்லுவார்? ஹதீஸ்களில் ஆட்சியாளருக்குக் கட்டுப்பட வேண்டும் என்று வந்துள்ளது என்பார். இதைத்தான் நாமும் அவருக்குச் சொல்கிறோம். நோன்பு, பெருநாள் விடயத்தில் பெரும்பான்மை மக்களுக்கு மாற்றமாக நடக்கக்கூடாது என்றும் ஹதீஸில் வந்துள்ளது.

அதே போன்று எந்த ஆட்சியாளருக்குக் கட்டுப்பட வேண்டும்? ஒரு நாட்டில் உள்ள முஸ்லிம்கள் தமது நாட்டு இஸ்லாமிய ஆசியாளருக்குக்கட்டுப்பட வேண்டுமா? அல்லது வேறு நாட்டு இஸ்லாமிய ஆட்சியாளருக்குக் கட்டுப்பட வேண்டுமா? என்று நாம் அவரிடம் கேட்டால் ஒவ்வொரு முஸ்லிமும் தனது நாட்டின் ஆட்சியாளருக்குத்தான் கட்டுப்பட வேண்டும் என்று சகோதரார் பதில் சொல்வார். அதே போன்று சகோதரர் எங்களிடம் எந்த பெரும்பான்மைக்கு கட்டுப்பட வேண்டும்? என்று கேட்டால் ஒவ்வொரு முஸ்லிமும் தான் எந்த மக்களுடன் வாழ்கிறானோ அந்த மக்களின் பெரும்பான்மைக்கு கட்டுப்படவேண்டும் என்று சொல்வோம்.

எத்தனையோ விடயங்களில் பெரும்பான்மை மக்களின் கருத்தை நடைமுறைப்படுத்தாத நீங்கள் பிறையிலே மாத்திரம் ஒற்றுமைபடுவது சரிதானா? என்று

எம்மிடம் கேட்டால், பிறை விடயத்தில் அவர்களுடன் சேர்ந்து கொள்ளுமாறு நபி(ஸல்) அவாகள் கூறியிருக்கின்றார்கள். ஏனைய தவறுகளில் சேரவேண்டும் என்று கூறவில்லை. அல்லாவுக்கு மாறுசெய்யும் விடயத்தில் படைக்கப்பட்டவர்களுக்கு கட்டுப்படகூடாது என்று நபிஷ(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று கூறுவோம்.

இதே கேள்வியை சகோதரரிடத்திலே நாம் கேட்டால் அவர் என்ன சொல்வார்? அதாவது அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் விடயத்தில் ஆட்சியாளருக்குக் கட்டுப்பட முடியாதே? ஏனெனில் சர்வதேச பிறை தான் சத்தியம் குர்ஆன் சுன்னாவுக்கு சரிப்பட்டு வரக்கூடியது என்ற கருத்தில் நீங்கள் கூறியுள்ளீர்களே? என்று கேட்டால் பிறையிலே ஆட்சியாளருக்குக் கட்டுப்பட வேண்டும்; அது ஹதீஸுக்கு முரண்பட்டாலும் பரவாயில்லை என்று ஒரு ஹதீஸையாவது சகோதரரால் காட்ட முடியுமா?

நாங்கள் ஆதாரம் காட்டும் "நீங்கள் எந்த நாளில் நோன்போ அந்த நாளில் தான் நோன்பு; நீங்கள் எந்த நாளில் பெருநாளோ அந்த நாளில் தான் பெருநாள்" என்ற ஹதீஸையே அவரும் ஆதாரம் காட்ட வேண்டும். அந்த ஹதீஸ் ஆட்சியாளர்களைப்பற்றி நேரடியாகப் பேசவில்லையே மக்களைப் பற்றி தானே பேசுகிறது என்று அவரிடம் கேட்டால் என்ன சொல்வார்? ஆட்சியாளரின் தீர்ப்பைத்தான் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் அதனால் ஆட்சியாளரைப் பின்பற்றுவது என்பது மக்களைப் பின் பற்றுவதாக அமையும் என்று தான் பதில் கூற முடியும்.

இதனால் தான் நாம் கேட்கிறோம். பிறை விடயத்தில் மக்களைப் பின்பற்ற வேண்டும் என்று வந்த ஹதீஸ் ஆட்சியாளரைப் பின்பற்றுவதற்கு ஆதாரமாக அமையுமென்றால் ஏன் ஆட்சியளர்கள் இல்லாத போது மக்களைப் பின் பற்ற அது ஆதாரமாக அமைய முடியாது? பிறை விடயத்தில் ஆட்சியாளர் இருந்தால் ஒற்றுமைப்பட வேண்டும் என்றால் ஆட்சியாளர் இல்லாவிட்டால் பிளவு பட முடியுமா?

இப்படியான இஸ்லாத்தின் ஆழமான நோக்கங்களைப் புரிந்து கொண்டதால் தான் சரவதேசப் பிறையை ஆதரிக்கும் அல்பானி, பின் பாஸ் போன்ற பல அறிஞர்களும் கூட பெரும்பான்மை மக்களுடன் பிறையை நடைமுறைப்படுத்துமாறு கூறியிருக்கிறார்கள். சற்று சிந்தனை செய்து பாருங்கள்.

**ஐயமும் சிக்களும் - 2**

***""நீங்கள் பிறையை கண்டு நோன்பு பிடியுங்கள் அதைக் கண்டு நோன்பை விடுங்கள்" என்ற நபி மொழி இலங்கையர் இந்தியர் சீனர் என்று ஒவ்வொரு நாட்டவருக்கும் தனித்தனியாக வழங்கப்பட்ட கட்டலையா? அல்லது முஸ்லிம் உம்மத் என்ற வட்டத்திற்குள் வருகின்ற அனைத்து மக்களுக்குமுறியதா? என்றால் இஸ்லாமிய அடிப்படை அறிவு கொடுக்கப்பட்ட எவரும் முதற்கூற்றை சரிகாணமாட்டார்கள்."*** என்ற சகோதரரின் வாதம் எத்துனை ஆபத்தானது என்பதை அவர் சிந்திக்க வேண்டும்.

ஏனெனில் பல பெரும் அறிஞர்கள் அக்கருத்தை கூறியுள்ளனர். மதீனா இஸ்லாமியப் பல்கலைகழக சில பேராசிரியர்களால் எழுதப்பட்டு அதன் கல்வி ஆய்வு நிலையத்தினால் சரிபார்க்கப்பட்ட "அர்கானுல் இஸ்லாம்" என்ற நூலில் ஒவ்வொரு நாட்டிலும் பிறைகாண வேண்டும் என்பது தான் அறிஞர்களின் வேறுபட்ட இரு கருத்துக்களில் பலமானது என்று குறிப்பிட்டு விட்டு இந்த ஹதீஸையே அதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளனர். சவுதி பேரறிஞர் சபை, இந்த ஹதீஸை உள்நாட்டுப் பிறையை சரிகாணுகின்ற அறிஞர்களும் தமது கருத்துக்கு ஆதாரமாக எடுத்திருப்பதை

சுட்டிக்காட்டியுள்ளது. சவுதியின் முன்னைய நாள் முப்தி முஹம்மது இப்னு இப்றாஹீம் அலுஷ்ஷேக், உசைமீன், ஸாலிஹ் அல்பௌசான் போன்ற பல அறிஞர்கள் இந்த ஹதீஸை நாட்டுக்கு நாடு தனித் தனியாக வழங்கப்பட்ட கட்டளை என்று விளக்கமளித்துள்ளர்கள். அதை விட மேலாக இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களும் இந்த ஹதீஸை அவ்வாறு தான் விளங்கியிருக்கிறார்கள் என்று ஷவ்கானி, இப்னு பாஸ், அப்துல் முஹ்ஸின் அல்-அப்பாத் போன்ற அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் உட்பட பல முக்கிய அறிஞர்கள் இஸ்லாமிய அடிப்படை அறிவு கொடுக்கப்படாதவர்களா? சகோதரரே! இஜ்திஹாதிற்குரிய விடயங்களில் கடுமையான சொற்களைப் பிரயோகிப்பது உங்களை எங்கே கொண்டு போய்விடுகிறது என்பதை சிந்திப்பீராக.

***"ஒரு சில அறிஞர்கள் ஹதீஸின் கருத்து ஜமாஅத்தோடும் பெரும்பான்மை மக்களோடும் நோன்பு நோற்பதும் விடுவதும் என்று கூறியிருக்கிறார்கள். இக்கருத்து ஹதீஸின் வாசகத்திற்கு முரண்படுவது ஒரு புரமிருக்க அதனை நடைமுறைப்படுத்துவது அதைவிடப் பெரிய முரண்பாட்டை உருவாக்குகின்றது. பெரும்பான்மை மக்களென்பதை எவ்வாறு தீர்மானிப்பது? ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பெரும்பான்மை என்று ஒருவர் அதை வரையருத்தால் மற்றொருவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பெரும்பான்மை என்று வரையருத்து மாவட்டத்திற்கு மாவட்டம் நோன்பும் பெருநாளும் என்று தீர்மாணிக்கலாம். இன்னொருவர் இல்லை ஒவ்வொரு ஊரிலுள்ளவர்கள் என்றும் வேறு சிலர் ஒவ்வொரு கண்டத்திலென்றும் இதற்குரிய வரையரை முரண்பட்டுக் கொண்டே போகும். எனவேதான் பெரும்பான்மை அறிஞர்கள் இக்கட்டலை ஒட்டு மொத்த சமுகத்திற்குமுறியது என்ற நிலைப்பாடடைக் கொண்டுள்ளனர்."*** என்று சகோதரர் குறிப்பிடுகிறார் .

இந்த ஹதீஸுக்கு எந்த அறிஞரும் ஜமாஅத்தோடும் பெரும்பான்மை மக்களோடும் நோன்பு நோற்பதும் விடுவதும் என்று விளக்கம் கொடுப்பதை நாம் தேடிப்பார்த்த வகையில் காண முடியவில்லை. அப்படியாராவது விளக்கம் கொடுத்திருந்தால் அதைனை எங்களுக்கும் அறியத்தருவததை விரும்புகிறோம். ஆனால் தனிப்பட்டவர்களின் பிறையை காழி ஏற்காதபோது அது ரமழான் பிறையாக இருந்தால் அவர்கள் நோன்பு நோற்க வேண்டுமா? அதே போன்று ஷவ்வால் பிறையாக இருந்தால் இரகசியமாக நோன்பை விடவேண்டுமா? அல்லது பெரும்பான்மை மக்களுடன் சேர வேண்டுமா? என்ற கருத்து வேறுபாட்டில் பெரும்பான்மை மக்களுடன் சேரக் கூடாது என்று சொல்லும் அறிஞர்கள் இந்த ஹதீஸையே ஆதாரம் காட்டுகின்றனர்.

பெரும்பான்மை மக்களுக்கு முரண்படக் கூடாது என்பது தான் எமது கருத்தும். அதற்கு நாம் இந்த ஹதீஸை ஆதாரம் காட்டவில்லை. எமது ஆதாரம் என்ன என்பதையும் அது சகோதரர் குறிப்பிடுவதைப் போன்று அப்படி ஒன்றும் நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தப் போவதில்லை என்றும் ஏற்கனவே விளக்கியுள்ளோம். சுருக்கமாக கூறுவதாயின் தமது சூழலில் உள்ளவர்களுக்கு எந்தளவிற்கு ஒற்றுமைப்பட முடியுமோ அந்தளவிற்கு ஒற்றுமைப்பட வேண்டும். பெரிய ஒற்றுமையை காரணம் காட்டி ஒரே இடத்தில் பிளவு பட்டு ஒற்றுமையையே தூக்கி எறியக் கூடாது. பெரும்பாலும் இன்றைய சூழ்நிலையில் ஒரு நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் பெரும்பாலான மக்கள் ஒரே பிறையை நடைமுறைப்படுத்துவதால் அவர்களுடன் சேர்ந்து கொள்பவர் தன்னுடைய ஊர், மாவட்டம், நாடு ஆகிய வற்றின் பொரும்பான்மையுடன் சேர்ந்து கொண்டவராகிறர். சில ஐரோப்பிய நாடுகளில் ஒரு நகரத்தில் உள்ளவர்களில் பெரும்பான்மையினர் ஒரு பிறையையும் வேறு ஒரு

நகரத்தின் பெரும்பான்மையினர் வேறு ஒரு பிறையையும் பின்பற்றுவதால் ஒருவர் எந்த நகரத்தில் வாழ்கிறாரோ அவர் அந்த நகரத்தின் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும்.

சில அரபு நாடுகள் சேர்ந்து சவுதியை பின்பற்றுவதால் அந்த நாடுகளில் உள்ள அனைவரும் அதையே நடைமுறைப் படுத்த வேண்டும். இது நாட்டையும் தாண்டிய ஒரு பெரும்பான்மையைப் பிரதிபளிக்கின்றது. எனவே ஊருக்குள் ஒற்றுமைப் பட்ட பிறகு தான் மாவட்ட ஒற்றுமைக்காக முயற்சிக்க வேண்டுமே தவிர மாவட்டத்தில் ஒற்றுமைப் பட வேண்டும் என்பதற்காக ஊரைப் பிரிக்கக் கூடாது.

**ஐயமும் சிக்கலும் - 3**

***“நாட்டுக்கு நாடு பிறை என்ற நிலைப்பாட்டிலுள்ளவர்கள் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் என்ற இரண்டு நாடுகளையும் உதாரணமாக எடுத்துக் கொள்ளட்டும். இரண்டு நாடுகளையும் பிரிப்பதற்கான ஒரு தரை மார்க்க எல்லை அங்கு உருவாக்கப்பட்டிருக்கும். இரு நாட்டு எல்லைகளிலும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் இராணுவ வீரர்கள் சுமார் 10 அல்லது 20 மீற்றர்களுக்குள்ளே இருப்பார்கள். பாகிஸ்தானில் பிறை தென்பட்டு அது ஆப்கானிஸ்தானின் வானத்தில் தென்படாவிட்டால் இவ்விராணுவர்களின் நிலைப்பாடு என்ன? ஒரே இடத்தில் இருக்கின்ற இரண்டு முஸ்லிம்களில் ஒருவர் நோன்பு மற்றவர் நோன்பில்லை என்பதா? இந்த ஒற்றுமை எந்த இஸ்லாத்தில் போதிக்கப்பட்டுள்ளது?”***

எல்லாக் கட்டத்திலும் நாட்டுக்கு நாடு பிறை என்பவர்களிடத்தில் நாமும் இந்தக் கேள்விகளைக் கேட்கிறோம். சகோதரர் எம்மிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் நாமும் அதே கேள்வியை அவரிடம் இவ்வாறு கேட்போம். அவர் அதற்கு என்ன பதில் சொல்வாரோ அதே பதில் தான் நாமும் அவருடைய கேள்விக்கு சொல்லும் பதிலாகும். அதாவது பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் என்ற இரு நாடுகளில் இரண்டு இஸ்லாமிய ஆட்சியாளர்கள் ஆட்சி செய்கிறார்கள் என்றும் இரு ஆட்சியாளரும் உள்ளநாட்டுப் பிறை என்ற கருத்தில் இருக்கிறார்கள் என்றும் வைத்துக் கொள்வோம். இரண்டு நாடுகளையும் பிரிப்பதற்கான ஒரு தரை மார்க்க எல்லை உருவாக்கப்பட்டிருக்கும். இரு நாடுகளின் எல்லைகளிலும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும் இராணுவ வீரர்கள் சுமார் பத்து அல்லது இருபது மீற்றருக்குள்ளே இருப்பார்கள். பாகிஸ்தானில் பிறை தென்பட்டு அது ஆப்கானிஸ்தான் வானத்தில் தென்படாவிட்டால் இவ்விராணுவர்களின் நிலைப்பாடு என்ன? ஒரே இடத்தில் இருக்கின்ற இரண்டு முஸ்லிம்களில் ஒருவர் நோன்பு மற்றவர் நோன்பில்லை என்பதா? இந்த ஒற்றுமை எந்த இஸ்லாத்தில் போதிக்கப்பட்டுள்ளது.?

இதற்கு சகோரர் ஒவ்வாரு நாட்டு இராணுவர்களும் தமது நாட்டின் ஆட்சியாளர் சொல்வதை தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஆட்சியாளருக்குக் கட்டுப்பட இஸ்லாம் வழிகாட்டியிருப்பதாகவும் கூறுவார். அதே போன்று தான் நாமும் கூறுவோம். தங்களின் பெரும்பான்மை மக்களுடன் அவர்கள் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் வழிகாட்டியிருக்கிறது. ஓவ்வொரு நாட்டு இராணுவர்களும் எல்லை தாண்டி அடுத்த நாட்டு மஸ்ஜிதுகளில் சென்று தராவீஹ்தொழவோ, வீடுகளுக்குச் சென்று பெருநாள் கொண்டாடவோ, அடுத்த நாட்டு முஸல்லாக்களில் பெருநாள் தோழவோ போகமாட்டடார்கள். தங்கள் நாட்டு எல்லைக்குள் வாழும் பெரும்பான்மை மக்களுடன் தான் தொழுவார்கள், பெருநாளை சந்தோஷமாகக் கழிப்பார்கள். அவர்கள் அடுத்த

நாட்டுடன் ஒன்று பட்டு தமது வீட்டின், ஊரின் ஒற்றுமையைக் குலைத்து விடக்கூடாது. அதை இஸ்லாம் போதிக்க வில்லை.

இன்றைக்கு இஸ்லாமிய அரபு நாடுகள் எல்லைக் கோட்டால் தான் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் பிறையை மற்ற நாடு ஏற்றுக் கொள்ளாமலும் இருந்துள்ளன. உதாரணமாக ஒரே அரபு தீபகற்பத்தில் இருக்கும் யமன் நாட்டின் பிறையை சவுதி ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது சவுதியில் உள்ளவர்கள் தமது நாட்டின் ஆட்சியாளருக்குக் கட்டுப்பட வேண்டுமா? இதற்கு ஆம் எல்லைக் கோடடில் இருந்தாலும் பத்து, இருபது என்ன ஐந்து மீற்றருக்குள் இருந்தாலும் தமது நாட்டின் ஆட்சியாளருக்கே கட்டுப்படவேண்டும், என்று தான் சகோதரரால் பதில் கூற முடியும்.

### ஐயமும் சிக்கலும் - 4

***"ஒவ்வொரு நாட்டிற்கும் தனிப்பிறை என்று ஒற்றைக்காலில் நிற்பவர்கள் இலங்கையையும் இந்தியாவையும் உதாரணமாக எடுத்துக் கொள்ளட்டும். மன்னாரிலே பிறை தென்பட்டு இந்தியாவின் எப்பகுதிகளிலும் பிறை தெரியாமல் போனால் மன்னாரிலிருந்து வெறும் 30 அல்லது 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இந்தியாவின் ராமேஷ்வரம் என்ற ஊருக்கு அப்பிறை செல்லுபடியாகாது!! அதேவேளை ராமேஷ்வரத்திலிருந்து பல ஆயிரம் கிலோ மீற்றர் தெலைவில் உள்ள இந்தியாவின் ஜைப்பூரில் பிறை தென்பட்டால் அது ராமேஷ்வரத்திற்குப் பிறையாகிவிடும். பக்கத்திலிருக்கும் மன்னாரின் பிறையை ஏற்காத ராமேஷ்வரம் பல ஆயிரம் கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஜைப்பூர் பிறையை ஏற்றுக்கொண்ட காரணம் தான் என்ன? இலங்கையையும் இந்தியாவையும் ஒரு நீரோட்டம் பிரிக்கின்றதாலா? அல்லது இலங்கைக்கு வேறு அரசாங்கம் இந்தியாவுக்கு வேறு அரசாங்கம் என்பதாலா?"***

இந்த கேள்வியையும் இவ்வாறு அவரிடம் திருப்பிக் கேட்கிறோம். இலங்கையும் இந்தியாவும் இரு இஸ்லாமிய நாடுகள் அல்லது அவ்விரண்டில் ஒன்று இஸ்லாமிய நாடு என்றும் இந்த இஸ்லாமிய நாடுகள் ஷாபி மத்ஹபைப் பின்பற்றி அல்லது உஸைமீன், ஸாலிஹ் அல்-பௌஸான் போன்ற சவுதியின் பேரறிஞர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டு ஒவ்வொரு நாடும் பிறை காண வேண்டும் என்ற கருத்தை நடைமுறைப்படுத்துவதாக வைத்துக் கொள்வோம். மன்னாரிலே பிறை தென்பட்டு இந்தியாவின் எப்பகுதியிலும் பிறை தெரியாமல் போனால் மன்னாரில் இருந்து வெறும் முப்பது அல்லது நாற்பது கி.மீ தொலைவில் உள்ள இந்தியாவின் ராமேஸ்வரம் என்ற ஊருக்கு அப்பிறை செல்லுபடியாகாது. அதே வேளை ராமேஸ்வரத்தில் இருந்து பல ஆயிரம் கி.மீ தொலைவில் உள்ள இந்தியாவின் ஜைப்பூரில் பிறை தென்பட்டால் அது ராமேஸ்வரத்துக்குப் பிறையாகிவிடும். பக்கத்தில் இருக்கும் மன்னாரின் பிறையை ஏற்காத ராமேஷ்வரம் பல ஆயிரம் கி.மீ தொலைவில் உள்ள ஜைப்பூர் பிறையை ஏற்றுக் கொண்ட காரணம் தான் என்ன? இலங்கையையும் இந்தியாவையையும் ஒரு நீரோட்டம் பிரிக்கின்றதாலா? அல்லது இலங்கைக்குவேறு அரசாங்கம் இந்தியாவுக்கு வேறு அரசாங்கம் என்பதாலா?

இதற்கு ஆம் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியாளர் கட்டளையிட்டால் ராமேஷ்வர மக்கள் தலை மன்னார் பிறையை ஏற்கக் கூடாது. ஜைப்பூர் பிறையை ஏற்க வேண்டும். ஏனெனில் ராமேஷ்வரம் பாக்கு நீரினையால் பிரிக்கப்பட்டு இந்தியாவின் ஆட்சிக்கு கீழ் இருக்கிறது ஜைப்பூர் பல்லாயிரம் கி.மீ தொலைவில் இருந்தாலும்

தலைமன்னார் முப்பது என்ன ஒரு கி.மீ தொலைவில் இருந்தாலும் பரவாயில்லை என்று தான் சகோதரரால் சொல்ல முடியும்.

இதைத்தான் நாமும் சொல்கிறோம் ஆட்சியாளருக்காக சர்வதேசப் பிறையை விட்டுக் கொடுக்க முடியும் என்றால் ஏன் மக்களுக்காக அதை விட்டுக் கொடுக்க முடியாது? இரண்டும் மார்கத்தில் உள்ளவை தான். அதைவிட ஒருபடி மேலாக ஆட்சியாளருக்காக விட்டுக் கொடுப்பதன் நோக்கமே இஸ்திரத் தன்மையும் மக்களின் ஒற்றுமையும் தானே தவிர ஆட்சியாளர் என்ற தனிமனிதனுக்குகாக அல்ல. ஆட்சியாளர் அநியாகக்காரனாக, பெரும் பாவியாகக் கூட இருக்கலாம். அதைப்புரிந்து கொண்டதால் தான் மார்க்கத்தை ஆழமாகக் கற்ற அதற்குத் தமது முழு வாழ்வையும் தியாகம் செய்து குர்ஆன் சுன்னாவை நிலைநாட்டப் பாடுபட்ட பேரறிஞர்கள் உள்நாட்டுப் பிறையில் மக்களுடன் சேர்ந்து கொள்ளுமாறு வழியுறுத்தினார்கள். (அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிவானாக)

### ஐயமும் சிக்கலும் - 5

***“இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சில தீவுகள் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு கச்சத் தீவை எடுத்துக் கொள்வோம் அது தமது எல்லைக்குள் இருப்பதால் அது இலங்கைக்குறியது என்பது இலங்கை அரசின் நிலைப்பாடாகும். எனவே அங்கு சென்ற சில முஸ்லிம்கள் பிறை கண்டால் இலங்கையின் பிறைக்குழு அதனை ஏற்று அமுல் நாடாத்துவார்கள். அடுத்த வருடம் இலங்கை அரசாங்கம் கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தமானது என்று ஒப்பந்தம் செய்து கொண்டால் மீண்டும் ஒரு வருடத்தில் அதே கச்சத்தீவிலே பிறை தென்பட்டால் இலங்கைப் பிறைக் குழுவின் நிலைப்பாடு என்ன? இலங்கை அரசு அத்தீவை இந்தியாவுக்கு ஒப்படைத்துவிட்டது, எனவே அல்லாஹ்வுடைய பிறையை நாங்களும் இந்தியாவிற்குரியதாகவே காணுகிறோம் என்று சொல்வார்களா!? இது மார்க்கத்தை வைத்துக் கொண்டு விளையாடுவதாக இல்லையா!? எல்லாக் காரியங்களிலும் தெளிவாக சிந்தித்து தரமான முடிவுகளை எடுக்கும் முஸ்லிம்கள் இது விடயத்தில் ஏன் தெளிவிழந்து நிற்கிறார்கள்!?”***

இந்த கேள்வியையும் சகோதரரிடம் யாராவது திருப்பிக் கேட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அதில் ஒரு சிறிய மாற்றம் அதாவது இலங்கை ஒரு முஸ்லிம் நாடாக மாறி இன்றுள்ள சில இஸ்லாமிய நாடுகள் போலவே உள்நாட்டுப் பிறையை ஆதரிப்பதாக வைத்துக் கொள்வோம். மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பிறைக்குழுவிற்கு மாற்றமாக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பிறைக் குழு இருப்பதாகவும் அவர்களில் பித்அத் வாதிகள் இருப்பதாகவும் ஆட்சியாளரே பித்அத் வாதியாக (காபிர் அல்ல) இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும், இடையில் காணப்படும் கச்சைத் தீவு இலங்கைக்குறியது. அங்கு சென்ற சில முஸ்லிம்கள் ரமழான் தலைப்பிறையைக் கண்டதை அப்பிறைக்குழு ஏற்று அமுல் படுத்துகிறது. அடுத்த வருடம் அல்ல, அடுத்த மாதம் ஷவ்வால் ஆரம்பிக்க முன்னால் இலங்கை அரசாங்கம் கச்சதீவு இந்தியாவிற்கு சொந்தமானது என்று ஒப்பந்தம் செய்து கொண்டால் மீண்டும் அதே ரமழானின் இறுதியில் ஷவ்வால் தலைப் பிறை கச்சதீவிலே தென்பட்டல் இலங்கை இஸ்லாமிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? இலங்கை அரசாங்கம் அத்தீவை இந்தியாவிற்கு ஒப்படைத்து விட்டது எனவே அல்லாஹ்வின் பிறையை நாமும்

இந்தியாவிற்குறியதாகவே காண்கிறோம் என்று சொல்வார்களா? இது மார்க்கத்தை வைத்துக் கொண்டு விளையாடுவதாக இல்லையா? எல்லாக் காரியங்களிலும் தெளிவாக சிந்தித்து தரமான முடிவுகளை எடுக்கம் முஸ்லிம்கள் இது விடயத்தில் ஏன் தெளிவிழந்து நிற்கிறார்கள்?

இதற்கு சகோதரர் ஏனைய கேள்விகளுக்குக் கூறிய பதிலையே கூறுவார். பிறைக்குழு பித்அத்வாதிகளாக இருந்தாலும் ஆட்சியாளர் பித்அத்வாதியாக இருந்தாலும் நோன்பை ஆரம்பிக்க கச்சைத்தீவின் பிறையை ஏற்றுக் கொண்டாலும் நோன்பை முடித்துக்கொள்ள கச்சைத்தீவின் பிறையை ஏற்றுக் கொள்ளக் கூடாது. அல்லாஹ்வின் பிறை இந்தியாவிற்குறியதா? இது மார்க்கத்தில் விளையாடுவதில்லையா? ஏன் தெளிவு இழந்து நிற்கிறார்கள்? என்றெல்லாம் யார் கேள்வி கேட்டாலும் பிரச்சினையில்லை. இஸ்லாமிய அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு முஸ்லிம்களின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும் என்று தான் சகோதரரும் பதில் சொல்லமுடியும்.

இதனால் தான் நாம் கேட்கிறோம். இஸ்லாமிய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு முஸ்லிம்களின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும் என்றால் இஸ்லாமிய அரசாங்கம் இல்லாது கேட்பார், பார்ப்பார் அற்று தவிர்த்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களால் அங்கீகரிக்கப்படும் பிறைக் குழுக்குக் கட்டுப்பட்டு முஸ்லிம்களின் ஒற்றுமையைக் காப்பாற்றக் கூடாதா?

இதனால் தான் இஸ்லாமிய ஆட்சியாளர் இல்லாத நாடுகளில் மக்கள் பிறைக் குழுக்குக் கட்டுப்பட வேண்டும் என்று சவுதிப் பேரறிஞர்சபை உட்பட பலர் கூறியுள்ளளார்கள்.

### ஐயமும் சிக்கலும் - 6

***“நாட்டிற்கு நாடு பிறை என்பவர்கள் சவூதி அரேபியாவின் அறிஞர்கள் ஒன்றியத்தின் தீர்ப்பை கவ்விப்பிடித்துக் கொள்கிறார்கள், அதே சவூதி ஏனைய நாடுகளான குவைத், டுபாய், கடார், பஹ்ரைன், யமன், ஓமான் போன்ற நாடுகளில் தென்பட்ட பிறைகளை ஏற்று அமுல் நடாத்தியதை இவர்கள் எவ்வாறு வியாக்கியானம் செய்வார்கள்? அவை பக்கத்து நாடுகள் என்பார்களா?! அல்லது அறபு நாடுகள் என்பார்களா?”***

சகோதரர் சொல்வது சரியாக இருந்தால் அவ்வறிஞர்களின் அத்தீர்ப்பிற்கும் சவுதி ஏனைய நாடுகளின் பிறைகளை அமுல்படுத்தியதற்கும் எள்முனையளவு முரண்பாடும் இல்லை. அத்தீர்ப்பில் வெளிநாட்டுப் பிறையை ஏற்கக் கூடாது என்றில்லை. ஒரு அரசாங்கத்தின் அல்லது பிறைக் குழுவின் முடிவு வெளிநாட்டுப் பிறையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றிருந்தால் அதை அந்த நாட்டு மக்கள் செயல் படுத்த வேண்டும் என்று தான் அவ்வறிஞர்கள் கருதுகிறார்கள். இதிலே எங்களுக்கும் முரண்பாடு இல்லை. அது தான் எமது நிலைப்பாடும் ஆகும். அதற்கு எந்த வியாக்கியானமும் நாம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

சவுதி ஏனைய நாடுகளான குவைத், டுபாய், கடார், பஹ்ரைன், யமன், ஓமான் போன்ற நாடுகளில் தென்பட்ட பிறைகளை ஏற்று அமுல் நடத்தியதாக சகோதரர் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்தத் தகவலுக்கான ஆதாரத்தை எமக்கும் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். அல்லது அது எந்த வருடத்தில் நடந்தது என்றாவது அறியத் தருமாறு கேட்கிறோம். ஏனென்றால் நாம் அறிந்த வரை சவுதி வெளிநாட்டுப்

பிறையை மறுத்திருக்கிறது. அதற்கு சிறந்த உதாரணம் தான் சவுதியுடன் ஒட்டியிருக்கும் யமன் நாட்டின் பிறையை மறுத்ததாகும்.

### ஐயமும் சிக்கலும் - 7

***“சவூதி அரேபியாவின் அனைத்து ஊர்களும் இன்று ஒரே நாளில் நோன்பு நோற்று ஒரே நாளில் பெருநாளையும் கொண்டாடுகின்றன. இதே நிலைதான் அன்று ரஸூல் (ஸல்) அவர்களுடைய காலத்திலும் இருந்த தென்று யாரும் வாதிடமாட்டார்கள். மாறாக, அன்று மதீனாவில் முஸ்லிம்கள் நோன்பு நோற்க ரியாத் எனப்படும் ஊர்களில் முஸ்லிம்கள் பெருநாளைக் கொண்டாடி இருப்பார்கள். ஆயிரம் கிலோமீற்றர் தொலைவிலுள்ள மதீனாவிற்கு ரியாதின் செய்தி கிடைப்பது சாத்திய மற்றதாக இருந்தது. ஆனால் அதே இரண்டு ஊர்களும் இன்று ஒன்றில் கண்ட பிறையை மற்றொன்று ஏற்றுக் கொள்கிறார்களென்றால் காரணம் இன்று அந்த செய்தி ஒரு நிமிடத்தில் கிடைத்துவிடுகின்றதென்பதால் தான். அன்று வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்பட்ட பெருநாள் இன்று ஒரே நாளில் கொண்டாடப்படுகின்றதென்றால் இதே தீர்ப்பு ஏனைய நாடுகளுக்கும் சாத்தியப்படாமல் போவது ஆச்சரியமாக இருக்கிறது. எனவே, தான் இமாம் இப்னு தைமியா அவர்கள் நோன்பைப்பிடிப்பதற்கும் விடுவதற்குமுறிய அடிப்படை பிறை கண்டதாக கிடைக்கும் தகவல் என்று கூறுகிறார்கள். எப்போது ஒரு முஸ்லிமுக்கு உலகின் ஏதோ ஒரு பகுதியில் பிறை காணப்பட்டதாக உறுதியான தகவல் கிடைக்கின்றதோ அப்போதே அவன் நோன்பை அல்லது பெருநாளைத் தீர்மானிக்க வேண்டும் என்பது அவரது முடிவாகும். (மஜ்மூஉல் பதாவா - 25/67)”***

சவுதியின் ஆயிரம் கிலோ மீட்டர் தொலையவில் உள்ள நகரங்கள் ஒரே நாளில் பெருநாள் கொண்டாடுகிறார்கள் என்பதில் எங்களுக்கு முரண்பாடு இல்லை. அதே போன்று சவுதியில் இருந்து பல்லாயிரம் கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இலங்கையில் பிறைக்குழு சவுதி பிறையை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தினால் நாமும் அதை நடைமுறை படுத்துவோம்; பிளவுபட மாட்டோம். அதை அவர்கள் அமுல்படுத்தாத போது நாம் மாத்திரம் அமுல்படுத்தி உலக ஒற்றுமையைக் காரணம் காட்டி ஊர் ஒற்றுமையையும் குடும்ப ஒற்றுமையையும் தூக்கி எறிய மாட்டோம். அதைத்தான் பிறை விடயத்தில் இஸ்லாம் எமக்கு கற்றுத் தந்துள்ளது.

தகவல் கிடைப்பதன் அடிப்படையில் பிறையை தீர்மனிக்க வேண்டும் என்று இமாம் இப்னு தைமியா கூறுவதாக சகோதரர் கூறுகிறார் ஆம் இமாம் அவர்கள் சர்வதேசப்பிறையினரின் கருத்தைக் கூறியிருக்கின்றார் என்பதை நாமும் அறபு மொழித் தொகுப்பில் சுட்டிக் காட்டினோம். ஆனால் அதே இமாம் இப்னு தைமியா(ரஹ்) சர்வதேசப் பிறைக்கு மாற்றமான கருத்தைக் கூறியதாகவும் அல்-இஹ்தியாரத்துல் பிக்ஹிய்யா என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஓரிடத்தில் பிறை தென்பட்டால் அந்த பிறை தென்படும் சாத்தியமுள்ள பிரதேசத்திற்கு கட்டுப்பட்டவர்கள் நோன்பு நோற்க வேண்டும். ஏனையவர்கள் நோன்பு நோற்கக் கூடாது என்கிறது அந்தக் கூற்று.

எது எப்படி இருந்தாலும் ஒரு பிரதேசத்தின் பெரும்பான்மை மக்களுக்கு மாற்றமாக நோன்பையோ பெருநாளையோ எடுக்க வேண்டும் என்று இப்னு தைமியா(ரஹ்) அவர்கள் கூறவில்லை. இன்றைய காலத்தில் அவர் இருந்திருந்தால் நிச்சயமாக இவர்கள் செய்வதை அவர் மறுத்திருப்பார்.

சகோதரர் மேற்கோள் காட்டிய கூற்றிற்கு சற்று பின்னால் சென்று பார்த்தால் பின்வரும் கூற்றை இப்னு தைமியா(ரஹ்) கூறிப்பிடுவதைப் பார்க்கலாம். அதனை நடு நிலைமையாக சிந்தித்துப்பார்த்தால் எமது பிரச்சினையில் இமாம் அவர்கள் எப்படிபட்ட நிலைப்பாட்டை எடுப்பர்கள் என்பது புரியும்.

(وَحِينَئِذٍ فَشَرْطُ كَوْنِهِ هِلَالًا وَشَهْرًا شُهْرَتُهُ بَيْنَ النَّاسِ وَاسْتِهْلَالُ النَّاسِ بِهِ حَتَّى لَوْ رَآهُ عَشَرَةٌ وَلَمْ يَشْتَهِرْ ذَلِكَ عِنْدَ عَامَّةِ أَهْلِ الْبَلَدِ لِكَوْنِ شَهَادَتِهِمْ مَرْدُودَةً أَوْ لِكَوْنِهِمْ لَمْ يَشْهَدُوا بِهِ كَانَ حُكْمُهُمْ حُكْمَ سَائِرِ الْمُسْلِمِينَ فَكَمَا لَا يَقِفُونَ وَلَا يَنْحَرُونَ وَلَا يُصَلُّونَ الْعِيدَ إلَّا مَعَ الْمُسْلِمِينَ فَكَذَلِكَ لَا يَصُومُونَ إلَّا مَعَ الْمُسْلِمِينَ وَهَذَا مَعْنَى قَوْلِهِ : { صَوْمُكُمْ يَوْمَ تَصُومُونَ وَفِطْرُكُمْ يَوْمَ تُفْطِرُونَ وَأَضْحَاكُمْ يَوْمَ تُضَحُّونَ } . وَلِهَذَا قَالَ أَحْمَد فِي رِوَايَتِهِ : يَصُومُ مَعَ الْإِمَامِ وَجَمَاعَةِ الْمُسْلِمِينَ فِي الصَّحْوِ وَالْغَيْمِ . قَالَ أَحْمَد : يَدُ اللَّهِ عَلَى الْجَمَاعَةِ . وَعَلَى هَذَا تَفْتَرِقُ أَحْكَامُ الشَّهْرِ : هَلْ هُوَ شَهْرٌ فِي حَقِّ أَهْلِ الْبَلَدِ كُلِّهِمْ ؟ أَوْ لَيْسَ شَهْرًا فِي حَقِّهِمْ كُلِّهِمْ ؟ يُبَيِّنُ ذَلِكَ قَوْلُه تَعَالَى { فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ } فَإِنَّمَا أَمَرَ بِالصَّوْمِ مَنْ شَهِدَ الشَّهْرَ وَالشُّهُودُ لَا يَكُونُ إلَّا لِشَهْرِ اشْتَهَرَ بَيْنَ النَّاسِ حَتَّى يُتَصَوَّرَ شُهُودُهُ وَالْغَيْبَةُ عَنْهُ . { وقول النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إذَا رَأَيْتُمُوهُ فَصُومُوا وَإِذَا رَأَيْتُمُوهُ فَأَفْطِرُوا وَصُومُوا مِنْ الْوَضَحِ إلَى الْوَضَحِ } وَنَحْوُ ذَلِكَ خِطَابٌ لِلْجَمَاعَةِ لَكِنْ مَنْ كَانَ فِي مَكَانٍ لَيْسَ فِيهِ غَيْرُهُ إذَا رَآهُ صَامَهُ فَإِنَّهُ لَيْسَ هُنَاكَ غَيْرُهُ)

“ஒரு பிறை பிறையாகவும் மாதமாகவும் இருப்பதற்கு நிபந்தனை யாதெனில் அது மக்களுக்கு மத்தியில் பிரபல்யம் அடைய வேண்டும்; (பிறை தென்பட்டு விட்டது என்று) அதைப்பற்றி அவர்கள் பேச வேண்டும் என்பதாகும். பத்து நபர்கள் தான் பிறையை கண்டு அவர்களின் சாட்சியம் மறுக்கப்பட்டு அல்லது அவர்கள் சாட்சி சொல்லாமல் இருந்ததால் அந்தப் பிறை அந்த நகரத்தின் மக்களிடத்தில் பிரபல்யம் அடைய வில்லை யானால் ஏனைய முஸ்லிம்களுக்குரிய சட்டம் தான் பிறை கண்டவர்களுக்கு முறிய சட்டமாகும். (அவர்கள் தாம் கண்ட பிறை அடிப்படையில் செயல்படக்கூடாது.) அவர்கள் எவ்வாறு முஸ்லிம்களுடன் தான் அரபாவில் தரிக்க வேண்டுமோ, அறுத்துப் பழியிடவேண்டுமோ, பெருநாள் தொழ வேண்மோ அவ்வாறே முஸ்லிம்களுடன் தான் நோன்பும் நோற்க வேண்டும். “நீங்கள் நோன்பு நோற்கும் நாளில் தான் உங்களுடைய நோன்பு; நீங்கள் பெருநாள் கொண்டாடும் நாளில் தான் உங்களுடைய பெருநாள்” என்ற ஹதீஸின் கருத்தும் இதுவாகும். இதனால் தான் இமாமுடனும் முஸ்லிம் கூட்டத்துடனும்நோன்பு நோற்க வேண்டும் என்றும் அல்லாஹ்வின் கை கூட்டத்தின் மீது இருக்கிறது என்றும் இமாம் அஹ்மத் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதனடிப்படையில் தான் மாதத்தின் சட்டங்கள் பிரிகின்றன. அந்த மாதம் அந்த நகரத்தின் அனைத்து மக்களுக்கும் உரிய மாதமா? அல்லது அவர்கள் அனைவருக்கும் உரியா மாதம் இல்லையா? அதனை அல்லாஹ்வின் கூற்றான (உங்களில் யார் மாதத்தை அடைகிறாரோ அவர் நோன்பு நோற்கட்டும்) என்ற வசனம் தெளிவுபடுத்துகின்றது. அல்லாஹ் நோன்பு நோற்க்குமாறு கட்டளை இட்டது. மாதத்தை அடைந்தவருக்குத்தான். மாதத்தை அடைவது, அடையாமல் இருப்பது என்று சிந்திப்பதற்கு அந்த மாதம் மக்களிடத்தில் பிரபல்யம் அடைய வேண்டும். அப்படிப் பிரபல்யம் அடையாத மாதத்தை அடைய முடியாது. நபி(ஸல்) அவர்களின் கூற்றான “நீங்கள் பிறையைக் கண்டால் நோன்பு பிடியுங்கள்; நீங்கள் பிறையைக் கண்டால் நோன்பை விடுங்கள்” என்ற ஹதீஸும் இதனை தெளிவு படுத்துகின்றது. இது போன்ற கட்டளைகள் கூட்டத்திற்குறிய கட்டளையாகும். ஆனால் எவருமற்ற ஒரு இடத்தில் ஒருவர் மாத்திரம் தனியாக இருந்தால் அவர் நோன்பு நோற்க வேண்டும். ஏனெனில் அங்கே அவரைத்தவிர வேறொருவரும் இல்லை.”

சுட்டிக்காட்டப்பட்ட கூற்றிலும் வேறு இடங்களிலும் இப்னு தைமியா(ரஹ்) சொல்ல வருவது என்ன என்பதை சற்று சிந்தியுங்கள்.

1. மாதம் என்பதைக் குறிக்கும் ‘ஷஹ்ர்’ என்ற அரபுச் சொல் பிரபல்யம் என்ற அர்தத்தை உள்ளடக்கியுள்ளது. ஒரு கூட்டத்திற்கு மாதம் ஏற்பட்டு விட்டது என்று சொல்வதற்கு அவர்களிடத்தில் அது பிரபல்யம் அடைய வேண்டும்.

2. பிறையைக் குறிக்கும் 'ஹிலால்' என்ற அறபும் பதம் சப்தமிடுதல், பேசுதல் என்ற அர்த்தத்தை தருகிறது ஒரு கூட்டம் எந்தப் பிறையைப் பற்றி எங்களுக்குப் பிறை பிறந்து விட்டது என்று பரவலாகப் பேசிக் கொள்ளவில்லையோ அது அந்த கூட்டத்திற்குப் பிறையாக அமையாது. அதனைப் பத்து நபர்கள் தான் கண்டாலும் பரவாயில்லை. இப்படியான நிலையில் பிறை கண்டவர்களும் அவர்களின் தகவலை நம்பியவர்களும் கூட்டத்தை விட்டுப் பிளவுபட முடியாது.

3. ஒரு கூட்டம் துல்ஹஜ் பிறையை மக்காவில் தென்படுவதற்கு ஒரு நாளைக்கு முன்னால் கண்டு விட்டால் அது மக்காவில் ஏற்றுக் கொள்ளப் படாத போது அவர்கள் ஹஜ்ஜின் கிரிகைகளைத் தமது பிறையின் அடிப்படையில் செயல்படுத்த முடியாது. அங்கே உள்ள முஸ்லிம்கள் அரபாவில் தரிக்கும் நாளாகிய இவர்களின் பிறையின் அடிப்படையில் பத்தாவது நாளில் தான் இவர்களும் அரபாவில் தரிக்க வேண்டும். ஏனைய கிரிகைகளையும் அவ்வாறே நிறைவேற்ற வேண்டும். இதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. எனவே இதே தீர்ப்பு தான் நோன்பு, நோன்புப் பெருநாள் ஆகிய தினங்களுக்கும் சரியாகும். ஹஜ்ஜில் மக்களுக்கு மாற்றம் செய்ய முடியாது என்று கூறிவிட்டு நோன்பிலும் நோன்புப்பெருநாளிலும் மக்களுக்கு மாற்றமாக நடக்க முடியும் என்று கூறுவது முரண்பாடாகும்.

4. பெரும்பான்மை மக்களுடன் தான் பிறைவிடயத்தில் சேர்ந்து நடக்க வேண்டும் என்பதற்கு ‘‘நீங்கள் நோன்பு நோற்கும் நாளில் தான் உங்களின் நோன்பு; நீங்கள் பெருநாள் எடுக்கும் நாளில் தான் உங்களின் பெருநாள்’’ என்ற நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் ஆதாரமாகும்.

5. (உங்களில் மாதத்தை அடைந்தவர் நோன்பு நோற்கட்டும்.) என்ற அல்லாஹ்வின் வசனத்திலிருந்து ஒரு கூட்டத்தாரிடத்தில் ஒருவரோ பலரோ பிறைக் கண்டு அது ரமழான் மாதம் என்று மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரபல்யம் அடையவில்லை என்றால் அந்த நாளில் அவர்களில் ஒருவரும் நோன்பு பிடிக்க முடியாது. ஏனெனில் மக்களிடம் அந்த மாதம் பிரபல்யம் அடைந்தால் தான் அதனை அடைய முடியும்.

6. ‘‘நீங்கள் பிறை கண்டு நோன்பு பிடியுங்கள்” என்ற ஹதீஸ் தனிப்பட்டவர்களுக்கு உரியதல்ல. ஒரு கூட்டத்திற்கு உரியது. கூட்டத்திற்கு மாற்றமாக ஒருவரோ இருவரோ நோன்பையோ பெருநாளையோ எடுக்க முடியாது.

இமாம் அவர்கள் இந்த ஆதரங்களை எல்லாம் எதற்காக முன் வைத்தார்? மக்களுக்கு மாற்றமாக ஒருவர் நோன்பு பிடிக்கவோ பெருநாள் எடுக்கவோ கூடாது என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவா? அல்லது ஆட்சியாளருக்கு மாறு செய்யக் கூடாது என்பதற்காகவா? ஆட்சியாளரை சம்பந்தப்படுத்தக்கூடிய எந்த ஒரு ஆதாரத்தையும் அவர் முன்வைக்கவில்லை. அவர் முன்வைத்த அத்தனை ஆதாரங்களும் மக்களுடன் சம்பந்தப்பட்டவையாகும்.

ஆட்சியாளரால் சாட்சியம் மறுக்கப்பட்டால் மாத்திரம் தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? அல்லது மக்களால் (அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவால்) மறுக்கப் பட்டாலும் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? இதற்கு இமாமின் பதில் எவ்வாறு இருக்கும் என்பதை நிதானமாக சிந்திப்போம்.

எங்கிருந்து தகவல் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்வதை சரி கண்ட இமாம் அவர்கள் அத்தகவலை மக்கள் ஏற்றுக் கொள்ளா விட்டால் அதை நடைமுறைப் படுத்தக் கூடாது; உள்ளூரில் கண்டாலும் பத்து பேர் கண்டாலும் அதை நடைமுறைப் படுத்த முடியாது என்பதையும் சரிகண்டுள்ளார்கள்.

**ஐயமும் சிக்கலும் - 8**

***“உலகின் பரப்பில் மூன்றில் இரண்டிற்கு அதிகமான பரப்பைக் கொண்ட பெரும் சமுத்திரத்தின் ஓரிடத்தில் சில முஸ்லிம்கள் சில வாரங்களாக தங்கியிருந்து தமது மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றார்கள் என வைத்துக் கொண்வோம். அவர்களது பயனம் ரமழானின் இறுதிப் பகுதியில் அமைந்திருந்தால் ஆழ்கடலில் இருக்கின்ற அவர்கள் பெருநாளை எந்த நாட்டுப்பிறையை வைத்துத் தீர்மானிப்பார்கள்? ஒவ்வொறு நாட்டிற்குமுறிய கடல் எல்லையை வைத்து அந்தந்த நாட்டுடன் சேர்ந்து கொள்வார்களா? அப்படியென்றால் இந்தக்கடல் பரப்பு இந்த நாட்டுக் கென்று பிரித்துக் கொடுத்தது அல்லாஹ்வா? அல்லது அவனுடைய ரஸுலா? எல்லை போடப்படாத கடற்பரப்பில் சில முஸ்லிம்கள் தங்கியிருந்தால் யாரோடு சேர்ந்து கொள்வார்கள்? சரியாக எல்லைக் கோட்டில் ஒரு கப்பல் நங்கூறமிட்டால் அதில் உள்ள முஸ்லிம்கள் எந்த நாட்டோடு இணைந்து கொள்வார்கள்? இவற்றுக் கெல்லாம் தீர்வு நாட்டுக்கு நாடு பிறையை கூறுபோட்டவர்களிடம் கிடைக்குமா?”***

எமது நிலைப்பாட்டில் இருந்து சகோதரிடம் அவரது கேள்வியை திருப்பி கேட்கிறோம். உதாரணமாக நீங்கள் குறிப்பிட்ட மீனவக் கப்பல் சவுதியை சேர்ந்ததாக இருந்து, அந்த வருடம் சவுதி அல்லாத ஒரு நாட்டில் பிறை கண்டு அப்பிறையை சவுதி ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் அந்த மீனவர்கள் பெருநாளை எந்த நாட்டுப்பிறையை வைத்துத் தீர்மானிப்பர்கள்? அக்கப்பல் சவுதியின் கடல் எல்லைக்குள் இருந்தால் இஸ்லாமிய ஆட்சியாளருக்கு கட்டுப்பட்டு இரண்டாவது நாளிலும் வேறு ஒரு இஸ்லாமிய நாட்டில் மூன்றாது நாள் பெருநாள் எடுத்து அந்த நாட்டின் கடற்பரப்பில் இருந்தால் மூன்றாவது நாளிலும் முஸ்லிம் அல்லாத நாட்டின் கடற்பரப்பில் இருந்தால் சர்வதேசப் பிறை என்ற அடிப்படையில் முதல் நாளிலும் அம்மீனவர்கள் பெருநாள் கொண்டாட வேண்டுமா? அப்படியென்றால் இந்த கடற்பரப்பு இந்த நாட்டிற்கு என்று பிரித்துக் கொடுத்தது அல்லாஹ்வா? அல்லது அவருடைய தூதரா? உதராணமாக சவுதிக்கும் யெமனுக்கும் மத்தியில் உள்ள எல்லைக் கோட்டில் ஒரு கப்பல் நங்கூரமிட்டால் அம்மீனவர்கள் எந்த நாட்டுடன் இணைந்து கொள்வார்கள்? எல்லா நிலையிலும் சர்வதேசப்பிறை தான் என்று வாதிடுபவர்களிடம் இவற்றிற்கெள்ளாம் தீர்வு கிடைக்குமா?

கிட்டத்தட்ட நீங்கள் கூறப்போகும் தீர்வைத்தான் நாங்களும் கூறுவோம். நீங்கள் ஆட்சியாளரை காரணம் காட்டுவீர்கள் நாங்கள் பெரும்பான்மை சமூகத்தைக் காரணம் காட்டுவோம். இதே போன்று இன்னுமொரு கேள்வியையும் உங்களிடம் கேட்கிறோம் சரியாக கப்பல் சர்வதேச தேதிக்கோட்டில் நங்கூரம் இட்டு உதாரணமாக ஒரு வெள்ளிக்கிழமை பின்னேரம் சனிக்கிழமைக்குரிய பிறை உலகில் ஓரிடத்தில் தென்பட்டால் அம்மீனவர்கள் எப்படி பெருநாள் எடுப்பார்கள்? கப்பலை இரண்டாகப் பிரித்து அதில் தேதிக் கோட்டின் மேற்குப்பகுதியில் உள்ளவர்கள் அவர்களது சனிக்கிழமையான முதல் நாளிலும் கிழக்குப் பகுதியில் உள்ளவர்கள் தங்களது சனிக்கிழமையான இரண்டாவது நாளிலும் பெருநாள் கொண்டாட வேண்டுமா? இதுவா இஸ்லாம் காட்டித்தரும் ஒற்றுமை ஒரே கப்பலில் ஒரே நேரத்தில் ஐவேளையும் தொழக்கூடியவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும் நிலையில் ஒருவர் பெருநாள் எடுக்கும் போது மற்றவர் நோன்பு பிடிக்க வேண்டுமா? இரண்டு

பகுதியினருக்கும் அதிகாலை 7 மணியாக இருக்கம் போது அவர்களில் ஒரு கோட்டைப் போட்டு இந்த கோட்டிற்கு இந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் நோன்பு பிடியுங்கள் அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் பெருநாள் தொழுங்கள் என்பது நியாயமா? இரண்டு பிரிவினருக்கும் ஒரே நேரத்தில் தான் சூரியன் உதயமாகும் போது இது உனக்க வெள்ளிக்கிழமை இது அவனுக்கு சனிக்கிழமை என்று பிரித்துக் கொடுத்தது அல்லாஹ்வா? ஒவ்வொரு நாட்டு எல்லைகளையும் அல்லாஹ் போடவில்லை என்கிறீர்களே, தேதிக் கோட்டைவளைத்து வளைத்து ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்றாற்போல் வரைந்தது அல்லாஹ்வா? எல்லா நிலையிலும் சர்வதேசப் பிறைவாதிகளிடம் இதற்கு தீர்வு தான் என்ன? தேதிக் கோடு போட்டது அல்லாஹ்வா? அல்லாஹ்வின் துதரா?

இதே போன்று தேதிக் கோட்டிற்கு நெருக்கமாக அதன் கிழக்கு பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலும் நங்கூறமிட்ட இரு கப்பல்களில் உள்ளவர்களின் நிலை என்ன? இப்போதும் எல்லா நிலையிலும் சர்வதேசப் பிறை சாத்தியமா? இந்த எல்லைப் பிரச்சினையை வைத்துத் தானே உள்ளநாட்டு பிறையினரைச் சாடுகின்றீர்கள். உங்களிடம் அதே எல்லைப்பிரச்சினை ஏற்படவில்லையா? உள்நாட்டு பிறையினரைப் பார்த்து அடம்பிடிப்பவர்கள், ஒற்றைக்காளில் நிற்பவர்கள், சவுதி அறிஞர்சபையின் தீர்பை கவ்விப்பிடிப்பவர்கள், நொண்டிச் சாட்டு கூறுபவர்கள், குருகிய கண்னோட்டம், ஏன் தெளிவிழந்து நிற்கிறார்கள்? என்றெல்லாம் விமர்சித்த உங்களிடம் இந்தப் பிரச்சினை இருப்பது ஏன்?

## ஐயமும் சிக்கலும் - 9

***“வானவியல் ஆராய்ச்சி வியக்கத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ள ஒரு காலத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிரகங்களை ஆய்வு செய்வதற்கும் அங்கு மனிதன் வாழ முடியுமா? என்ற ஆய்வை மேற் கொள்வதற்கும் விஞ்ஞானிகளின் பயனப்படலம் தெடர்ந்த வன்னமே இருக்கிறது. வின்வெளிக் கப்பல்கள் பல மாதங்கள் வருடங்கள் என வின்னிலே பறந்து விட்டு பூமியை வந்தடைகின்றன. ஏதோ ஒரு வின் வெளிப்பயனத்தில் ஒரு முஸ்லிம் விஞ்ஞானியும் இணைந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தால் பல மாதங்கள் அங்கே கழிக்க வேண்டிய அவர் எவ்வாறு ஷவ்வால் பிறையைத் தீர்மானித்து பெருநாளைக் கொண்டாடுவார்? உலகின் எந்த நாட்டின் பிறையை அவர் ஏற்றுக் கொள்வார்?”***

சகோதரின் ஒன்பதாவது கேள்வி உள்நாட்டுப் பிறையினரிடம் மாத்திரம் கேட்கப்பட வேண்டியதல்ல. சர்வதேசப் பிறையை ஆதரிக்கும் உங்களிடமும் கேட்கப்பட வேண்டும் நீங்கள் குறிப்பிட்ட விண்படலம் பூமியின் ஈர்ப்பு விசைக்கு வெளியில் சென்றால் இரவும் பகலும் மாறி மாறி அவர்களுக்கு ஏற்படுவதில்லை. ஊலகின் எங்காவது வெள்ளி பின்நேரம் சனிக்குரிய ஷவ்வால் தலைப்பிறை தென்பட்டால் அவ்விண்படலத்தில் உள்ள முஸ்லிம் விஞ்ஞானிகள் எந்த நாட்டுடன் பெருநாளை ஆரம்பிக்க வேண்டும்? ஏனெனில் அவர்களுக்கு சனிக்கிழமை, வெள்ளிக் கிழமை என்ற வித்தியாசமோ சூரிய உதயம் அஸ்தமனம் என்ற வித்தியாசமோ இல்லையல்லவா? பல நாட்டு முஸ்லிம் விஞ்ஞானிகள் அங்கிருந்தால் சவுதியை சேர்ந்த விஞ்ஞானி சவுதியின் சனிக்கிழமையை வைத்தும் அமெரிக்க விஞ்ஞானி அமெரிக்காவின் சனிக்கிழமையை வைத்தும் இலங்கை விஞ்ஞானி இலங்கையின் சனிகிழமையை வைத்தும் பெருநாள் எடுக்க வேண்டுமா? அது ஒற்றுமையாகிவிடுமா? அல்லது அனைத்து விஞ்ஞானிகளும் சேர்ந்து பிறைக்கண்ட நேரத்தில் இருந்த 24

மணித்தியாளங்களைப் பெருநாளாகக் கருத வேண்டுமா? அப்படியானால் அது சனிக்கிழமையாக ஆகிவிடுமா? பிறைக் கண்ட நேரத்தில் இருந்து அவர்கள் நாளைக் கணக்கிட வேண்டும் என்றால் இதே தீர்வை சர்வதேசப் பிறை சம்பந்தமான ஏனைய சிக்கல்களுக்கும் கொடுப்பீர்களா? ஏனெனில் ஒரு நாட்டில் அந்தப் பிறை தென்படும் போது வேறு ஒரு நாட்டு மக்கள் வெள்ளிக் கிழமை காலையில் இருப்பர்கள். அவர்களும் மேற்படி விஞ்ஞானிகளைப் போல் அந்த வேளையிலே பெருநாளை ஆரம்பித்திட வேண்டுமா? அப்படியானால் ஒரேநாளில் பெருநாள் என்ற தத்துவம் பிழைத்து விடுமே.[6]

### ஐயமும் சிக்கலும் - 10

***“நாட்டிற்கு நாடு பிறையென்பது தான் சரியென இன்னும் அடம்பிடிப்பீர்களென்றால் நாம் மேற்கூறிய விடங்களுக்கும் இங்கு கூறப்பாடாத ஏனைய அறிஞர்கள் முன்வைத்த விடயங்களுக்கும் தெளிவை கேட்டு நிற்கிறோம். அல்லது சர்வதேசப்பிறை தான் சரி என்றாலும் எமது நாட்டு மக்கள் அதை சரிகண்டு அமுல் நடாத்தும் வரை நாம் நாட்டுமக்களோடு சேர்ந்தே நிற்போம் என்றால் இது போன்ற எத்தனையோ உண்மைகள் எமது முஸ்லிம்களால் ஜீரணிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏன் அவைகளோடும் சேர்ந்து சென்று சமூக ஒற்றுமையை கட்டிக்காக்காமல் பிரிந்து நிற்கின்றீர்கள்!?”***

1- சகோதரரின் பத்தாவது ஐயம் தொடர்பாக எமது நிலையப்பாடு யாதெனில் நாட்டுக்கு நாடு பிறைதான் சரியானது என்றோ சர்வதேசப் பிறைத்தான் சரியானது என்றோ நாம் முடிவு செய்யவில்லை. இரண்டிலும் பல சிக்கல்கள் உள்ளன. எந்தளவு முஸ்லிம்கள் ஒன்று பட முடியுமோ அந்தளவு அவர்கள் ஒன்றுபட முயற்சி செய்ய வேண்டும்.

2- ஒரு பிரதேசத்தின் பெரும்பான்மை மக்கள் உள்நாட்டுப் பிறையோ சர்வதேசப் பிறையோ கடைபிடிக்கும் போது அப்பிரதேசத்தில் பெரும்பான்மை மக்களின் முடிவுக்கு மாற்றமாக ஏனையவர்கள் நடந்து கொள்வது மார்க்கத்திற்கும் அறிவிற்கும் முரணானதாகும்.

3- பிறைவிடயத்தில் இஸ்லாமிய ஆட்சியாளருக்குக் கட்டுப்பட வேண்டும் என்பது போன்றே இஸ்லாமிய ஆட்சி இல்லாத இடங்களில் அங்கு வாழும் பெரும்பான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிறைக் குழுவுக்குக் கட்டுப்பட வேண்டும்.

4- பிறை போன்றதல்லாத தனி நபர்களுடன் சம்பந்தப்படக் கூடிய மஸாயில்களில் ஆட்சியாளருக்கோ பெரும்பான்மைக்கோ கட்டுப்படத் தேவையில்லை. மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட பாவமான காரியங்களில் ஆட்சியாளருக்கோ பெரும்பான்மை மக்களுக்கோ கட்டுப்படுவது கூடவே கூடாது.

## பகுதி :4

## <u>சர்வதேச பிறையின் நடைமுறைச் சிக்கல்கள்</u>

6 மேலதிக விளக்கதிற்கு சர்வதேசப் பிறையின் சிக்கள்கள் என்ற பகுதியைப் பார்க்கவும்

சகோதரரின் ஆக்கத்தின் இரண்டாவது பகுதிக்கு எமது நிலைப்பாட்டிலிருந்து அளிக்கப்பட்ட பதில்களை சென்ற பகுதியில் பார்த்தீர்கள். சர்வதேச பிறையை பின்பற்றுவதில் பல நியாயங்களும் காரணங்களும் இருப்பதாகவும் உள்நாட்டுப் பிறையில் ஐயங்களும் சிக்கல்களும் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். சர்வதேச பிறையில் எந்த சிக்கலும் இருப்பதாக அவர் கூறவில்லை. அதுதான் சத்தியம் என்ற பாணியில் அவரது ஆக்கத்தை அமைத்திருந்தார். அப்படியானால் சர்வதேசப்பிறை சம்பந்தமாக நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டிய விடயங்களுக்கும் இன்ஷா அல்லாஹ் இனி சுட்டிக்காட்டப்போகும் விடயங்களுக்கும் அவரிடம் தெளிவிருப்பின் அதை முன் வைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

## I சிக்கலிலும் சிக்கல்

கொழும்பில் சனி பி.ப 6.30 மணிக்கு உலகில் முதலில் ஷவ்வால் தலைப் பிறை தென்பட்டதாக வைத்துக் கொள்வோம். அப்போது பின்வரும் நகரங்களது நேரங்கள்[7] எவ்வாறு இருக்கும் என்பதைக் கவனியுங்கள்.

**அட்டவணை 01**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Samoa | சனி | மு.ப | 2.00 |
| 2 | Honolulu | ,, | ,, | 3.00 |
| 3 | Anchorage | ,, | ,, | 4.00 |
| 4 | Seattle, La, Vancouver | ,, | ,, | 5.00 |
| 5 | Denver, phoenix | ,, | ,, | 6.00 |
| 6 | Mexico City, Dallas, Chicago | ,, | ,, | 7.00 |
| 7 | **Detroit, Washington, NY, Boston** | ,, | ,, | 8.00 |
| 8 | Caracas | ,, | ,, | 9.00 |
| 9 | Rio de Janeiro | ,, | ,, | 10.00 |
| 10 | Azores | ,, | நண்பகல் | 12.00 |
| 11 | Landon, Lisbon | ,, | பி.ப | 1.00 |
| 12 | Madrid, Paris, Rome | ,, | ,, | 2.00 |
| 13 | Athens, Cairo | ,, | ,, | 3.00 |
| 14 | Moscow | ,, | ,, | 4.00 |
| 15 | Abu Dhabi | ,, | ,, | 5.00 |
| 16 | Tehran | ,, | ,, | 5.30 |
| 17 | Delhi | ,, | ,, | 6.30 |

கொழும்பில் வாழும் மக்கள் மறுநாள் ஞாயிறன்று பெருநாள் எடுப்பார்கள். மேற்படி நகரங்களில் வாழ்பவர்கள் சனி பெருநாள் எடுக்க வேண்டுமா? அல்லது ஞாயிறு எடுக்க வேண்டுமா? இந்தக் கேள்விக்கு சர்வதேசப் பிறையை

[7] இங்கே நாம் குறிப்பிடும் நாடுகளின் நேரங்கள் சில வருடங்களில் வித்தியாசப்படலாம். அதற்கான காரணம் சில நாடுகள் தங்கள் நேரங்களை அவற்றின் ஸ்டேன்டட் நேரத்தில் இருந்து மாற்றிக் கொள்வதாகும். ஊதாரணமாக இலங்கையில் நேரமாற்றம் செய்யப்பட்டு மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரப்பட்டதைப் போன்றாகும். ஆனால் நாம் அதிலிருந்து குறிப்பிடும் முடிவுகள் மாறாது. நேர மாற்றத்தால் வழமையாக மறையும் அல்லாஹ்வின் சூரியன் முன்னதாகவோ, தாமதமாகவோ மறையப் போவதில்லை.

அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்கள் பின்வரும் நான்கு பதில்களில் ஒன்றைத் தான் கூற முடியும்.

***பதில் :- 1***

தகவல் கிடைத்தவுடன் நோன்பு தகவல் கிடைத்தவுடன் பெருநாள் என்ற கருத்தின் அடிப்படையில் மேற்படி நகரங்களில் வாழ்வோர் ம.்.ரிபுக்கு முன்னர் தகவல் கிடைப்பதால் நோன்பை விட வேண்டும். சனி அவர்களுக்கு பெருநாள் தினமாகும்.

**பதில் :- 1 ஐ சொல்பவர்களிடம் நாம் கேட்பது :**

1) இதற்கு என்ன ஆதாரம்?

பிரயாணக் கூட்டத்தின் சாட்சியத்தை ஏற்று நபி(ஸல்) அவர்கள் நோன்பை விட்டார்கள். மறுநாள் தொழுதார்கள் என்ற ஹதீஸின் ஆதாரத்தைக் கொண்டு தான் இவ்வாறு கூறுகிறோம் என்றால் அது தவறாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால்தான் அன்றைய தினத்தை பெருநாள் தினம் என்று அறியாது நோன்பு நோற்றார்கள். ஆனால் இங்கே நண்பகலைத் தாண்டிவிட்ட நகரங்களில் உள்ளவர்களுக்கு தகவல் கிடைக்க தாமதம் ஏற்படவில்லை. தகவல் உடனே கிடைக்கிறது. ஆனால் அப்போதுதான் உலகத்தில் ஒரு இடத்தில் முதலில் பிறையே தென்படுகிறது. பிரயாணக் கூட்டத்தின் நிகழ்வில் அன்று பெருநாளாக இருந்தும் அது அறியப்படவில்லை. நாம் உதாரணமாக குறிப்பிட்ட இந்த நிகழ்விலோ நண்பகலைத் தாண்டித்தான் பெருநாளே ஆரம்பிக்கிறது. நண்பகலைத் தாண்டிவிட்ட இந்நகரங்களில் காலையில் இருந்து பெருநாள் இருக்கவில்லை. இரு நிகழ்வுகளுக்கும் இடையே வித்தியாசம் உள்ளதால் அதனை இதற்கு ஆதாரமாகக் கொள்ள முடியாது.

2)இந்த வாதத்தின் படி பல நகரங்களுக்கு நண்பகலையும் தாண்டி இன்றும் சிலருக்கு நோன்பு திறக்க ஒரு மணித்தியாலம் அல்லது அதை விடக் குறைவான நேரம் இருக்கும் போதே பெருநாள் ஏற்படுகிறது. முழு நாளும் பெருநாளாக இருக்க வேண்டிய நிலையில் அந்த நாளின் நான்கில் மூன்று (3/4) பகுதி முடிவடைந்த பிறகு தான் பெருநாள் ஏற்படுகிறது.

இல்லை, அன்று முழு நாளும் பெருநாளாக இருந்திருக்கிறது. நாம் தான் அதை அறியவில்லை என்று எவராவது வாதித்தால் அது தவறாகும். ஏனெனில் இந்நகரங்கள் நண்பகலைத் தாண்டி விடும் வரை உலகில் எங்கும் பிறை காணப்படவில்லை. பிறை காணாத வரை பெருநாளாக இருக்க முடியாது.

3) நண்பகலைத் தாண்டித்தான் (பி.ப 6.00 மணிக்கும் தான்) அவர்களுக்கு பெருநாள் ஏற்பட்டது என்றால் அதுவரை அவர்கள் நோற்றிருந்த நோன்பு நோன்பாகக் கருதப்படுமா? ஆம் என்றால் ம.்.ரிபுக்கு முன்னரே நோன்பு திறக்க முடியுமா? முடியாதல்லவா? எனவே, இந்த வாதம் தவறானது.

இல்லை அது வரை அவர்கள் நோற்றிருந்த நோன்பு நோன்பாகக் கருதப்படமாட்டாது என்றால் ரமளானில் நோற்ற நோன்பு ஏன் நோன்பாகக் கருதப்படவில்லை? ரமளாவில் அல்லவா அவர்கள் நோன்பு நோற்றார்கள். எனவே இந்த வாதம் எந்தன் கோணத்தில் வாதிட்டாலும் தவறானது.

4) நண்பகலை தாண்டிவிட்ட நகரங்களில் வாழ்பவர்கள் மறுநாளே பெருநாள் தொழுகையை தொழ வேண்டியிருக்கும். எனவே உலகில் ஏதாவது சில அல்லது பல இடங்கள் மாறி மாறி ஒவ்வொரு வருடமும் இந்நிலைக்குட்படலாம். இதனால் மக்கள் அதிகம் சிரமப்பட வேண்டி ஏற்படலாம்.

5) அரபாவில் ஹாஜிகள் சனி கூடும் போது நாம் எப்படி ஞாயிறு அரபா நோன்பு நோற்க முடியும் போன்ற கேள்விகளை இவர்களால் கேட்க முடியாது. அது அவர்களின் வாதத்திற்கு முரணானது.

நாம் கூறிய உதாரணத்தையே துல்ஹஜ் மாதத்தின் தலைபிறையை தீர்மானிக்கும் நிகழ்வாக வைத்துக் கொள்வோம். சனி பி.ப 6.30 மணிக்கு பிறை தென்பட்டதால் கொழும்பில் துல்ஹஜ் மாதத்தின் முதல் நாள் ஞாயிறாக இருக்கும். கொழும்பில் தலை பிறைகாணும் போது ஸவூதியில் சனி பி.ப 4.30 ஆக இருக்கும். எனவே இந்த வாதத்தின் படி ஸவூதியில் சனி தான் துல்ஹஜ் மாதத்தின் முதல் நாள். எனவே இலங்கையில் ஒன்பதாவது நாள் ஒரு திங்களாகவும் ஸவூதியில் ஒரு ஞாயிறாகவும் இருக்கும்.

6) உலக முஸ்லிம்களில் சிலருக்கு நோன்பு அல்லது பெருநாள் சனியும் வேறு சிலருக்கு ஞாயிறும் எப்படி வர முடியும் என்று இவர்களால் கூற முடியாது. ஏனெனில் Colombo (பி.ப 6.30) Dhaka(பி.ப 7.00), Bangkok(பி.ப8.00), Jakartha(பி.ப 8.00), Hangkong(பி.ப 9.00), Beijing(பி.ப 9.00), Taipei(பி.ப 9.00) Seoul, Tokyo(பி.ப 10.00), Guam(பி.ப 11.00), Sydney(பி.ப 11.00) போன்ற நகரங்களுக்கு விடியும் காலையான ஞாயிறும் முன்னர் நாம் அட்டவணை 1 இல் குறிப்பிட்ட நகரங்கள் சனியும் பெருநாள் எடுக்க வேண்டும்.

7)இதே உதாரணத்தை ரமழான் தலைப் பிறையை தீர்மானிக்கும் நிகழ்வாக வைத்துக் கொள்வோம். கொழும்பில் வசிப்பவர்கள் ஞாயிறு நோன்பு நோற்பர். அட்டவணை 1 இல் உள்ள நகரங்களில் வசிப்பவர்கள் சனி தான் நோன்பு நோற்க வேண்டும். Denver தொடக்கம் Tehran வரையுள்ள நகரங்கள் நோன்பை ஆரம்பிக்க வேண்டிய நேரத்தை தாண்டி சனி காலையிலும், நண்பகலிலும், மாலையிலும் இருக்கும். இந்நகரங்களில் இருப்பவர்கள் எவ்வாறு நோன்பு நோற்பது? நோன்பை துவக்க வேண்டிய பஜ்ர் நேரம் தாண்டி விட்டதல்லவா? சிலர் மஃரிப் நேரத்தையும் நெருங்கி விட்டனரல்லவா?

நபி(ஸல்) அவர்கள் முஹர்ரம் 10வது நாளுடைய ஆஷுரா நோன்பை ஆரம்ப காலத்தில் கட்டாயக் கடமையாக்கிய போது பஜ்ருக்குப் பிறகு தான், நோன்பு நோற்காதவர்களை நோற்குமாறு கட்டளையிட்டார்கள். இதனை ஆதாரமாகக் கொண்டு தகவல் கிடைத்தவர்கள் தகவல் கிடைக்கின்ற அந்த நேரத்திலிருந்து நோன்பை ஆரம்பிக்க வேண்டும் என்று சிலர் வாதிடலாம்.

ஆனால் இவர்களது வாதம் தவறாகும். முஹர்ரம் 10வது நாள் நோன்பு அப்போது தான் கடமையாகிறது. ஏற்கனவே கடமையாக்கப்பட்டிருக்கவில்லை. பஜ்ரில் இருந்து அவர்களுக்கு நோன்பு கட்டாயமாக்கப்பட்ட நேரம் வரையுள்ள காலப்பகுதியில் அவர்களுக்கு நோன்பு கட்டாயமான கடமையாக இருக்கவில்லை. அல்லது கட்டாயம் என்று அறியப்பட்டிருக்கவில்லை. கட்டாயமாக்கப்பட்ட ஒன்றை கட்டாயமாக்கப்படாத நேரத்தில் அல்லது அறியாமையால் செய்யவில்லை என்பதனால் அல்லாஹ் குற்றம்

பிடிக்கமாட்டான். கடமையான பிறகு அல்லது அறிந்த பிறகு செய்யாவிட்டால் தான் குற்றம் பிடிப்பான். மதுபானம் தடை செய்யப்பட முன் அல்லது மது தடை செய்யப்பட்டது என்பதை அறியாமல் ஒருவர் மது அருந்தியிருந்தால் அவர் மீது குற்றம் கிடையாது.

ரமளான் நோன்போ எங்களுக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்னரே கடமையாக்கப்பட்டு விட்டது. அது பஜ்ரில் இருந்து தான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதும் கட்டாயமாக்கபட்டுவிட்டது. எனவே பி.ப 5.00 மணிக்கு ஒருவர் நோன்பை ஆரம்பித்தால் பஜ்ரில் இருந்து பி.ப 5.00 மணி வரை உள்ள நேரத்தில் அவருக்குக் கடமையாக்கப்பட்டிருந்த நோன்பை நோற்கவில்லை என்றாகிவிடும். அந்த நேரத்தில் (5.00 மணிக்கு) நோன்பை ஆரம்பிக்க தூக்கம், மறதி, அறியாமை, தகவல் தாமதமாக கிடைத்தல் போன்ற எந்த நியாயமான காரணமும் கிடையாது.

இவர்களுக்கு தகவல் தாமதமாகக் கிடைத்தது என்று சிலர் கூறலாம். ஆனால் அது தவறாகும். ஏனெனில் பிறை கண்ட தகவல் உடனுக்குடன் கிடைக்கிறது. அப்படி தகவல் கிடைக்கின்ற நேரத்தில் பி.ப 5.00 மணியாக இருக்கிறது.

ஆனால் நபி(ஸல்) அவர்களின் காலத்தில் பஜ்ருக்குப் பிறகு காலையில் நோன்பை ஆரம்பித்த ஸஹாபாக்களோ குற்றம் பிடிக்கப்படமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு பஜ்ரில் இருந்து காலை வரையுள்ள நேரத்தில் கட்டாயம் என்ற பொறுப்பு இருக்கவில்லை அல்லது கட்டாயம் என்பதை அறிந்திருக்கவில்லை.

ஒருவர் ரமளானில் பகல் நேரத்தில் இஸ்லாத்தை ஏற்கிறார் அல்லது ஒருவர் மீன் பிடிக்க கடலுக்குச் சென்று அல்லது வேட்டைக்குச் சென்று காலையில் ஊருக்கு வந்து பார்க்கும் போது மக்கள் ரமளான் முதல் நோன்பு நோற்றிருக்கிறார்கள் அல்லது ஒருவர் பிறை கண்டதை மறந்து விட்டார் அல்லது தூக்கம் அவரை மிகைத்து விட்டது. பகல் நேரத்தில் தான் நோன்பு என்பது நினைவுக்கு வருகிறது அல்லது இரவு பிறை கண்டிருந்தும் தகவல் கிடைப்பதற்கு ஏதோ ஒரு காரணத்தால் தாமதமாகி விட்டது போன்ற கட்டங்களில் பஜ்ருக்குப் பிறகு இருந்து நோன்பை ஆரம்பிக்க இந்த ஹதீஸை ஆதாரமாக முன் வைத்தால் அதை நியாயம் என்று சொல்லலாம்.

ஆனால் இவர்களின் கருத்திற்கும் இந்த ஹதீஸிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அல்லாஹ் பஜ்ரில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கட்டளையிட்ட நோன்பை எப்படி எந்த நியாயமான காரணமும் இல்லாது பஜ்ருக்குப் பிறகு காலையிலும், பகலிலும், மாலையிலும் ஆரம்பிக்க முடியும்.

இவர்கள் ஆதாரம் காட்டும் இந்த ஹதீஸ் பிறையை தீர்மானிப்பதுடன் சம்பந்தப்பட்ட ஹதீஸ் அல்ல என்பதை நினைவில் கொள்க.

எனவே நியாயமான காரணமின்றி அரை நோன்பு, முக்கால் நோன்பு, கால் நோன்பு, அரைக்கால் நோன்பு போன்றவற்றுக்கு மார்க்கத்தில் அனுமதியில்லை.

***பதில் - 2.***

தலைப்பிறை தென்படும் நகரில் விடியும் காலை என்ன நாளாக இருக்குமோ அந்த நாளைத்தான் முழு உலகமும் முதல் நாளாக எடுக்க வேண்டும் என்ற

கருத்தின் அடிப்படையில் இலங்கையில் தென்பட்ட பிறை ஞாயிறுக்குரியது என்பதால் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்ட நகரங்கள் ஞாயிறு தான் பெருநாள் எடுக்க வேண்டும். சனியன்று நோன்பை முழுமையாக நோற்க வேண்டும்.

**பதில் - 2 ஐ சொல்பவர்களிடம் நாம் கேட்பது?**

1) உலகில் ஒரு இடத்திலாவது பிறை கண்ட தகவல் கிடைத்த பிறகும் குறிப்பாக சில நகரங்களுக்கு மு.ப 2.00, 3.00, 4.00, 5.00 மணிகளுக்கு முன்னரே தகவல் கிடைத்தும் பெருநாள் தொழுவதற்கும் கொண்டாடுவதற்கும் முழுமையான நேரமிருந்தும் பெருநாள் எடுக்காது இருப்பது சரி தானா? அதற்கு என்ன ஆதாரம்?

2) அப்படியானால் இதே போன்று தான் Sydney இல் சனி பி.ப 7.00 மணிக்கு ஷவ்வால் தலைப்பிறை தென்பட்டால் அப்போது வெள்ளி பி.ப 10.00 மணியாக இருக்கும் Samoa நகர் மக்கள் விடியும் சனியில் பெருநாள் எடுக்காது ஞாயிறு தான் எடுக்க வேண்டுமா?

அதே பிறை சனி பிற்பகல் ஏழு மணிக்கு – NUKUALOFA இல் தென்பட்டிருந்தால் அப்போது SAMOA, MIDWAY ISLAND இல் வெள்ளி பிற்பகல் 7 மணியாக இருக்கும். FIGI இல் சனி பிற்பகல் 7 மணிக்குத் தென்பட்டிருந்தால் SAMOA போன்ற இடங்களில் வெள்ளி 8 மணியாக இருக்கும். அட்டவணையில் அதைத் தொடர்ந்து வரக்கூடிய இடங்களுக்கு முறையே ஒவ்வொரு மணி நேரம் கூடிக் கொண்டு செல்லும். இப்படி கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் சூரியன் மறையக்கூடிய நாடுகளாக இருந்தும் வளைத்து மடக்கிப் போடப்பட்டிருக்கும் தேதிக் கோட்டிற்கு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் இருப்பதால் நாள் வித்தியாசப்படுகின்றது. இந்த அளவிற்கு நெருக்கமாக இருந்தாலும் அடுத்த நாள் சூரியன் மறையும் போதுதான் FIGI, SAMOA போன்ற நகரங்களில் உள்ள மக்களுக்கு நாள் ஆரம்பிக்குமா? தேதிக் கோடு அல்லாஹ்வால் போடப்பட்டதா? மனிதர்கள் போட்டதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் ஏன் நாடுகளுக்கிடையில் மனிதர்கள் போட்ட கோட்டை காரசாரமாக விமர்சிக்கிறீர்கள்? எல்லைப் பிரச்சினை நாட்டுக்கு நாடு பிறையில் இருப்பதாக விமர்சிப்பவர்களிடத்திலும் எல்லைப் பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. உலக நாடுகள் தேதிக் கோட்டில் மாற்றம் செய்து NUKUALOFA வுடன் SAMOA வை இணைத்தால் இரண்டு இடங்களிலும் வாழ்பவர்கள் ஒரே நேரத்தில் பெருநாள் எடுக்க வேண்டும் என்று சொல்ல மாட்டீர்களா?

3)இந்த வாதம் தவறானது என்பதற்கு பின்வரும் உதாரணத்தைப் பாருங்கள். Samoa இல் சனி பி.ப 7.00 மணிக்கு ஷவ்வால் தலைபிறை தென்பட்டால் ஞாயிறு அங்கு வாழும் மக்களுக்கு பெருநாளாகும். Samoa இல் பிறை தென்படும் நேரத்தில் பின்வரும் நகரங்களின் நேரங்களை கவனியுங்கள்.

**அட்டவணை 11**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | NUKUALOFA. | ஞாயிறு | மு.ப | 7.00 |
| 2 | FIJI, KAMCHATKA, MARSHAII IS, AUCKLAND, WELLINGTON. | ,, | ,, | 6.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | MAGADAN, SOLOMON IS, NEW COLEDONIA. | ,, | ,, | 5.00 |
| 4 | **BRISBANE, CANBEERRG, MELBOURNE, GUAM, SYDNEY, PORT MORESBY, HOBART, VLADIVOSTOK.** | ,, | ,, | 4.00 |
| 5 | Seoul, Tokyo | ,, | ,, | 3.00 |
| 6 | Taipei, Beijing, Hong Kong | ,, | ,, | 2.00 |
| 7 | Jakarta, Bangkok | ,, | ,, | 1.00 |
| 8 | Dhaka | ,, | நண்பகல் | 12.00 |
| 9 | Delhi, Colombo | ,, | பி.ப | 11.30 |
| 10 | Abu Dhabi | ,, | ,, | 10.00 |
| 11 | Tehran | ,, | ,, | 10.30 |
| 12 | Moscow | ,, | ,, | 9.00 |
| 13 | Cairo, Athens | ,, | ,, | 8.00 |
| 14 | Rome, Paris, Madrid | ,, | ,, | 7.00 |
| 15 | Lisbon, London | ,, | ,, | 6.00 |
| 16 | Azores | ,, | ,, | 5.00 |
| 17 | Rio de Janeiro | ,, | ,, | 3.00 |
| 18 | Caracas | ,, | ,, | 2.00 |
| 19 | NY, Boston, Washington, Detroit | ,, | ,, | 1.00 |
| 20 | Dallas, Chicago, Mexico City | சனி | நள்ளிரவு | 12.00 |
| 21 | Denver, Phoenix | ,, | பி.ப | 11.00 |
| 22 | La, Vancouver, Seattle | ,, | ,, | 10.00 |
| 23 | Anchorage | ,, | ,, | 9.00 |
| 24 | Honolulu | ,, | ,, | 8.00 |

மேற்படி அட்டவணை 11 இல் உள்ள அனைத்து நகரங்களில் வாழும் மக்களும் ஞாயிறு பெருநாள் எடுக்க வேண்டுமா? குறிப்பாக ஞாயிறு பி.ப 4.00 மணியை தாண்டி விட்ட Sydney, Guam போன்ற நகரங்களுக்கு மேலே உள்ள நகரங்களிலும் ஞாயிறு நண்பகல் 12.00 மணியை தாண்டிய நகரங்களிலும் வாழும் மக்களின் நிலை யாது? அவர்கள் அப்போதிலிருந்து பெருநாளை எடுத்து நோன்பை விடுவதா?

நோன்பை விட்டு பெருநாள் எடுப்பதற்கு பிரயாணக் கூட்டத்தின் ஹதீஸ் தான் ஆதாரம் என்றால் அது தவறாகும். ஏனெனில் நபி(ஸல்) அவர்களுக்கோ பிறை கண்ட பிறகும் அன்றைய தினத்தில் பெருநாளாக இருந்தும் தகவல் கிடைப்பதற்கே தாமதம் ஏற்பட்டது. ஆனால் இந்நகரங்களில் வாழ்வோருக்கு தகவல் கிடைக்க தாமதம் ஏற்படவில்லை, தகவல் உடனே கிடைக்கிறது. பெருநாள் தினம் ஏற்படுவதே அவர்கள் நண்பகலை தாண்டிய பிறகு தான்.

இது போன்ற நிலைகள் தொடர்ந்தால் ஒவ்வொருவரிடமும் உலகில் ஒரு பகுதியினர் பெருநாளை மாலையில் ஆரம்பித்து மறுநாள் பெருநாள் தொழுகையை நிறைவேற்ற வேண்டி ஏற்படலாமல்லவா?

4) இந்த வாதத்தின் படியும் பல நகரங்களுக்கு நண்பகலையும் தாண்டி அல்லது மாலை நேரத்தில் பெருநாள் ஏற்படுகிறது. பெருநாள் தினத்தின் பெரும்பாலான பகுதி

சென்று நாள் முடிவடைய குறைவான நேரமே எஞ்சி இருக்கும் நிலையில் பெருநாள் ஏற்படுகிறது.

இந்நிலையில் அது வரை அவர்கள் நோற்றிருந்த நோன்பு நோன்பாகக் கருதப்படுமா? ஆம் என்றால் ம.ஃ.ரிபுக்கு முன்னரே நோன்பு திறக்க மார்க்கத்தில் அனுமதி இல்லை அல்லவா? இதனால் இந்த வாதம் தவறானதாகும்.

இல்லை அதுவரை அவர்கள் நோற்றிருந்த நோன்பு நோன்பாகக் கருதப்படமாட்டாது என்றால் ஏன் ரமளானில் நோற்ற நோன்பு நோன்பாகக் கருதப்படவில்லை? மார்க்கம் அவர்களை வீணாக வதைத்ததா? எனவே இது தவறான வாதமாகும்.

இல்லை அன்று முழுநாளும் பெருநாளாக இருந்திருக்கிறது. நாம் தான் அதை அறிந்திருக்கவில்லை என்று எவராவது வாதித்தால் அதுவும் தவறாகும். ஏனெனில் பிறை காண முன் எப்படி பெருநாள் ஏற்பட முடியும்? அந்த நேரம் வரை பிறை எங்கும் காணப்படவில்லையே? இங்கே தகவல் கிடைக்காததால் தாமதம் ஏற்படவில்லை. உடனே தகவல் கிடைக்கிறது. பிறை காணாததால் தான் தாமதம் ஏற்பட்டது.

இதை விட மேலாக ஞாயிறு சூரியன் மறைந்து விட்ட NUKUALOFA மக்கள் என்ன செய்வது? அவர்கள் அன்றைய தினம் பிடித்து முடித்த நோன்பின் நிலை என்ன? அவர்கள் பிடித்த நோன்பை நோன்பில்லை என்பதா? அவர்கள் நோன்பு பிடித்துக் கொண்டிருக்கும் போது பிறை தொன்படவே இல்லையே? ஷவ்வால் பிறை தென்பட முன்னர் நோற்ற ஒரு நோன்பை நாமாக உருவாக்கிக் கொண்ட ஒரு தத்துவத்திற்காக நோன்பு இல்லை என்று சொல்லலாமா? பிறை காண முன் பிடித்த நோன்பை நோன்பு இல்லை என்பது “பிறை கண்டு நோன்பை விடுங்கள்” என்ற ஹதீஸிற்கு முரணல்லவா? இல்லை அவர்கள் பிடித்த நோன்பு நோன்பாகக் கருதப்பட வேண்டும் என்றால் ஒரே நாளில் பெருநாள் என்ற தத்துவம் உடைந்து விடுமல்லவா? எப்படிப்பார்த்தாலும் முரண்படுகிறதல்லவா?

5) ஒரு நாட்டில் பெருநாள் கொண்டாடுவதை நாம் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கும் போது எப்படி நோன்பு நோற்பது என்று இவர்களால் கேட்க முடியாது. Sydney இல் ஞாயிறு காலை மு.ப 7.00 மணிக்கு நோன்புப் பெருநாள் தொழுகை நடைபெறும் போது Samoa, Honolulu, Anchorage, Seattle, La, Vanconker, Denver, phoenix, mexico city, Dellas, Chicago, Detroit, Wastington, Ny, Boston, Caracas போன்ற நகரங்களில் முறையே சனி மு.ப 10.00, 11.00, 12.00, சனி பி.ப 1.00, 2.00, 3.00, 4.00, 5.00 என்றவாறு நேரம் அமைந்திருக்கும். இந்நகரங்களில் உள்ளவர்கள் நோன்பு நோற்றவர்களாக இருப்பார்கள். Sydney இல் உள்ளவர்களை தொலைகாட்சியூடாக அல்லது இணையத்தினூடாக பார்க்கவும் முடியும்.

6) மேற்படி அட்டவணை 1, அட்டவணை 11, உதாரணங்களை ரமளான் தலைபிறையைத் தீர்மானிக்கும் நிகழ்வாக வைத்துக் கொள்வோம்.

அட்டவணை 1 இல் உள்ள நகரங்களில் வாழ்வோர் அனைவரும் ஞாயிறன்றே ரமளான் நோன்பை ஆரம்பிக்க வேண்டும் என்ற இவர்களின் வாதத்தின் அடிப்படையில் சனி மு.ப 2.00, 3.00, 4.00, 5.00 மணியைத் தாண்டாத அதாவது பஜ்ரை தாண்டாத

Samoa, Honolulu, Anchorage, Seattle, La, Vancouver போன்ற நகரங்களில் வாழ்வோரும் ஞாயிறன்றே நோன்பை ஆரம்பிக்க வேண்டும்.

மேற்படி நகரங்களில் உள்ளவர்களுக்கு பஜ்ர் நேரத்துக்கு முன்னரே தகவல் கிடைத்தும் சனியன்று நோன்பு நோற்பதற்கான சந்தர்ப்பம் இருந்தும் நோன்பு நோற்காதிருப்பது எந்த வகையில் நியாயம்?

இதே போன்று தான் Sydney இல் சனி பி.ப 7.00 மணிக்கு ரமளான் தலைபிறை தென்பட்டால் அப்போது வெள்ளி பி.ப 10.00 மணியாக இருக்கும். Samoa நகர மக்கள் விடியும் சனியில் நோன்பை ஆரம்பிக்காது ஞாயிறு தான் ஆரம்பிக்க வேண்டுமா?

இந்தப் பிறை சனி பி.ப 07:00 மணிக்கு NUKUALOFA இல் தென்பட்டிருந்தால் SAMOA இல் வெள்ளி பி.ப 07:00 மணியாக இருக்கும். 16 நிமிட வித்தியாசத்தில் சூரியன் அஸ்தமனமாகி, ஒன்றுக்கொன்று நெருக்கமாக இருக்கும் வானத்தைக் கொண்ட இரு இடங்களில் ஒன்றில் கண்ட பிறையை ஏற்றுக் கொள்ளாமல் இது உனக்குரிய பிறை – எனக்குறியதல்ல என்று வித்தியாசப்படுத்தி எல்லை போடுவது சரிதானா? உள்நாட்டுப் பிறையினர் எல்லை போடுவது மட்டும் தானா தவறு? ஒரு காலத்தில் இரண்டு நகரங்களும் ஒரே நாளைக்குக் கொண்டு வரப்பட்டு அப்போது இதே போன்று பிறை தென்பட்டால் இங்கே தென்பட்டதை அடுத்த நாட்டில் உள்ளவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லை பிரிக்கக் கூடாது - என்று சொல்லுவது சரிதானா? மனிதர்களால் போடப்படும் எல்லைகளால், அரசியலால் பிளவுபட்ட எல்லைகளால் மார்க்கத்தின் சட்டம் மாறாது என்ற நிலைப்பாட்டில் எல்லாக் கட்டத்திலும் உறுதியாக நிற்பீர்களா? உள்நாட்டுப் பிறையை ஆதரிப்பதால் இடத்துடன் (நிலத்துடன்) சம்பந்தப்பட்ட எல்லைப் பிரச்சினை இருப்பது போலவே சர்வதேசப் பிறையை ஆதரிப்பதால் காலத்துடன் (நேரத்துடன்) சம்பந்தப்பட்ட எல்லைப் பிரச்சினை இருக்கிறது. அது மாத்திரமல்லாது சர்வதேசப் பிறையிலும் இடத்துடன் சம்பந்தப்பட்ட எல்லைப் பிரச்சினையும் இருக்கிறது.

7) அதே போன்று அட்டவணை 11 ஐ கவனியுங்கள். Samoa இல் சனி பி.ப 7.00 மணிக்கு ரமளான் தலைபிறை தென்பட்டதாக வைத்துக் கொள்வோம். அட்டவணை 11 இல் Nukualafa தொடக்கம் London வரையுள்ள நகரங்கள் ஞாயிறன்று பஜ்ர் நேரத்தையும் தாண்டியிருக்கும். சில நகரங்கள் காலையிலும் வேறு சில நண்பகலிலும் மற்றும் சில மாலையிலும் இருக்கும்.

இந்நகரங்கள் ரமளான் நோன்பை காலையிலும், நண்பகலிலும், மாலையிலுமா ஆரம்பிக்க வேண்டும்?

குறிப்பாக ஞாயிறு மாலை 4.00, 5.00, 6.00, மணியைத் தாண்டி விட்ட நகரங்களில் வாழ்மக்கள் 4.00, 5.00, 6.00 மணிக்குத் தான் நோன்பை ஆரம்பிக்க வேண்டும்?
பதில் 1 ஐ கூறியவர்களிடம் கேட்டதையே இவர்களிடமும் கேட்கிறோம்.

பஜ்ரில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய நோன்பு எவ்வாறு மாலை 4.00, 5.00 மணிக்கு ஆரம்பிக்க முடியும்?

ஆஷுரா நோன்பு இஸ்லாத்தின் ஆரம்ப கட்டத்தில் கட்டாயக் கடமையாக்கப்பட்ட போது பஜ்ருக்குப் பிறகு காலைப் பொழுதில் தான் நபி(ஸல்) அவர்கள் அன்று நோன்பு நோற்காதவர்களை நோன்பு நோற்குமாறு ஏவினார்கள். எனவே தகவல் கிடைக்காதவர்கள் தகவல் கிடைக்கின்ற நேரத்திலிருந்து நோன்பை ஆரம்பிக்க வேண்டும். 4.00, 5.00, 6.00 மணிக்கு தகவல் கிடைத்தால் அந்த நேரத்திலிருந்து ஆரம்பிக்கலாம் என்று சிலர் வாதிடலாம்.

இவர்களின் இந்த வாதம் தவறாகும். ஆஷுரா நோன்பே நபி(ஸல்) அவர்கள் ஏவிய அந்த நேரத்தில் தான் கடமையாகிறது. ஏற்கனவே கடமையான நிலையில் இருக்கவில்லை. பஜ்ரில் இருந்து அவர்களுக்குக் கட்டாயமாக்கப்பட்ட நேரம் வரையுள்ள காலப்பகுதியில் நோன்பு நோற்க வேண்டிய கட்டாயப் பொறுப்பு இருக்கவில்லை அல்லது கட்டாயம் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

மார்க்கத்தில் கடமையாக்கப்பட்ட ஒரு விடயத்தை கடமையாக்கப்படாத நேரத்தில் அல்லது அறியாமையால் செய்யவில்லை என்பதால் அல்லாஹ் குற்றம் பிடிப்பதில்லை. அதனால் தான் நபி(ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுக்கு காலையிலிருந்து அதாவது அவர்களுக்கு ஏவப்பட்ட அல்லது அவர்கள் அறிந்த நேரத்திலிருந்து நோன்பை துவக்குமாறு ஏவினார்கள்.

இந்த நிகழ்வை இன்றைக்கு நண்பகலிலும் மாலையிலும் நோன்பை துவக்குவதற்கு ஆதாரமாகக் கொள்ள முடியாது.

ரமளான் நோன்போ எங்களுக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்பே கடமையாக்கப்பட்டு விட்டது. அது பஜ்ரில் இருந்து தான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் கட்டாயமாக்கப்பட்டு விட்டது.

எனவே மாலை 4.00, 5.00, 6.00 மணிக்கு நோன்பை யாராவது ஆரம்பித்தால் பஜ்ரில் இருந்து அந்த நேரம் வரையுள்ள காலத்தில் அவர் மீது கடமையாக இருந்த நோன்பிற்காக (அவர் அதை நோற்காததற்காக) குற்றம் பிடிக்கப்படலாம்.

அந்த நேரம் வரை நோன்பை தாமதப்படுத்தியதற்காக தூக்கம், மறதி, அறியாமை, தகவல் தாமதமாக கிடைத்தல் போன்ற எந்த நியாயமான காரணமும் கிடையாது.

இவர்களுக்கு தகவல் தாமதமாக கிடைத்ததால் தானே 4.00, 5.00, 6.00 மணிக்கு நோன்பை ஆரம்பித்தார்கள் என்று யாராவது கூறினால் அது தவறாகும். ஏனெனில் பிறை கண்ட தகவல் உடனே கிடைக்கிறது. தகவல் கிடைக்கின்ற அந்த நேரத்தில் அல்லது பிறை காண்கின்ற நேரத்தில் இவர்களுக்கு பி.ப 4.00, 5.00, 6.00 மணியாக இருக்கிறது. பஜ்ருக்கு முன்னரே பிறை கண்டு தகவல் கிடைக்க பி.ப 4.00, 5.00, 6.00 மணியாகிவிட்டது என்ற நிலை இவர்களுக்கு இல்லை.

அல்லாஹ் பஜ்ரில் இருந்து கடமையாகும் என்று கூறிய நோன்பு எப்படி மாலை 4.00 மணிக்கும் 5.00 மணிக்கும் 6.00 மணிக்கும் கடமையாகும்?

ஒருவர் ரமளானில் பகல் பொழுதில் இஸ்லாத்தை ஏற்கிறார் அல்லது ஒருவர் மீன் பிடிக்க கடலுக்கு சென்று அல்லது வேட்டைக்குச் சென்று காலையில் ஊருக்குத் திரும்பி வந்து பார்க்கும் போது மக்கள் ரமளான் முதல் நோன்பை நோற்றிருக்கிறார்கள் அல்லது ஒருவர் பிறை கண்டதை மறந்து விட்டார் அல்லது தூக்கம் அவரை மிகைத்துவிட்டது. பகல் நேரத்தில் தான் நோன்பு நோற்கவில்லையே

என்று நினைவுக்கு வருகிறது அல்லது பிறை காணப்பட்டிருந்தும் தகவல் கிடைப்பதற்கு தாமதமாகிவிட்டவர்கள் போன்றோருக்கு ஆஷுரா நோன்பு கடமையாக்கப்பட்ட நிகழ்வை ஆதாரமாகக் கொண்டு தீர்ப்புக் கூறினால் அதை நியாயம் எனலாம்.

இந்நிகழ்வை பிறையோடு சம்பந்தப்பட்ட நிகழ்வாகக் கொள்ளலாகாது.

எனவே நியாயமான காரணமின்றி அரை நோன்பு அரைக்கால் நோன்பு 30 நிமிட நோன்ப 10 நிமிட நோன்பு போன்ற நோன்புகளை நோற்க இந்த ஹதீஸ் ஆதாரமாகாது.

இதை விட ஞாயிறு சூரியன் மறைந்த பிறகு நோன்பு ஏற்பட்ட NUKUALOFA மக்களின் நிலை என்ன? அவர்களுக்கு ஒரு நோன்பு தவறிவிட்டது, அதை கலா செய்ய வேண்டும் - என்று சொல்வதா? ம.ஃரிபுக்கு முன்னர் எங்குமே பிறை தென்படாத போது எப்படி அந்த நாளில் நோன்பு தவறிவிட்டது என்றும் அதை கலா செய்ய வேண்டும் என்றும் சொல்வது? “பிறை கண்டு நோன்பு வையுங்கள்”, சக்குடைய நாளில் நோன்பு வைக்கக்கூடாது என்ற ஹதீஸ்களுக்கு இந்த வாதம் முரணல்லவா? இல்லை அவர்களுக்கு நோன்பு தவறிவிடவில்லை, கலாச் செய்யவும் தேவயில்லை என்றால் ஒரே நாளில் நோன்பு என்ற தத்துவம் சரிந்து விட்டதல்லவா?

ஓரிடத்தில் லுஹறுக்குப் பின்னர் பிறை தென்பட்டால் அந்தப் பிறை எதிர்வரக்கூடிய இரவுக்குறியது, அந்த நாள் அவர்கள் நோன்பை ஆரம்பிக்கக்கூடாது என்பதில் எந்த ஒரு அறிஞரும் கருத்து வேறுபடவில்லை, அது இஜ்மாவாகும் என்று சில அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளதைப் பற்றி என்ன செல்கிறீர்கள்?

***பதில் - 3***

உலகில் முதலில் தலை பிறை எந்தப் பிரதேசத்தில் தென்படுகிறதோ அந்தப் பிரதேசம் முதலில் மாதத்தை அடைகிறது. அதையடுத்து தொடர்ந்து இரவை அடையும் ஒவ்வொரு பிரதேசங்களும் மாதத்தை அடைந்து கொண்டிருக்கும் என்ற வாதத்தின் அடிப்படையில் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்ட நகரங்கள் கொழும்புக்குப் பின்னர் இரவை அடையும் நகரங்கள் என்பதால் அவை ஞாயிறன்றே பெருநாள் எடுக்க வேண்டும். ஆனால் கொழும்புக்கு முன்னர் இரவை அடைந்துவிட்ட நகரங்களான Dhaka(பி.ப 7.00), Bangkoj(பி.ப 8.00), Jakartha(பி.ப8.00) Hongkong (பி.ப 9.00), Beijig(பி.ப 9.00), Taipei(பி.ப 9.00) Seoul, tokyo(பி.ப 10.00) Guam (பி.ப 11.00), sydney (பி.ப 11.00) போன்ற நகரங்கள் அவர்களது விடியும் காலையான ஞாயிறு பெருநாள் எடுக்காது அந்த நாளில் நோன்பு நோற்றுவிட்டு திங்கள் தான் பெருநாள் எடுக்க வேண்டும்.

**பதில் - 3 ஐ சொல்பவர்களிடம் நாம் கேட்பது :**

1)இந்த வாதத்திற்கான ஆதாரம் என்ன? பிரயாணம் கூட்டத்தின் ஹதீஸ் தான் இதற்கான ஆதாரம் என்றால் அது தவறாகும். ஏனெனில் பிரயாணக் கூட்டம் மதீனாவுக்கு முன்னர் இரவை அடையும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ஹதீஸில் இல்லை. அவர்கள் மதீனாவுக்கு பின்னர் இரவை அடையும் பிரதேசத்தில் இருந்து கூட வந்திருக்கலாம். நபி(ஸல்) அவர்கள் பிரயாணக் கூட்டத்திடம் மதீனாவுக்கு முன்னர் ம.ஃரிபை அடையும் பிரதேசத்திலிருந்து (மதீனாவுக்கு

கிழக்கிலிருந்து) வந்தீர்களா? அல்லது மதீனாவுக்குப் பின்னர் ம∴ரிபை அடையும் பிரதேசத்திலிருந்து (மதீனாவுக்கு மேற்கிலிருந்து) வந்தீர்களா? என்று கேட்கவில்லை. இவர்களது வாதம் தவறானது என்பதற்கே இந்த ஹதீஸ் சான்றாகவுள்ளது.

2) இந்த வாதத்தை முன் வைப்பவர்கள் ஸவூதியில் பிறை கண்டதை வைத்து இலங்கையிலோ இந்தியாவிலோ விடியும் காலையில் பெருநாளை அல்லது நோன்பை எடுக்க முடியாது. உதாரணமாக சனி பி.ப 7.00 மணிக்கு ஸவூதியில் ஷவ்வால் தலைப் பிறை தென்பட்டால் அப்போது இலங்கையில் சனி பி.ப 10.00 மணியாக இருக்கும். ஞாயிறு ஸவூதியில் பெருநாள் எடுப்பர். ஆனால் இலங்கையில் வாழ்பவர்கள் ஸவூதி பிறை அடிப்படையில் பெருநாள் எடுக்க முடியாது. ஏனெனில் இலங்கை ஸவூதிக்கு முன்னரே இரவை அடைந்துவிடுகிறது.

அதே போன்று டில்லியிலோ பம்பாயிலோ பிறை தென்பட்டதை வைத்தும் இலங்கையில் பெருநாளோ நோன்போ எடுக்க முடியாது. அவை இலங்கைக்குப் பிறகு இரவை அடையும் நகரங்களாகும். கொழும்பில் காணும் பிறையை அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பு மக்கள் செயற்பட முடியாது. மட்டக்களப்பு, கொழும்புக்கு சில நிமிடங்களுக்கு முன்னரே இரவை அடைந்து விடுகிறது.

3) சர்வதேசத்திற்கும் ஒரே நாளில் பெருநாள் ஒரே நாளில் நோன்பு என்ற வாதத்தை இவர்களால் வைக்க முடியாது.

4) அரபாவில் ஹாஜிகள் கூடியிருப்பதை நேரடியாக தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டு நாம் எப்படி நோன்பு பிடிக்காமல் இருக்க முடியும்? மக்காவில் பெருநாளாக இருக்கும் நாளில் நாம் எப்படி நோன்பு பிடிக்க முடியும்? என்றெல்லாம் இவர்களால் கேட்க முடியாது.

***பதில் - 4***

கொழும்பில் சனி பி.ப 7.00 மணிக்கு ஷவ்வால் தலைபிறை முதலில் தென்பட்டதால் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்ட நகரங்களில் சில சனியும் வேறு சில ஞாயிறும் பெருநாள் எடுக்க வேண்டும்.

**பதில் - 4 ஐ சொல்பவர்களிடம் நாம் கேட்பது :**

1) எவை சனி பெருநாள் எடுக்க வேண்டும்? எவை ஞாயிறு எடுக்க வேண்டும்? எந்த அளவுகோலின் அடிப்படையில் சில நகரங்களுக்கு சனியும் வேறு சிலவற்றுக்கு ஞாயிறும் என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த அளவுகோலுக்கான ஆதாரம் என்ன?

2) சர்வதேசத்திற்கும் ஒரே நாளில் நோன்பும் பெருநாளும் வரவேண்டும் என்ற வாதத்தை இவர்களால் வைக்க முடியாது. அதாவது சனி ஓர் இடத்தில் பெருநாள் என்றால் ஏனைய இடங்களிலும் சனிக்கிழமை தான் பெருநாள் என்று கூற முடியாது.

❋ பதில் - 4 ஐ கூறுபவர்களில் சிலர், பஜ்ரை அளவுகோலாக வைக்கக் கூடும். எந்த நகரங்களில் வாழ்பவர்கள் பஜ்ரை அடைந்து சனியில் நோன்பு நோற்றுவிட்டனரோ அவர்கள் நோன்பைத் தொடர வேண்டும். ஞாயிறு பெருநாள் எடுக்க வேண்டும். எவர்கள் பஜ்ரை நோன்பை முடிக்கவில்லையோ அவர்கள் நோன்பு நோற்காது சனி பெருநாள் எடுக்க வேண்டும் என்று கூறக் கூடும்.

அட்டவணை 1 இல் Denver, phoenix(மு.ப 6.00) போன்ற நகரங்களும் அவற்றுக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களும் ஞாயிறும் Samoa(மு.ப 2.00), Honolulu(மு.ப 3.00), Anchorage போன்ற நகரங்கள் சனியும் பெருநாள் எடுக்க வேண்டும்.

**இவர்களிடம் நாம் கேட்பது :**

1) இந்த அளவுகோலை எந்த ஆதாரத்தின் அடிப்படையில் எடுத்தீர்கள்?

2) தகவல் கிடைத்து விட்டதால் தான் பஜ்ரை அடையாதோர் பெருநாள் எடுக்க வேண்டும் என்கிறீர்களா? பஜ்ரை அடைந்தோருக்கும் தகவல் கிடைத்து விட்டது தானே? ஏன் அவர்கள் மாத்திரம் நோன்பு நோற்க வேண்டும்? நபிகளாரும் நோன்பை நோற்றுக் கொண்டிருக்கும் போதல்லவா தகவல் கிடைத்து நோன்பை விட்டார்கள்? அந்த ஹதீஸையும் தானே சர்வதேசப் பிறைக்கு ஆதாரம் காட்டுகிறீர்கள்.

3) தலைப் பிறை தென்பட்டுவிட்டது. பெருநாள் ஆரம்பித்து விட்டது. அதனால் தான் பஜ்ரை அடையாதோர் பெருநாள் எடுக்க வேண்டும் என்கிறீர்களா? பஜ்ரை அடைந்தோருக்கு ஏன் பெருநாள் ஆரம்பித்து விடவில்லை? பஜ்ரை அடைந்தோரும் அடையாதோரும் ஒரே நாளில் (சனியில்) அல்லவா இருக்கிறார்கள்? பஜ்ரை அடையாதோருக்கு எவ்வாறு நாளின் ஒரு பகுதி சென்ற பிறகு ஓரிடத்தில் பிறை தென்பட்டதோ அதே போன்று தான் பஜ்ரை அடையாதோருக்கும் அவர்களின் நாளின் ஒரு பகுதி சென்ற பிறகு ஓரிடத்தில் பிறை தென்படுகிறது.

4) இவர்களின் வாதப்படி மட்டக்களப்பு பஜ்ரை அடைந்து கொழும்பு பஜ்ரை அடைய முன் உலகில் எங்காவது ஓரிடத்தில் ஷவ்வால் தலைப்பிறை தென்பட்டால் விடியும் காலையில் மட்டக்களப்பு மக்கள் நோன்பு நோற்க வேண்டும். கொழும்பு மக்கள் பெருநாள் கொண்டாட வேண்டும்.

இலங்கையில் பஜ்ர் உதயமாகி பம்பாயில் பஜ்ர் உதயமாக முன் எங்காவது உலகின் ஒரு இடத்தில் ஷவ்வால் தலைப்பிறை தென்பட்டால் இலங்கையில் வாழ்பவர்கள் நோன்பு நோற்பர். பம்பாயில் வாழ்பவர்கள் பெருநாள் எடுப்பர்.

சர்வதேசப் பிறை மூலமாக மக்களை முடியுமானவரை ஒரே தினத்தில் பெருநாள் கொண்டாட வைக்கிறோம் என்று இவர்களால் கூற முடியாது. ஏனெனில் ஒரே நாட்டு மக்களையே இரண்டு நாட்களுக்கு கூறு போட்டு விடுகிறார்கள். உள்நாட்டுப் பிறையால் ஏற்படுத்த முடியுமான ஒற்றுமையைக் கூட இவர்களால் ஏற்படுத்த முடியவில்லை.

5) இந்தக் கருத்தை செயற்படுத்தும் போது பஜ்ர் உதயமாகிய நகரங்களையும் உதயமாகாத நகரங்களையும் அறிந்து கொள்வதில் மக்கள் சிரமப்படுவர். மார்க்கம் சொல்லாததை செய்து ஏன் சிரமப்பட வேண்டும்?

6) பஜ்ர் உதயமாவது ஒரே நாட்டுக்குள் சில பிரதேசங்களுக்கு முந்தலாம். வேறு சில பிரதேசங்களுக்குப் பிந்தலாம் ஒரு நாட்டில் ஒரு பிரதேசத்தில் பஜ்ர் உதயமாகி மற்றொன்றில் பஜ்ர் உதயமாக முன் எங்காவது பிறை தென்பட்டால் ஒரே நாட்டிற்குள் எல்லைகளை பிரித்துக் கொடுப்பது யார்? உதாரணமாக மட்டக்களப்பையும்

கொழும்பையும் வைத்துக் கொள்வோம். இவ்விரு பிரதேசத்திற்கும் இடைப்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்களில் எவர்கள் மட்டக்களப்புடன் இணைவது எவர்கள் கொழும்புடன் இணைவது? இவைகளை தீர்மானிப்பது யார்?

7) சர்வதேசப் பிறையை ஏற்காதவர்களிடம் எந்த அளவுகோலின் படி பூமியில் எல்லை வகுத்தீர்கள்? அதற்கு என்ன ஆதாரம்? என்று கேட்பவர்கள் எந்த ஆதாரத்தின் படி நேரத்தில் (பஜ்ர் நேரத்தை கொண்டு) எல்லை வகுத்தீர்கள்? பூமியில் எல்லை பிரிக்க ஆதாரம் இல்லாதது போல் காலத்திலும் எல்லை பிரிக்க ஆதாரம் இல்லை அல்லவா?

8) அரபாவில் கூடும் தினம் சனியாக இருக்க நாம் எப்படி ஞாயிறில் அரபா நோன்பு நோற்பது? அரபாவில் கூடும் தினத்தில் தான் நாமும் நோன்பு நோற்க வேண்டும் என்ற வாதத்தை இவர்களால் முன் வைக்க முடியாது. நாம் ஆரம்பத்தில் கூறிய உதாரணத்தை துல்ஹஜ் தலைப்பிறை நிகழ்வாக வைத்துக் கொள்வோம். இவர்களின் வாதப்படி ஸவூதியில் ஞாயிறு துல்ஹஜ் முதல் நாளாகவும் அட்டவணை 1 இல் உள்ள நகரங்களில் Samoa, Honolulu, Anchorage போன்ற நகரங்களில் சனியே துல்ஹஜ் முதல் நாளாக இருக்கும். எனவே திங்களில் அரபாவில் கூடும் போது ஞாயிறில் மேற்படி நகரங்களில் துல்ஹஜ் ஒன்பதாவது நாளாக இருக்கும். திங்களில் இவர்களுக்கு பெருநாள் ஏற்படும்.

## II துல்ஹஜ் மாதத்தில் மாத்திரம் வித்தியாசமான அணுகுமுறையா?

துல்ஹஜ் பிறை சவூதியில் தென்படாது வேறு ஒரு நாட்டில் தென்பட்டு சவூதி அதனை ஏற்றுக் கொள்ளாவிட்டால் சர்வதேசப் பிறை அடிப்படையில் எப்படி அரபாவில் தரிக்க முடியும்? எப்படி ஏனைய நாட்களில் செய்யவேண்டிய ஹஜ் கிரிகைகளை செய்ய முடியும்? மக்களுடன் சேர்ந்து செய்ய வேண்டுமா? தனித்து செயல்பட வேண்டுமா? தனித்து செயல்பட வேண்டும் என்றால் இதுவரை காலமும் எந்த அறிஞராலும் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு விடயத்தைக் கூறி ஓர் இஜ்மாவுக்கு முரண்படுவீர்கள். மக்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டுமென்றால் உங்கள் வாதத்திற்கு முரண்படுவீர்கள். நாங்கள் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து நோன்பு நோற்பதையும் பெருநாள் எடுப்பதையும் விமர்சனம் செய்த நீங்கள் எப்படி அதே செயலை செய்ய முடியும்?

சவூதியில் இஸ்லாமிய ஆட்சியாளருக்கு கட்டுப்பட வேண்டும் என்று வாதித்தால் மக்காவில் இஸ்லாமிய ஆட்சி இல்லாத ஒரு நிலை ஏற்பட்டால் அப்போது மக்களுக்கு முரண்பட முடியுமா? ஆம் என்றால் இஜ்மாவுக்கு முரண்படுகிறீர்கள். இல்லை என்றால் இஸ்லாமிய ஆட்சியாளருக்காகத்தான் உடன்படுகிறோம், பெரும்பான்மை மக்களுக்காகவல்ல என்ற வாதம் தவறாகிவிடும். சிலர் மக்காவில் இஸ்லாமிய ஆட்சி இல்லாத ஒரு நிலை ஏற்படாது என்று வாதிடலாம். அப்படியானால் அந்த வாதத்திற்கான ஆதாரத்தைக் காட்டுங்கள்.

பிறை விடயத்தில் ஆட்சியாளருக்கு கட்டுப்பட எந்த ஹதீஸ் ஆதாரமாக கொள்ளப் படுகிறதோ அந்த ஹதீஸ் அதை விட அதிகமாக பெரும்பான்மை மக்களுக்கும் பொருந்தும் என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளோம்.

இன்று சிலர் துல்ஹஜ் மாதத்தை மாத்திரம் மக்காவை அடிப்படையாக வைத்து தீர்மானிக்க வேண்டுமென்று வாதிக்கின்றனர். உதாரணமாக இலங்கையில் பிறை

கண்டு சவூதியில் காணப்படாத நிலையில் இலங்கைப் பிறையை சவூதி ஏற்றுக்கொள்ளாவிட்டால் இலங்கையில் கண்ட பிறை அடிப்படையில் இலங்கை மக்கள் செயல்படக்கூடாது. இதற்கு என்ன ஆதாரம்? உலகில் ஓர் இடத்தில் பிறை கண்டால் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றவர்கள் ஏன் துல்ஹஜ்ஜில் மாத்திரம் அதைப் புறக்கணிக்கிறார்கள்? துல்ஹஜ் மாதத்தை மக்காவை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்க வேண்டுமென்று அல்லாஹ் சொன்னானா? அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் சொன்னார்களா? அல்லது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதனை செயல்படுத்தினார்களா? செயல்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஏனெனில் துல்ஹஜ் ஒன்பதாவது நாள் அரபா நோன்பு நோற்கப்படுகிறது. பத்தாவது நாள் பெருநாள் கொண்டாடப்படுகிறது. மக்காவில் எப்போது பிறை கண்டார்கள் என்ற தகவலைப் பெற்றுக் கொள்ள போதுமான காலம் இருந்தது. அதாவது எட்டு நாட்கள் இருந்தன. இதற்குள் மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையில் தகவல் அனுப்பி விடலாம். ஆனாலும் அதற்கான ஏற்பாட்டை நபி(ஸல்) அவர்கள் செய்யவில்லை என்றால் அது அவசியமில்லை என்பதையல்லவா காட்டுகிறது? நபிகளார்(ஸல்) அவர்கள் செய்யாததை நாம் ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்? நபிகளார்(ஸல்) அவர்கள் மார்க்கத்தைப் பூரணப்படுத்திவிட்டல்லவா சென்றிருக்கிறார்கள்? அது அவசியமானது என்றால் அதைச் சொல்லியிருப்பார்கள்; அதைச் செயல்படுத்தியிருப்பார்கள்; அது ஹதீஸ்களில் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

ஆட்சியாளருக்கு கட்டுப்பட வேண்டுமென்பதனால் தான் மக்காவை அடிப்படையாக வைத்து செயல்படுகிறோம் என்றால் அந்த ஆட்சியாளரின் ஆட்சி இலங்கையில் இல்லையே? இலங்கையில் உள்ளவர்கள் ஏன் அங்குள்ள ஆட்சியாளருக்கு கட்டுப்பட வேண்டும்? அல்லது ஒரு காலத்தில் சவூதி வானவியல் அடிப்படையில் பிறையைத் தீர்மனித்தால் அல்லது சவூதி அல்லாத மக்காவைக் கட்டுப்படுத்தும் ஓர் அரசாங்கம் உருவாகி அவ்வரசாங்கம் வானவியல் அடிப்படையில் பிறையைத் தீர்மானித்தால் உலகில் வேறு எந்த நாட்டிலும் துல்ஹஜ் பிறையை பார்க்கக் கூடாதா? ஆம் என்றால் பிறை பார்த்து மாதத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற அடிப்படையை வேண்டாம் என்றும் அது சவூதிக்கு மாத்திரம்தான் உரியது என்றும் முடிவு செய்தவர்களாவீர்கள். இல்லை பிறை பர்க்கத்தான் வேண்டுமென்றால் எதற்காகப் பார்க்க வேண்டும்? மற்றவர்கள் பார்க்கும் பிறையை அவர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையே? அதனால் எந்தப் பயனுமில்லையே?

பிறையைப் பார்த்து மாதத்தை தீர்மானித்தல் என்ற வழிமுறையைப் புறக்கணித்துவிட்டு மக்காவை வைத்து மாதத்தை தீர்மனித்தல் என்று நீங்களாக ஏற்படுத்திக்கொண்ட ஒரு தத்துவம் இப்படி முரண்பாட்டை ஏற்படுத்துகிறது. இதே அளவுகோலை ஏன் ரமழானுக்கும் ஷவ்வாலுக்கும் ஏனைய ஒன்பது மாதங்களுக்கும் வைக்கவில்லை? இது முரண்பாடல்லவா? நோனபிற்கும் நோன்புப் பெருநாளிற்கும் சர்வதேசப்பிறை என்ற ஓர் அளவுகோலும் ஹஜ்ஜுப் பெருநாளிற்கு சவூதிப் பிறை என்ற வேறு ஒரு அளவுகோலும் முரண்பாடல்லவா?

இல்லை! இல்லை! இலங்கையில் கண்ட பிறையை சவூதி ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நாம் அதை அடிப்படையாக வைத்துத்தான் பெருநாள் எடுக்க வேண்டும் என்றால் அரபா நோன்பிற்கு என்ன செய்வது? ஹாஜிகள் அறபாவில் கூடும் நாள் தான் அரபா நாள் என்று சொல்லி வரும் வாதத்தைப் பிழை என்று சொல்வார்களா? ஏனெனில் இங்கு பெருநாளாக இருக்கும் நாளில் தான் ஹாஜிகள் அறபாவில் கூடப்போகிறார்கள். அப்படியானால் அதுபோன்ற சந்தர்ப்பங்களில் இலங்கை மக்களுக்கு அரபா நோன்பு நோற்கும் பாக்கியம் இல்லை

என்பார்களா? இஸ்லாம் எமது பாவங்களை அழிப்பதற்காகத் தந்த ஒரு சந்தர்ப்பத்தை நபி(ஸல்) அவர்களால் வழிகாட்டப்படாத ஒரு தத்துவத்தை வைத்து எப்படி வீணாக்க முடியும்?

அரபா தினத்தில் நோன்பு பிடிக்குமாறு நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஹாஜிகள் அரபாவில் கூடும் நாள்தான் முழு உலகுக்கும் அரபா தினம் என்றும் அரபாவில் ஹாஜிகள் சனிக்கிழமை ஒன்று கூடினால் முழு உலகில் உள்ளவர்களும் சனிக்கிழமைதான் நோன்பு பிடிக்க வேண்டும் என்றும் சர்வதேசப் பிறையை அடிப்படையாகக் கொண்டு செயல்படக்கூடியவர்களில் பலர் கூறிவருகின்றனர்.

அரபா தினம் என்பது துல்ஹஜ் மாதத்தின் ஒன்பதாவது நாளாகும். மக்காவில் மக்கள் துல்ஹஜ்ஜின் ஒன்பதாவது நாளாக எந்த நாளைக் கடைபிடிகிறார்களோ அந்த நாளில் அங்கேயுள்ள ஹாஜிகள் அரபாவில் ஒன்றுகூடுவார்கள். ஆனால் இலங்கையில் உள்ள மக்கள் ஒரு நாள் முன்னராக அல்லது பின்னராக துல்ஹஜ் மாதத்தை ஆரம்பித்தால் இலங்கை மக்கள் அவர்களது ஒன்பதாவது நாளாகிய வெள்ளி அல்லது ஞாயிறில்தான் நோன்பு நோற்க வேண்டும். ஏனெனில் அதே அறபா மைதானம் இலங்கையில் இருந்திருந்தால் இலங்கையின் ஒன்பதாவது நாளில்தான் அரபாவில் ஹாஜிகள் ஒன்றுகூடியிருப்பார்கள்.

சிலர் மக்காவில் அறபா தினம் சனி என்றால் அனைத்து உலக மக்களும் சனிதான் நோன்பு நோற்க வேண்டும் என்பது அனைத்து உலமாக்களின் கருத்து என்று பொய் கூறி வருகிறார்கள். சவூதி நாட்டின் பேரறிஞர்களில் ஒருவரான உஸைமீன்(ரஹ்) உட்பட பல அறிஞர்கள் ஒவ்வொரு நாட்டு மக்களும் அவரவர்களின் ஒன்பதாவது நாளில்தான் அரபா நோன்பு நோற்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

மக்காவில் சனிக்கிழமை அரபா தினம் என்றால் உலக மக்கள் அனைவருக்கும் சனிக்கிழமைதான் அரபா தினம் என்று சொல்பவர்களிடம் மேலும் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறோம்.

NUKUALOFA நகர மக்கள் மக்காவிற்கு 9½ மணித்தியாலங்களுக்கு முன்னரே நாளை அடைந்து கொள்கிறார்கள். மக்காவை விட 9½ மணித்தியாலங்களுக்கு முன் அவர்களுக்கு சூரிய உதயம், அஸ்தமனம் ஏற்படுகிறது. சனிக்கிழமை மக்காவில் ஹாஜிகள் அரபா மைதானத்தில் லுஹருக்குப் பின்னர் பிற்பகல் 12.30 க்கு ஒன்றுகூட ஆரம்பிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது NUKUALOFA நகரத்தின் நேரம் சனி இரவு பிற்பகல் 10.30 ஆக இருக்கும். சனிக்கிழமை அவர்கள் அரபா நோன்பை நோற்றிருந்தால் அரபாவில் ஹாஜிகள் கூடுவதற்கு பல மணித்தியாலங்களுக்கு முன்னரே அவர்கள் நோன்பை முடித்துக்கொண்டிருப்பார்கள். அதேபோன்று மக்காவுக்கு 13-14 மணித்தியாலங்களுக்கு பிறகே, APIA நகர மக்களுக்கு சனி ஆரம்பிக்கிறது. ஏனெனில் மக்காவுக்கு சூரிய உதயம், அஸ்தமனம் ஏற்பட்டு 13-14 மணித்தியாலங்களுக்குப் பிறகே APIA நகர மக்களுக்கு சூரிய உதயம், அஸ்தமனம் ஏற்படுகிறது. ஆனால் NUKUALOFA நகரம் TONGO வின் தலை நகரமாகும். APIA நகரம் SAMOA வின் தலைநகரமாகும். இரு நாடுகளும் பக்கத்தில் உள்ள நாடுகள். மேற்கு நெட்டாங்கு $175^0$ இல் உள்ள NUKUALOFA விற்கும் மேற்கு நெட்டாங்கு $171^0$ இல் உள்ள APIA விற்கும் இடையில் சூரிய உதயம், அஸ்தமனம் ஏற்படும் நேரவித்தியாசம் 16 நிமிடங்கள் மாத்திரமே. APIA வில் சூரியன் மறைந்து 16 நிமிடங்களில் NUKUALOFA வில்

சூரியன் மறைகிறது. ஆனால் 1884 ஆம் ஆண்டு புவியியலாளர்களால் மேற்படி இரு நாடுகளுக்கும் இடையில் கற்பனையாக ஒரு தேதிக் கோடு வரையப்பட்டது. அதன்படி சூரியன் மறையும் போது NUKUALOFA தேதிக் கோட்டின் மேற்கில் இருப்பதால் அது அங்குள்ளவர்களுக்கு சனிக்கிழமையின் சூரியன் என்றும் APIA தேதிக் கோட்டின் கிழக்கில் இருப்பதால் அது அங்குள்ளவர்களுக்கு வெள்ளிக்கிழமையின் சூரியன் என்றும் சொல்லப்படுகிறது.

மேற்படி இரு நகரங்களும் பக்கத்தில் உள்ள நகரங்களாக இருந்தும் ஒரு நகரத்தில் சூரியன் மறைந்து 16 நிமிடங்களில் மற்ற நகரத்தில் சூரியன் மறைந்தும் ஆரம்பத்தில் சூரியன் மறைந்த நகரம் இப்போதுதான் இஸ்லாமிய நாள் அடிப்படையில் வெள்ளிக்கிழமையை ஆரம்பிக்கிறது. விடியும் காலையில் அவர்கள் அரபா நோன்பு நோற்கக் கூடாது. அதற்கும் 16 நிமிடங்களுக்கு பிறகு சூரியன் மறைந்த நகரம் இப்போது சனிக்கிழமையை ஆரம்பித்து விட்டது. அவர்கள் விடியும் காலையில் நோன்பு பிடிக்க வேண்டும் என்று சொல்கிறீர்களே! இந்த தேதிக் கோட்டைப் போட்டு இது இவர்களுக்கு வெள்ளிக்கிழமை இது இவர்களுக்கு சனிக்கிழமை என்று பிரித்தது அல்லாஹ்வா? இல்லை என்றால் ஏன் 1884 இல் புவியியல் ஆய்வாளர்களால் கற்பனை செய்து வரையப்பட்ட கோட்டை ஏற்றுக் கொள்கிறீர்கள்?

புவியியலாளர்கள் தேதிக்கோட்டை NUKUALOFA வுக்கு மேற்குப் பக்கமாக வரைந்திருந்தால் அந்த நாளை வெள்ளிக்கிழமை என்று சொல்லியிருப்பீர்கள்தானே? அல்லது எதிர்காலத்தில் அவ்வாறு அவர்கள் செய்தால் அப்போது அவர்கள் APIA நகரின் மக்களோடுதான் நோன்பு நோற்க வேண்டும். அப்போது மறையும் சூரியன் இரண்டு நகரங்களுக்குமுரியது என்று வாதிடுவீர்களா? ஆம் என்றால் சென்ற வருடம் 16 நிமிடங்களுக்கு முன் மறைந்த சூரியனைப் பார்த்து இது உனக்கில்லை அவனுக்குத்தான் அறபா நாள் ஆரம்பிக்கிறது என்று கூறிவிட்டு, இந்த வருடம் இது உனக்கும்தான் என்று கூறுவது முரண்பாடில்லையா? என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்?

இதே சர்வதேச தேதிக்கோடு புவியியலாளர்களால் இலங்கைக்கும் சவூதிக்குமிடையில் வரையப்பட்டிருந்தால் இன்றைக்கு சனிக்கிழமை என்று சொல்லக்கூடிய நாளை வெள்ளிக்கிழமை என்று சொல்லியிருப்பீர்கள்தானே? சவூதிக்கும் இலங்கைக்கும் 2½ மணித்தியாலங்கள் வித்தியாசப்படுகிறது என்று சொல்லாமல் 21½ மணித்தியாலங்கள் வித்தியாசப்படுகிறது என்று சொல்வீர்கள்தானே? அப்படி நடந்திருந்தால் இன்று இலங்கையில் உள்நாட்டுப் பிறை அடிப்படையில் ஒன்பதாவது நாள் அரபா நோன்பு பிடிப்பவரைப் பார்த்து ஏன் நேற்றல்லவா சவூதியில் அறபா தினம் இன்று ஏன் நோன்பு பிடிக்கிறீர்கள்? என்று கேட்டிருப்பீர்களா? அல்லது இன்றைக்குத்தான் அரபா நாள் நோன்பு பிடியுங்கள்; எவரும் நாளைக்கு நோன்பு பிடிக்காதீர்கள் என்று சொல்லியிருப்பீர்களா? ஏன் மனிதன் போடும் கோடுகளால் நாளைத் தீர்மானிக்கிறீர்கள்?

அல்லாஹ்வின் ஏட்டைப் பார்த்து விட்டு வந்தது போல் நீங்கள் பிடித்த நோன்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது; அது ஹராம் என்றெல்லாம் வாய் கூசாமல் சொல்லுகிறவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். எங்களுக்கு மறுப்பு எழுதிய சகோதரர் இப்படி சொல்ல மாட்டார் என்று நினைக்கிறேன். ஆனால் அப்படி சொல்லக் கூடியவர்களும் இருக்கிறார்கள்.

உலகப்படத்தை எடுத்து தேதிக்கோடு எப்படி வரையப்பட்டுள்ளது என்பதை சற்று அவதானியுங்கள். ஒரே நேரத்தில் சூரியன் மறையக்கூடிய இடங்களில் சில

ஞயிற்றுக்கிழமையிலும் வேறு சில சனிக்கிழமையிலும் இருப்பதைப் பார்ப்பீர்கள். சில இடங்களில் 180 ஆவது நெட்டாங்கின் கிழக்குப் பகுதிக்கு சனிக்கிழமையாக இருக்கும் அதேவேளை மேற்குப்பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமையாக இருக்கிறது. வேறு சில இடங்களில் அதன் மேற்குப்பகுதிக்கு சனியாகவும் கிழக்குப் பகுதிக்கு ஞயிறாகவும் இருக்கிறது. எனவே ஒரே நேரத்தில் சூரியன் மறையும் நேர்கோட்டின் கிழக்கில் சில இடங்களில் சனியாகவும் இன்னும் சில இடங்களில் ஞாயிறாகவும் அதே நேர்கோட்டின் மேற்கிலும் சில இடங்களில் ஞாயிறாகவும் இன்னும் சில இடங்களில் சனியாகவும் இருக்கிறது. ஆனால் பொதுவாக $180^0$ நெட்டாங்கிற்கு இரு பக்கமாகவும் அதிகமாக விலகிச் செல்லும் போது அதன் கிழக்கில் சனியாகவும் மேற்கில் ஞாயிறாகவும் இருக்கும்.

சுருக்கமாகக் கூறுவதாயின் தேதிக் கோடு மனிதனால் உருவாக்கப்பட்டது. அதை வைத்துக் கொண்டு அங்கிருந்து தான் நாள் ஆரம்பிக்கிறது என்று சொல்லி அரபா நோன்பு நோற்றவர்களுக்கு ஹராம் பத்வா வழங்குவது முட்டால் தனமாகும். அல்லாஹ்வின் தேதிக் கோடு எது என்பது எவருக்கும் தெரியாது. தேதிக் கோடு போடப்பட்டதை மக்கள் ஏற்றுக் கொண்டதால் அதன்படி நாளைத் தீர்மானித்துக் கொள்ள முடியும் என்றால் ஏன் ஒரு நாட்டில் உள்ள பெரும்பான்மை முஸ்லிம்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நோன்பையும், பெருநாளையும், அரபா தினத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது?

## III உங்களிடம் பிரச்சினையே இல்லையா?

முழு உலகிலும் ஒரே நாளில் தான் நோன்பு ஒரே நாளில் தான் பெருநாள்; ஒரு நாட்டில் சனிக்கிழமை நோன்பு அல்லது பெருநாள் எடுக்கும் போது எப்படி மற்றவர்கள் ஞாயிறு எடுக்க முடியும் என்று சொல்பவர்களில் சிலர் சில கேள்விகளைக் கேட்கிறார்கள்.

ஒருவர் சவூதியில் ரமளான் ஆரம்பத்தில் நோன்பு நோற்று ரமளான் முடிவதற்குள் இலங்கை திரும்புகிறார். அவ்வருடம் இலங்கை ஒரு நாள் கழித்து ரமளானை ஆரம்பிக்கிறது. அதே நேரம் மாதத்தையும் இலங்கை மக்கள் முப்பதாகப் பூர்த்தி செய்கிறார்கள். இந்த நிலையில் அவரின் நிலை என்ன? 31 நோன்பு நோற்க முடியுமா? அதே போன்று இலங்கையில் ஒருவர் ரமளானை ஆரம்பித்து விட்டு சவூதி செல்கிறார். சவூதியில் அவ்வருடம் ரமளான் 29 நாளாக இருந்தது. இந்த நிலையில் அவர் 28 நோன்பே நோற்கிறார். இதனால் தான் நாம் நாட்டுக்கு நாடு பிறையைத் தவறு என்று சொல்கிறோம் என்று வாதிடுகின்றனர். ஆனால் அதே போன்ற பிரச்சினை அவர்களிடமும் இருக்கிறது என்பதை அவர்கள் அறியவில்லை போலும்.

உதாரணமாக ஒருவர் ரமளானை சர்வதேசப் பிறை அடிப்படையில் TONGA எனும் நாட்டில் ஆரம்பிக்கிறார் அவர் 15 வது நோன்பில் SAMOA இற்கு செல்கிறார். ஓரிரு மணித்தியாளங்களில் அந்தப் பயணத்தைச் செய்து விட முடியும். SAMOA இல் சர்வதேசப் பிறை அடிப்படையில் நோன்பு நோற்றவர்கள் 14 வது நோன்பை நோற்றுக் கொண்டிருப்பார்கள். இந்த நிலையில் அவர் இவர்களுடன் சேர்ந்து நோன்பு நோற்றால் அந்த வருடம் சர்வதேசப் பிறை அடிப்படையில் ரமளான் 30 நாளாக பூர்த்தி செய்யப்பட்டால் இவரின் நிலை என்ன? 31 நோன்பு நோற்க முடியுமா? அதே போன்று ஒருவர் SAMOA இல் ரமளானை ஆரம்பித்துவிட்டு 15 வது நோன்பில் TONGA செல்கிறார். அங்கு மக்கள் 16 வது நோன்பை நோற்றவர்களாக இருப்பார்கள். அந்த

வருடம் சர்வதேசப் பிறை அடிப்படையில் 29 நோன்புகளுடன் ரமளான் முடிவடைகின்றது. இப்போது இவர் 28 நோன்புகளைத்தான் நோற்றிருக்கிறார். மாதம் எப்படி 28 நாளாக இருக்க முடியும்?

எனவே உள்நாட்டுப் பிறையில் இருக்கும் பிரச்சினை சர்வதேசப் பிறையிலும் இருக்கத்தான் செய்கிறது. ஒரு பக்கத்திற்கு மட்டும் கேள்விகளைத் திருப்புவது நியாயமில்லை.

அதே போன்று ஞாயிற்றுக் கிழமை ஹாஜிகள் அரபாவில் கூடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம் உலகம் முழுவதும் ஞாயிற்றுக் கிழமைதான் அரபா நோன்பு நோற்க வேண்டும் என்று சொல்பவர்களிடம் கேற்கிறோம் TONGA இல் இருக்கும் ஒருவர் அரபா நோன்பை ஞாயிற்றுக் கிழமை நோற்றுக் கொண்டு SAMOA இற்கு செல்கிறார். ஓரிரு மணித்தியாளங்களில் பயணத்தை முடித்துக் கொள்கிறார். அங்குள்ள மக்களோ சனிக்கிழமையில் இருக்கிறார்கள் இவரின் நிலை என்ன? நோன்பைப் பூர்த்தி செய்ய வேண்டுமா? அல்லது நோன்பை விட்டுவிட்டு அடுத்த நாள் மீண்டும் நோன்பு பிடிக்க வேண்டுமா? நோன்பைப் பூர்த்தி செய்ய வேண்டும்; அது அவருக்கு அரபா நோன்பாகும் என்றால் அரபாவில் ஹாஜிகள் கூடும் ஞாயிறில் தான் நோன்பு பிடிக்க வேண்டும் என்ற தத்துவம் உடைந்து விடும். நோன்பை விட வேண்டும் அல்லது அது அவருக்கு அரபாவாக அமையாது என்றால் எப்படி எந்தக் காரணமுமின்றி அரபாவில் ஹாஜிகள் கூடும் ஞாயிற்றுக் கிழமையில் ஆரம்பித்த நோன்பு அரபா நோன்பாக அமையாது? அப்படியானால் ஒருவர் அரபா நோன்பை TONGA இல் பிடித்து அங்கேயே நோன்பு திறந்து விட்டு SAMOA இல் வந்து இறங்குகிறார் இவர் நோற்ற நோன்பும் அரபா நோன்பாக அமையாதா? அரபா நோன்பாக அமையும் என்றால் முன்னர் கூறியதற்கு முரணபடுகின்றீர்கள். அது மாத்திரமின்றி அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை SAMOA மக்கள் நோன்பு நோற்கும் போது இவர் மாத்திரம் நான் நேற்றே நோன்பு பிடித்து விட்டேன் என்று சொல்வாரா?

இல்லை அவர் நோற்ற நோன்பு அரபா நோன்பாக அமையாது என்றால் எப்படி ஹாஜிகள் அரபாவில் கூடும் ஞாயிற்றுக் கிழமை நோற்ற நோன்பு அரபா நோன்பாக அமையாது? ஏன் இரண்டு நாட்கள் அரபா நோன்பு நோற்கும் நிலை ஏற்படுகின்றது?

அதே போன்று SAMOA இல் இருக்கும் ஒருவர் சனிக்கிழமை இரவு TONGA வருகிறார். TONGA இல் மக்கள் அரபா நோன்பை முடித்துக் கொண்டு அடுத்த நாள் பெருநாள் கொண்டாடுவதற்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இவரின் நிலை என்ன? அரபா நோன்பு நோற்கும் பாக்கியம் இவருக்கு இல்லையா?

எனவே சில சர்வதேசப் பிறைச் சகோதரர்கள் இவை போன்ற கேள்விகளை மற்றவர்களிடம் கேட்பதை விட தங்களிடம் முதலில் கேட்டுக்கொள்வது நல்லது. அவர்களின் கேள்விகள் ஒரு கருத்தை நிலை நாட்டுவதற்கு ஏற்புடையதாக இல்லை என்பதை உணர்த்துவதற்காகவே அவை போன்ற கேள்விகளை அவர்களிடம் திருப்பிக்கேட்டோமே தவிர இந்தக் கேள்விகளால் எமது நிலைப்பாட்டை நாம் நிறுவவில்லை.

புவியியலாளர்களால் 1884 இல் அமைக்கப்பட்ட தேதிக் கோடு இலங்கைக்கும் சவூதிக்கும் இடையில் அமைக்கப்பட்டிருந்தால் மேலே நாம் குறிப்பிட்ட நிலைதான் ஏற்படும். இப்போது இவர்கள் எதை அரபாவில் கூடும் நாள் என்று சொல்கிறார்களோ அந்த நாளை எட்டாவது நாள் என்றுதான் சொல்லியிருப்பார்கள். சவூதியில் நாள்

ஆரம்பித்த பின்னர்தான் இலங்கையில் நாள் ஆரம்பிக்கிறது என்பார்கள். இப்போது இலங்கை மக்கள் ஹாஜிகள் அரபாவில் கூடும் சனியில் நோன்பு நோற்காது ஞாயிற்றுக் கிழமையில் நோன்பு நோற்கிறார்கள் என்று நையாண்டி செய்பவர்கள் அந்த நாளை சனிக்கிழமைதான்; அந்த நாளில் தான் அரபா நோன்பு; ஹாஜிகள் அந்த நாளில் தான் கூடுகிறார்கள் என்பார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் தேதிக் கோடுதான்.

சர்வதேசப் பிறையை ஆதரிக்கும் அனைவரையும் சேர்த்து நாம் கடுமையாக விமர்சிப்பதாக எவரும் எண்ணிவிடவேண்டாம். ஒரு சில வார்த்தைகள் மூலம் நாம் கருதுவது, உள்நாட்டுப் பிறையினரைப் பார்த்து ஹராத்தைச் செய்கிறார்கள் என்று சொல்பவர்களைத்தானே தவிர கருத்து வேறுபாட்டின் ஒழுக்கத்தைப் பேணி சர்வதேசப் பிறையை ஆதரிப்பவர்களை அல்ல என்பதைக் கூறிக்கெள்ள விரும்புகிறோம்.

## IV சர்வதேச தேதிக் கோடு

சர்வதேசத் தேதிக் கோடு உலகின் ஏதாவது ஒரு இடத்தில் வரையப்பட வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்தில்லை. அப்படி வரையப்படாவிட்டால் ஒவ்வொரு நாட்டவர்களுக்கும் இடையில் நாள் வித்தியாசப்பட்டு ஒரு குழப்பம் ஏற்படும். உலகம் உருண்டையாக இருப்பதால் அக்கோட்டிற்கு இரு பக்கமாகவும் இருக்கும் இடங்களின் நாட்கள் வித்தியாசப்படுகின்றன. இன்று உலகில் எந்த நாடுகளில் முதலில் நாள் ஆரம்பிக்கிறதோ அதே நாடுகளில் தான் அல்லாஹ் உலகத்தைப் படைத்த நாளில் இருந்து நாள் ஆரம்பிக்கிறது என்பதில்லை. 1884 ஆம் ஆண்டு தேதிக் கோடு கற்பனையாக வரையப்பட்ட பிறகும் கூட பல மாற்றங்கள் அக் கோட்டில் ஏற்பட்டுள்ளன. இறுதியாக 1995 ஆம் ஆண்டில் ஒரு மாற்றம் செய்யப்பட்டது. இந்தோனேசியாவின் கிழக்கே உள்ள சில தீவுகள் இறுதியாக நாளை ஆரம்பிக்கும் நாடுகளில இருந்தன. 1995 இற்கும் பின்னர் முதலில் நாளை ஆரம்பிக்கும் நாடுகளில் அவை சேர்க்கப்பட்டன. இதனடிப்படையில் இன்று உதாரணமாக ஒரு சனியில் ஹாஜிகள் அரபாவில் ஒன்று கூடுகிறார்கள் என்றால் அத்தீவுகளில் உள்ளவர்களும் சனியில் தான் நோன்பு நோற்க வேண்டும் என்ற வாதத்தின் அடிப்படையில் 1995 இல் ஏற்பட்ட மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் அவர்கள் இன்று எதனை சனி என்று கூறி நோன்பு நோற்க வேண்டுமோ அதனை அவர்கள் வெள்ளி என்று கூறி நோன்பு நோற்கக் கூடாது. 1995 இற்கு முன்னர் அவர்கள் எதனை அரபா நாள் என்று கருதியிருக்க வேண்டுமோ அது இன்று பெருநாளாகக் கருதப்படுகின்றது.

ஒரு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நாள் வித்தியாசப்படக் கூடாது என்ற அரசியல் காரணிகளையும் கருத்தில் கொண்டே இந்தக் கோடு வரையப்பட்டள்ளது. உதாரணமாக DIOMEDE என்ற தீவை எடுத்துக் கொள்வோம். கிழக்குப் பக்கமாகக் காணப்படும் LITTLE DIOMEDE என்ற சிறிய தீவு அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மேற்குப் பக்கமாக இருக்கும் பெரிய தீவு ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இவ்விரு DIOMEDE தீவுகளுக்கும் இடையில் உள்ள தொலை தூரம் 1.5 k.m மாத்திரமே. ஒரே நேரத்தில் சூரியன் மறையும் போது மேற்குப் பக்கம் உள்ளவர்களுக்கு அது சனியாகவும் கிழக்குப் பக்கம் உள்ளவர்களுக்கு அது வெள்ளியாகவும் இருக்கிறது. இந்த நேரத்தில் உலகின் முதலாவது ரமளான் பிறை அந்ந வானில் தோன்றி இரு பக்கமுள்ளவர்களும் அதனைக் கண்டால் சர்வதேசமும் தேதிக் கோட்டை அடிப்படையாக கொண்ட ஒரே

நாளில் தான் நோன்பை, பெருநாளை கடைபிடிக்க வேண்டும் என்ற வாதத்தின் அடிப்படையில் அது வெள்ளிக் கிழமைக்குரிய பிறையாகும். சனிக் கிழமையில் உள்ளவர்களுக்கு ஒரு நாள் தவறி விட்டதாக கூற வேண்டும். அந்த மாதம் முடிவதற்கு முன்னர் அமெரிக்கா ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து DIOMEDE சிறிய தீவை ரஷ்யாவுக்கு ஒப்படைத்து ரஷ்யாவின் தேதிக்கு கொண்டு வரப்பட்டால் முழு உலகிற்கும் ரமளான் முதல் நோன்பு தவறிவிடவில்லை என்று கூற வேண்டும். அதே போன்று ஒரே சிறிய பகுதியின் மக்களில் சிலர் ஒரு நோன்பு கூடுதலாக அல்லது குறைவாகப் பிடிக்க வேண்டிய நிலை உருவாகும். அதே போன்று ரமளான் பிறை பெரிய தீவில் மாத்திரம் தென்பட்டிருந்தாலும் இது போன்ற பிரச்சினை ஏற்படும்.

இது போன்ற பல சிக்கல்கள் காரணமாகத்தான் சில அறிஞர்கள் சர்வதேச இஸ்லாமியப் பிறைக் கோடு என்ற சிந்தனையை முன்வைக்கின்றனர். உலக முடிவு வெள்ளிக் கிழமையில் ஏற்படும் என்று ஹதீஸில் உள்ளது 1884 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேதிக் கோட்டில் ஏற்படக்கூடிய வெள்ளிக் கிழமையில் தான் உலக முடிவு ஏற்படும் என்று கூறமுடியுமா? ஒரு சிறிய நேரத்தில் உலகம் அழிந்து விடும் என்பது இஸ்லாத்தின் கருத்தாகும். முழு உலகமும் வெள்ளிக் கிழமையில் ஒரு மைக்ரோ வினாடியில் மாத்திரமே இருக்க முடியும். தற்போதைய தேதிக் கோட்டின் (IDL) அடிப்படையில் உருவாகும் வெள்ளிக் கிழமையில் தான் உலகம் அழியும் என்றிருந்தால் ஒவ்வொரு நாட்டிலும் எந்த நேரத்தில் (எத்தனை மணிக்கு) அது நிகழும் என்பதை இப்போதே சொல்லிவிட முடியும். உதாரணமாக DIOMEDE பெரிய தீவில் வெள்ளியின் சூரியன் மறையும் போது DIOMEDE சிறிய தீவில் வியாழனின் சூரியன் மறைந்து வெள்ளி ஆரம்பிக்கும் போதும் உலகம் அழிந்து விடும்; அப்போது இலங்கையில் பகல் நேரமாகவும் சவூதியில் காலை நேரமாகவும் இருக்கும் என்று கூறலாம். ஆனால் இவ்வாறு கூறுவது தவறாகும். ஏனெனில் மறுமை நாள் எப்போது எந்த நேரத்தில் நிகழும் என்ற அறிவு அல்லாஹ்விடம் மாத்திரமே உள்ளது. அல்லாஹ் கூறுகிறான்:

(وَلِلَّهِ غَيْبُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَمَا أَمْرُ السَّاعَةِ إِلَّا كَلَمْحِ الْبَصَرِ أَوْ هُوَ أَقْرَبُ إِنَّ اللَّهَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ)

((வானங்களினதும் பூமியினதும் மறைவான விடயங்கள் (பற்றிய அறிவு) அல்லாஹ்வுக்கே செந்தமானதாகும். மறுமை நாளின் விடயம் கண்சிமிட்டும் நேரத்தைத் தவிர வேறில்லை. இல்லை, அதைவிடவும் நெருக்கமான (விரைவான நேரத்தில் அது ஏற்படக் கூடிய)தாகும். நிச்சியமாக அல்லாஹ் அனைத்து விடயங்களுக்கும் மிகவும் சக்தி பெற்றவன்)). (16:77) அது வெள்ளிக் கிழமையில் நிகழும் என்பதை மாத்திரமே அல்லாஹ் எமக்கு அறிவித்துத் தந்திருக்கிறான். அதே போன்று இந்த தேதிக் கோட்டில் பல மாற்றங்கள் ஏற்படலாம். அல்லாஹ்விடத்தில் எந்த இடத்தில் இருந்து ஒரு நாள் ஆரம்பிக்கிறது என்று எவருக்கும் தெரியாது.

இது போன்ற பல பிரச்சினைகள் இருக்கும் போது திங்களில் ஹாஜிகள் அரபாவில் கூடினால் முழு உலகிலும் தேதிக் கோட்டை அடிப்படையாகக் கொண்ட திங்களில் தான் மக்கள் நோன்பு பிடிக்க வேண்டும், அதற்கு மாற்றமாக நோன்பு நோற்பது ஹராம் என்று எவ்வாறு சொல்ல முடியும்? தங்களுக்கு வஹி வந்ததைப் போன்ற துணிவு இவர்களுக்கு எங்கிருந்து வந்தது?

தற்போது அவ்விரு தீவுகளில் உள்ள மக்களும் ஏனையவர்களும் ஜும்மா தொழுகையை தத்தமது வெள்ளியில் தான் நடாத்த வேண்டும். அதனை முஸ்லிம் உம்மத்தில் உள்ள அறிஞர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவ்வாறு செய்யா விட்டால் ஒரே நாட்டில் இரண்டு நாட்கள் உருவாகும். அல்லது தேதிக்

கோட்டை வேறு இடத்திற்கு மாற்றம் செய்தால் அங்கும் இது போன்ற பிரச்சினை ஏற்படும்.

ஆனால் பிறை விடயத்தில் இஸ்லாமிய உம்மத் தேதிக் கோட்டை அடிப்படையாகக் கொண்டோ அல்லது ஒரு இடத்தில் தென்படும் பிறை முழு உலகையும் கட்டுப்படுத்தும் என்றோ ஒற்றுமைப்படவில்லை. அதே போன்று பெரிய DIOMEDE தீவில் காணும் பிறையை 1.5 km தொலைவில் உள்ள சிறிய DIOMEDE தீவில் வாழ்பவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது எந்தளவுக்கு மார்க்கத்திற்கும் அறிவிற்கும் ஒத்துவரும் என்பது கேள்விக்குறியே!












**பகுதி : 5**

*அறபு மொழித் தொகுப்பின் தமிழாக்கத்தின் சுருக்கம்*

## <u>சர்வதேசப் பிறையை எப்போது நடைமுறைப்படுத்த வேண்டும்?</u>

இஸ்லாமிய சமூகத்தில் நீண்டகாலமாக இருந்து வரும் கருத்து வேறுபாடுகளில் தலைப்பிறை சம்பந்தப்பட்ட பிரச்சினையும் ஒன்றாகும்.

1) உலகின் எந்தப் பகுதியில் இருந்து பிறை கண்ட தகவல் வந்தாலும் அதை ஏற்க வேண்டும் என்றும்

2) ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்தந்த பிரதேசத்தில் கண்ட பிறையையே ஏற்க வேண்டும் என்றும்

முக்கிய இரு வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இவ்விரு கருத்துக்களில் ஒவ்வொரு கருத்துக்கும் சார்பாக பெரும் அறிஞர்கள் உள்ளனர். ஆனால் எல்லா அறிஞர்களும் ஒரு விடயத்தில் ஒற்றுமைப்படுகிறார்கள். ஒரு சமூகத்தில் பெரும்பாலான மக்கள் எந்தக் கருத்தை நடைமுறைப்படுத்துகிறார்களோ அந்தக் கருத்தையே அனைவரும் நடைமுறைப்டுத்த வேண்டும். தங்களுக்குள் பிரிந்து செல்ல முடியாது என்பதை இரு கருத்துள்ள அறிஞர்களும் ஒருமித்து சொல்லக் கூடியதாகும்.

இலங்கை நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் பெரும்பாலான மக்கள் இலங்கையில் காணும் பிறையையே ஏற்க வேண்டும் என்ற கருத்தையே நடைமுறைப்படுத்துவதால் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களும் அதையே நடைமுறைப்படுத்த வேண்டும்.

நவீன காலத்தில் சர்வதேசப் பிறையை வலியுறுத்திய பேரறிஞர்களில் முக்கியமானவர்கள் அல்லாமா அல்பானி(ரஹ்) அவர்களும் அல்லாமா இப்னு பாஸ்(ரஹ்) அவர்களுமாவார்கள். அவர்கள் இருவரும் மற்றும் சவூதியின் பேரறிஞர்கள் சபையின் அனைத்து அறிஞர்களும் நாம் மேலே குறிப்பிட்டுள்ள கருத்தையே நடைமுறையில் செயற்படுத்த வேண்டும் என்பதை மிகவும் வலியுறுத்தியுள்ளார்கள்.

அவர்களின் கருத்துக்களின் சுருக்கத்தை இங்கே நாம் தமிழில் மொழிபெயர்த்துள்ளோம்.

### அல்லாமா அல்பானி(ரஹ்) அவர்கள்.

1) அவர்கள் தனது தமாமுல் மின்னா என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்கள்:
“இஸ்லாமிய நாடுகள் (சர்வதேசப் பிறையில்) ஒன்றுபடும் வரை ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்கள் நாட்டுடனே நோன்பு பிடிக்க வேண்டும். தங்களுக்குள் பிரிந்து சிலர் தங்கள் நாட்டுடனும் வேறு சிலர் அந்த நாட்டுக்கு முன்னரோ, பின்னரோ நோன்பு பிடித்த நாடுகளுடன் நோன்பு பிடிக்கக் கூடாது என்றே நான் கருதுகிறேன். ஏனெனில் அது சில அரபு நாடுகளில் சில வருடங்களாக நடந்து வருவதைப் போல ஒரு சமூகத்திற்குள்ளே கருத்து வேறுபாட்டின் வட்டத்தை விரிவுபடுத்துவதாக அமையும்.” (தமாமில் மின்னா 398– 399)

2) ஸில்ஸிலா ஸஹீஹா என்ற தனது நூலில் கூறும் போது “இஸ்லாமிய அரசுகள் தங்கள் ஹஜ்ஜின் நாளை எவ்வாறு ஒன்றுபடுத்தியுள்ளார்களோ அவ்வாறே தங்கள் நோன்பு பிடிக்கும் நாளையும் பெருநாளையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்று நாம் கருதுகிறோம். அவர்கள் அந்த விடயத்தில் ஒன்றுபடும் வரை அவர்களுக்குக் கீழ் வாழும் சமூகங்கள், சிலர் தங்கள் நாட்டுடனும் வேறு சிலர் இன்னொரு நாட்டுடனும் நோன்பு பிடித்து தங்களுக்குள்ளே பிளவுபடுவதை நாம் ஆதரிக்கமாட்டோம். (நாம் இவ்வாறு கூறுவது) உஸூல் (அல் - பிக்ஹ்) கலையில் நிறுவப்பட்டுள்ளதைப் போன்று சிறிய பாதிப்பை செய்து பெரிய பாதிப்பிலிருந்து தவிர்ந்து கொள்ளல் என்ற சட்ட விதியைச் சார்ந்ததாகும்.”
(ஸில்ஸிலா ஸஹீஹா பாகம் 6, பக்கம் 254, ஹதீஸ் எண் 2624)

3) நீங்கள் நோன்பு பிடிக்கும் நாளில் தான் நோன்பு. நீங்கள் நோன்புப் பெருநாள் எடுக்கும் நாளில் தான் நோன்புப் பெருநாள். நீங்கள் ஹஜ்ஜுப் பெருநாள் எடுக்கும் நாளில் தான் ஹஜ்ஜுப் பெருநாள் என்பது நபி(ஸல்) அவர்களின் ஹதீஸாகும்.

அறிஞர்கள் இந்த ஹதீஸை ஆதாரமாக கொண்டு ஓரிடத்தில் வாழும் மக்கள் அங்குள்ள பெரும்பாலான மக்களுடன் நோன்பு பிடிக்க வேண்டும், பெருநாள் எடுக்க வேண்டும் தங்களுக்குள் பிரிந்து விடக்கூடாது என்று கூறியுள்ளார்கள்.

மேற்படி ஹதீஸை அல்பானி(ரஹ்) அவர்கள் தனது மேற்குறிப்பிட்ட நூலில் ஸஹீஹ் (ஆதாரபூர்வமான செய்தி) என்று விளக்கி விட்டு இது பெரும்பாலான மக்களுடனே நோன்பையும் பெருநாளையும் எடுக்க வேண்டும் என்பதைக் குறிப்பதாக விளக்கமளித்துள்ளார்கள். அதற்கு மேலும் பல அறிஞர்களின் கூற்றுக்களையும் ஆயிஷா(ரலி) அவர்களின் தகவலையும் மேற்கோள் காட்டியுள்ளார்கள்.

அதே போன்று ஒருவர் உண்மையாக பிறை கண்டு அவரின் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் அவர் கண்ட பிறை அடிப்படையில் அவருக்கு செயற்பட முடியாது. மக்களுடன் சேர்ந்தே நோன்பும் பெருநாளும் எடுக்க வேண்டும் என்று அல்பானி(ரஹ்) அவர்கள் விளக்கியுள்ளார்கள். நோன்பு பெருநாள் ஜமாஅத் தொழுகை போன்ற கூட்டு வணக்கங்களில் தனிப்பட்டவருடைய கருத்தை அது அவரின் பார்வையில் சரியாக இருந்தாலும் மார்க்கம் ஏற்றுக் கொள்ளாது என்று கூறுகிறார்கள்.

ஸஹாபாக்களுக்கிடையில் இருந்த கருத்து வேறுபாடுகளை சுட்டிக் காட்டி அக்கருத்து வேறுபாடுகள் அவர்கள் ஒரு இமாமுக்கு பின்னால் ஒன்று சேர்ந்து தொழுவதைத் தடுக்கவில்லை என்பதையும் குறிப்பாக உஸ்மான்(ரலி) அவர்கள் மினாவில் நபி(ஸல்) அவர்கள் தொழுதது போன்று சுருக்கித் தொழாது பூரணமாக தொழுததை இப்னு மஸ்ஊத்(ரலி) அவர்கள் குறை கூறிவிட்டு அவரைப் பின்பற்றி பூரணமாகவே தொழுதார்கள். அவர்களிடத்தில் ஏன் குறை கூறிவிட்டு நீங்களும் அவரைப் பின்பற்றி பூரணமாக தொழுதீர்கள் என்று கேட்கப்பட்டதற்கு வேறுபடுவது (பிளவுபடுவது) மிகக் கெட்டது என்று கூறினார்கள் என்ற செய்தியையும் அல்பானி(ரஹ்) தன் கருத்துக்கு சான்றாக எடுத்துக் காட்டி விளக்குகிறார்கள்.
(பார்கக :- ஸில்ஸிலா ஸஹீஹா, பாகம் :- 1, பக்கம் :- 443 – 445, ஹதீஸ் எண் :- 224)

### அல்லாமா இப்னு பாஸ்(ரஹ்)

1) சவூதி போன்ற ஒரு இஸ்லாமிய நாட்டில் ரமளான் மாதம் ஏற்பட்டு விட்டதாக அறிவிப்பு செய்யப்பட்டு நான் வாழும் நாட்டில் அது அறிவிக்கப்படவில்லை என்றால் சவூதியில் ரமளான் ஏற்பட்டதை அடிப்படையாகக் கொண்டு நாம் நோன்பு பிடிக்க வேண்டுமா? அல்லது எமது நாட்டில் ரமளான் ஆரம்பித்து விட்டதாக அறிவிக்கப்படும் போது அவர்களுடன் சேர்ந்து நோன்பு பிடித்து அவர்களுடன் சேர்ந்து பெருநாள்

எடுக்க வேண்டுமா என்று இப்னு பாஸ்(ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு பின்வருமாறு பத்வா வழங்குகிறார்கள்.
பதில் :- ஒரு முஸ்லிம் எந்த நாட்டில் இருக்கிறானோ அந்த நாட்டுடனே நோன்பு பிடிக்கவும் பெருநாள் எடுக்கவும் வேண்டும்.
(மஜ்மூ.ஃபதாவா இப்னு பாஸ்: பாகம் :- 15, பக்கம் :- 103 – 104)

2) ரமழான் மற்றும் ஷவ்வால் தலைப்பிறை பாகிஸ்தானில் சவூதியை விட இரண்டு நாட்கள் தாமதித்தே தென்படுவதாகவும் நாங்கள் சவூதியுடன் நோன்பு பிடிக்க வேண்டுமா? அல்லது பாகிஸ்தானுடன் நோன்பு பிடிக்க வேண்டுமா? என்று அல்லாமா இப்னு பாஸ்(ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு பின்வருமாறு பதிலளிக்கிறார்கள்.
இத்தூய மார்க்கத்தின் சட்டமாக எமக்கு தெளிவாவது என்னவெனில் நீங்கள் உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களுடன் நோன்பு பிடிப்பதே உங்கள் மீது கட்டாயமாகும். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.
1) "நீங்கள் நோன்பு பிடிக்கும் நாளில் தான் நோன்பு; நீங்கள் நோன்புப் பெருநாள் எடுக்கும் நாளில் தான் நோன்புப் பெருநாள்; நீங்கள் ஹஜ்ஜுப் பெருநாள் எடுக்கும் நாளில் தான் ஹஜ்ஜுப் பெருநாள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
எனவே நீரும் உமது சகோதரர்களும் பாகிஸ்தானில் இருக்கும் காலத்தில் அவர்கள் நோன்பு பிடிக்கும் போதே நீங்களும் நோன்பு பிடிக்க வேண்டும். அவர்கள் பெருநாள் எடுக்கும் போதே நீங்களும் பெருநாள் எடுக்க வேண்டும். ஏனெனில் நீங்களும் மேற்படி ஹதீஸிற்கு உட்படுகிறீர்கள். மேலும் பிறை தென்படுவது இடத்துக்கு இடம் வித்தியாசப்படுகிறது. அறிஞர்களில் ஒரு பிரிவினர் ஒவ்வொரு நாட்டு மக்களும் பிறை காண வேண்டும் என்ற கருத்தை கொண்டுள்ளனர். இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களும் இக்கருத்தையே கொண்டிருந்தார்கள்.

2) நோன்பு மற்றும் பெருநாளில் உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களுக்கு நீங்கள் மாறுபடுவது குழப்பத்தை ஏற்படுத்தும் மக்கள் மத்தியில் கேள்விக்கும் மறுப்புக்கும் வழிவகுக்கும். கருத்து முரண்பட்டு பிரச்சினைபடுவதையும் வாக்குவாதப்படுவதையும் தூண்டக் கூடியதாக அமையும். இம்முழுமையான இஸ்லாமிய மார்க்கம், ஒற்றுமைப்படுவதையும், உடன்படுவதையும், நல்ல காரியத்திலும், இறை அச்சகத்திலும், ஒத்துழைப்பதையும் முரண்பட்டுப் பிரச்சினைப்படுவதைத் தவிர்ப்பதையும் தூண்டுகிறது. இதனால் தான் (அல்லாஹ்வின் கயிற்றை நீங்கள் அனைவரும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.) பிரிந்து விடாதீர்கள் என அல்லாஹ் கூறுகிறான். மேலும் (நீங்கள் இருவரும் நன்மாராயம் கூறுங்கள்; வெறுப்படையச் செய்யாதீர்கள். உடன்பட்டு நடந்து கொள்ளுங்கள், பிளவுபட்டு நடக்காதீர்கள்) என்று நபி (ஸல்) அவர்கள், முஆத்(ரலி) அவர்களையும் அபூ மூஸா(ரலி) அவர்களையும் யமன் நாட்டுக்கு அனுப்பி வைத்த போது உபதேசம் செய்தார்கள்.
(பார்க்க :- மஜ்மூ.ஃ. பதாவா இப்னு பாஸ்: பாகம் :- 15, பக்கம் :- 103 – 104)

## சவூதி பேரறிஞர்கள் சபை தீர்மானம்

''அல்-லஜ்னா அத்-தாஇமா லில் புஹூஸ் அல்-இல்மிய்யா வல்இப்தா'' என்ற சவூதியின் முக்கிய அறிஞர்களை கொண்ட ஆய்வுக் குழுவிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வியினதும் அதற்கான அவர்களின் பதிலினதும் சுருக்கத்தை இங்கே தருகிறோம்.

கேள்வி :- நாம் அமெரிக்காவிலும் கனடாவிலும் இருக்கும் முஸ்லிம் மாணவர்கள். ஒவ்வொரு ரமழான் மாத ஆரம்பத்திலும் முஸ்லிம்கள் மூன்று பிரிவுகளாக பிளவுபடுகின்ற ஒரு பிரச்சினை எமக்கு ஏற்படுகிறது.

1) ஒரு பிரிவினர் தாங்கள் வாழும் பிரதேசத்தில் பிறை பார்த்து நோன்பு பிடிக்கின்றனர்.
2) இரண்டாவது பிரிவினர் சவூதியுடன் நோன்பு பிடிக்கின்றனர்.
3) மூன்றாவது பிரிவினர் அமெரிக்காவிலும், கனடாவிலும் இருக்கும் முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தின் தகவலை அடிப்படையாக வைத்து நோன்பு பிடிக்கின்றனர்.

இவ்வொன்றியம் அமெரிக்காவின் பல இடங்களிலும் பிறைபார்க்க முயற்சிக்கின்றனர். ஒரு மாநிலத்தில் பிறை கண்ட உடனே ஏனைய மையங்களுக்கு அது பற்றி அறிவிக்கின்றனர். பின்னர் முழு அமெரிக்க முஸ்லிம்களும் தாங்கள் வாழும் நகரங்களுக்கு மத்தியில் மிகவும் அதிகமான தொலை தூரம் இருந்தும் கூட ஒரே நாளில் நோன்பு பிடிக்கின்றனர். ஆகவே இம்மூன்று பிரிவினரில் யாரை நாம் பின்பற்றுவது சிறந்தது?

***பதில் :-*** ஏற்கனவே சவூதியின் பேரறிஞர்கள் சபையின் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை ஆய்வு செய்யப்பட்டு ஒரு தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் உள்ளடக்கம் யாதெனில்:

1) பிறை தென்படும் பிரதேசங்கள் வித்தியாசப்படுகின்றன. (ஒரு பகுதியில் காணும் பிறையை இன்னொரு பகுதியில் காண முடியாதிருக்கலாம்) என்பது புத்தியாலும் புலனாலும் உறுதியாக அறியப்பட்ட விடயமாகும். அதில் எந்த அறிஞர்களும் கருத்து வேறுபடவில்லை. பிறை தென்படும் பிரதேசங்கள் வித்தியாசப்படுவதை கணக்கில் எடுப்பதா இல்லையா? (ஒரு பகுதியில் கண்ட பிறையை பிறை காணாத பகுதியில் இருப்பவர்கள் ஏற்று செயற்பட வேண்டுமா இல்லையா?) என்பதிலேயே முஸ்லிம் உலமாக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு உள்ளது.

2) பிறை தென்படும் பிரதேசங்கள் வித்தியாசப்படுவதை கணக்கில் எடுக்க வேண்டுமா? இல்லையா? (ஒரு பிரதேசத்தில் கண்ட பிறையை கொண்டு மற்ற பிரதேசங்களில் இருப்பவர்களும் செயற்பட வேண்டுமா? இல்லையா?) என்பது இஜ்திஹாத் (ஆய்வு) செய்வதற்கு இடம்பாடான ஒரு விடயமாகும். அறிவிலும் மார்க்கத்திலும் தகுதியுள்ளவர்கள் மத்தியில் அந்த விடயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இது சரியான முடிவுக்கு இரண்டு கூலிகளும் தவறான முடிவுக்கு ஒரு கூலியும் கிடைக்கக் கூடிய சாத்தியமான, ஆகுமான ஒரு கருத்து வேறுபாடாகும். அறிஞர்கள் (மேற்படி) இரண்டு கருத்துக்களையும் கூறி கருத்து வேறுபடுகின்றனர். ஒவ்வொரு கருத்துடைய அறிஞர்களும் குர்ஆனில் இருந்தும் ஹதீஸில் இருந்தும் தங்களது ஆதாரங்களை எடுத்துள்ளனர். சில வேளை ஒரு குர்ஆன் வசனத்தை அல்லது ஒரு ஹதீஸை இரு தரப்பினரும் ஆதாரமாக காட்டி அதனை வெவ்வேறு விதத்தில் விளக்குகின்றனர். பேரறிஞர் சபை கருதும் சில நியாயங்களை கருத்தில் கொண்டும் இந்தக் கருத்து வேறுபாட்டில் அச்சப்படக் கூடிய விளைவுகள் இல்லை ஏனெனில் இந்த மார்க்கம் தோன்றி பதினான்கு நூற்றாண்டுகள் கடந்தும் கூட எந்தக் காலப் பகுதியிலாவது இஸ்லாமிய உம்மத் ஒரே பிறையின் கீழ் ஒன்றுபட்டதாக நாம் அறியவில்லை. மேற்படி விடயத்தை கருத்தில் கொண்டும் பேரறிஞர் சபை உறுப்பினர்கள் இந்த விடயம் எவ்வாறு நடைமுறையில் இருக்கிறதோ அவ்வாறே இருக்கட்டும் என்றும் இந்த விடயத்தை பிரச்சியைப்படுத்தி (குழப்பக்) கூடாது என்றும்

ஒவ்வொரு இஸ்லாமிய நாட்டுக்கும் தனது அறிஞர்கள் மூலமாக மேற்படி இரு கருத்துக்களில் எதனையும் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது என்றும் கருதுகிறார்கள். ஏனெனில் இரு கருத்துகளுக்கும் ஆதாரங்கள் உள்ளன.

''அல்லஜ்னா அத்தாஇமா லில் புஹூஸ் அல்-இல்மிய்யா வல்இப்தா'' வாகிய நாம் கருதுவது யாதெனில் மேற்படி முஸ்லிம் மாணவர் ஒன்றியம், மேற்படி இஸ்லாமிய அரசு இல்லாத நாடுகளில் வாழும் முஸ்லிம்களுக்கு பிறை விடயத்தில் இஸ்லாமிய அரசின் இடத்தில் இருக்கின்றது.

பேரறிஞர் சபை தீர்மானத்தின் இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில், இம் மாணவர் ஒன்றியத்திற்கு மேற்படி இரு வேறுபட்ட கருத்துக்களில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது. பின்னர், அவ்வொன்றியம் தான் கருதுவதை அந்நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் மீது பொதுவானதாக ஆக்க வேண்டும். அங்குள்ள முஸ்லிம்கள் ஒற்றுமைக்காகவும் நோன்பை ஆரம்பிக்கவும் பிளவுகள், குழப்பங்களில் இருந்து விடுபடுவதற்காகவும் அவ்வொன்றியத்தின் கருத்தையே கடைப்பிடிக்க வேண்டும். அந்த நாடுகளில் வாழும் அனைவரும் தாங்கள் இருக்கும் மாநிலங்களில் பிறை பார்க்க முயற்சிக்க வேண்டும். அவர்களில் நம்பகமான ஒருவர் அல்லது பலர் பிறை கண்டால் அதனை கொண்டு அவர்கள் நோன்பு பிடித்து அதனை அவ்வொன்றியத்திற்கும் எத்திவைத்து மற்றவர்களுக்கும் பொதுவானதாக மாற்ற வேண்டும்.

''அல்லஜ்னா அத்தாஇமா லில் புஹூஸ் அல்-இல்மிய்யா வல்-இப்தா''

| | |
|---|---|
| தலைவர் | உபதலைவர் |
| அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லா பின் பாஸ் | அப்துர் ரஸ்ஸாக் அபீபீ |
| உறுப்பினர் | உறுப்பினர் |
| அப்துல்லாஹ் இப்னு குதய்யான் | அப்துல்லா இப்னு குஊத் |

(பார்க்க :- பதாவா அல்-லஜ்னா அத்தாஇமா: பாகம் :- 10, பக்கம் :- 109 – 110)

பேரறிஞர்கள் சபை கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்ட போது அதில் கலந்து கொண்ட பேரறிஞர்களின் பெயர்ப்பட்டியலில் பதினேழு பேர் இடம்பெற்றுள்ளனர். அவர்கள்,

1) அப்துர் ரஸ்ஸாக் அபீபீ
2) முஹம்மத் அமீன் ஷன்கீதி
3) மிஹ்ளார் அகீல்
4) அப்துல் அஸீஸ் இப்னு பாஸ்
5) அப்துல்லாஹ் இப்னு ஹுமைத்
6) அப்துல்லாஹ் கய்யாத்
7) முஹம்மத் ஹரகான்
8) அப்துல் மஜீத் ஹஸன்
9) அப்துல் அஸீஸ் இப்னு ஸாலிஹ்
10) ஸாலிஹ் இப்னு கஸுன்
11) இப்றாஹீம் இப்னு முஹம்மத்
12) ஸுலைமான் இப்னு அபீத்
13) முஹம்மத் இப்னு ஜுபைர்
14) அப்துல்லாஹ் இப்னு குதய்யான்
15) ராஷித் இப்னு ஹுனைன்
16) ஸாலிஹ் இப்னு லுஹைகான்

17) அப்துல்லாஹ் இப்னு மனீ∴.
(பார்கக :-அப்ஹாஸ் ஹய்அத் கிபார் அல்உலமா, பாகம்:-3, பக்கம்:-32, தீர்மானம் :-2)

**இமாம் இப்னு தைமியா(ரஹ்)**

இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் பிறை கண்ட தகவல் எங்கிருந்து வந்தாலும் அதை ஏற்க வேண்டும் என்ற சர்வதேசப் பிறைக் கருத்தைக் கொண்டிருந்தார்கள். அவரது நூலில் இருந்து சில கருத்துக்களை இங்கு சுருக்கித் தருகிறோம்.

ஒருவர் பிறை கண்டதை அதற்குப் பொறுப்பானவர் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர் தான் கண்ட பிறை அடிப்படையில் செயற்படக் கூடாது. மக்களுடன் சேர்ந்து தான் நோன்பும் பெருநாளும் எடுக்க வேண்டும். சிலவேளை பிறை கண்டதை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ள இமாம் நம்பகமானவர்களின் சாட்சியத்தை மறுப்பதன் மூலம் திறக் குறைவு செய்பவராக இருக்கலாம். அதாவது சாட்சியாளர்களின் நம்பகத் தன்மையை தேடிப் பார்ப்பதில் கவனயீனமாக இருப்பதன் மூலமாகவோ தனக்கும் அவர்களுக்கும் மத்தியில் இருக்கும் பகைமை அல்லது மார்க்கத்தில் இல்லாத வேறு காரணங்களுக்காக அவர்களின் சாட்சியத்தை அவர் மறுப்பதன் மூலமாகவோ அல்லது வானவியலாளரின் அன்று பிறை காண முடியாது என்ற தவறான வாதத்தை ஏற்றுக் கொண்டு சாட்சியத்தை மறுக்கக் கூடியவராகவோ அவர் இருக்கலாம். அப்போதும் தலைப் பிறையைத் தீர்தானிப்பதில் அவர் கருத்தை ஏற்க வேண்டுமா? என்று கேள்வி கேட்டால் அதற்கு பதில் ஆம் சரியான அல்லது தவறான முடிவுக்கு வரக் கூடிய நேர்மையான ஆய்வாளராக அவர் இருந்தாலும் அல்லது அந்த விடயத்தில் (மேலே கூறப்பட்டதைப் போன்று) குறை செய்யக் கூடியவராக இருந்தாலும் அவரின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் ஆட்சித் தலைவர்கள் விடயத்தில் "அவர்கள் உங்களுக்கு தொழுகை நடத்துவார்கள். அவர்கள் சரியாகத் தொழுதால் உங்களுக்கும் அவர்களுக்கும் நன்மை உண்டு. அவர்கள் (வேண்டுமென்றே) பிழை செய்தால் உங்களுக்கு நன்மையும் அவர்களுக்குப் பாவமும் உண்டு" என்று கூறியுள்ளார்கள்.

எனவே அவரின் பிழைக்கும் திறக் குறைவுக்கும் அவர் மீதே குற்றம் ஏற்படுமே தவிர பிழை செய்யாத திறக் குறைவு செய்யாத முஸ்லிம் மீது குற்றம் ஏற்படாது.
(பார்க்க :- அல்-பதாவா அல்-குப்ரா, பாகம் :- 2, பக்கம் :- 460 – 464)

பின்னர் இப்னு தைமியா(ரஹ்) அவர்கள் வானவியலை அடிப்படையாகக் கொண்டு தலைப்பிறையைத் தீர்மானிப்பதை தவறானது; அப்படி செய்பவர் மார்க்கத்தில் வழி கெட்டவர்; பித்அத் செய்பவர் என்று விளக்கிக் கொண்டு செல்கிறார். இதன் மூலம் நாம் விளங்கிக் கொள்வது யாதெனில் முஸ்லிம்களின் பிறையை தீர்மானிக்க பொறுப்பு சுமத்தப்பட்டவர் தவறிழைத்தால் அல்லது வானவியலைப் பயன்படுத்தி இன்று பிறையை காண முடியாது என்று முடிவு செய்து நம்பகமானவர்களின் சாட்சியத்தை மறுத்தால் அவரின் செயல் பித்அத் ஆக இருந்த போதிலும் அவரையே முஸ்லிம்கள் ஏற்க வேண்டும். அவர் செய்த குற்றத்திற்கு அவர் மாத்திரமே பொறுப்பு சுமக்க வேண்டும். ஏனைய அவரைப் பின் பற்றிய முஸ்லிம்கள் அல்ல என்பதாகும். இதுவே இமாம் இப்னு தைமியா(ரஹ்) அவர்களின் கருத்தாகும்.

# இணைப்பு

## சர்வதேசப் பிறையை நியாயப்படுத்த உலமாக்கள் மீது இட்டுக்கட்டலாமா?

சர்வதேசப் பிறையைச் சரிகாணும் சவூதியின் ஸலபி அறிஞர்கள் கூட, உள்நாட்டுப் பிறை நடைமுறைப்படுத்தப்படும் நாட்டில் சர்வதேசப் பிறையை நடைமுறைப்படுத்தக் கூடாது; பெரும் பான்மை மக்களுடன் ஒன்று பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாம் சொல்லும் போது சிலர் பொய்யன வாதத்தை முன்வைக்கின்றனர். அதாவது அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தாலும் நடை முறையில் அவர்கள் சர்வதேசப் பிறையையே பின்பற்றுகிறார்கள் என்று கூறி அவர்கள் மீது இட்டுக்கட்டுகிறார்கள். இப்படியானவர்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளட்டும் இது ஒரு பெரும் பாவமாகும். அந்த அறிஞர்களுக்குச் செய்யும் அநியாயமாகும். (நாம் அல்லாஹ்வை விட யாரையும் தூய்மைப்படுத்த மாட்டோம்) நாம் அறிந்த வரை மார்க்க விடயத்தில் அவ்வறிஞர்கள் மிகவும் பேணுதலானவர்கள். மக்களுக்கு ஒன்றைச் செல்லிவிட்டு தாங்கள் அதற்கு மாற்றமாக நடக்க மாட்டார்கள். அவர்களது கருத்து அதற்கு மாற்றமாக இருந்தால் அதைச் சொல்லாமலே இருந்திருப்பார்கள். அதைச் சொல்ல வேண்டும் என்ற எந்த நிர்பந்தமும் அவர்களுக்கில்லை. அப்படிச் சொன்ன அறிஞர்கள் சவூதி சில நாடுகளின் பிறைகளை ஏற்றுக் கொள்ளாத போது அதற்கு மாற்றமாக அதை அவர்கள் ஏற்று நடைமுறைப்படுத்தினார்களா?

இவ்வாறு நீங்கள் இட்டுக்கட்டுவது உலமாக்களுக்கும் இந்த உம்மத்திற்கும் செய்யும் துரோகமாகும். அவர்கள் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள். அவர்கள் சொல்வது ஒன்று செய்வது வேறொன்று என்று பரப்பினால் அவர்களை விட்டும் மக்கள் தூரமாகி விடுவார்கள். ஏற்கனவே இவர்களைப் போன்றவர்கள் செய்த தவறுகளால் மக்கள் அவ்வறிஞர்களின் பெறுமதியைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள். நீங்களும் ஆதரிக்கும் இவ்வறிஞர்களைப் பற்றி இவ்வாறு சொல்லிவிட்டு எப்படி அவர்களை நம்புகிறோம் என்று சொல்கிறீர்கள்? பொய்யர்களே! வாயினால் வெளிவரும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். அறிஞர்கள் சொன்னதற்கு மாற்றமாக செய்கிறார்கள் என்றால் அவர்கள் சொன்னதைத்தான் கேட்டு நடக்க வேண்டுமே தவிர அவர்கள் செய்வதையல்ல.

# இறுதியாக

நாம் எழுதிய விடயங்களில் எவை சரியானவையோ அவை அல்லாஹ்விடமிருந்து மாத்திரம் ஏற்பட்டவையாகும். அவற்றில் ஏதேனும் பிழைகள் இருந்தால் அவை எனது பலவீனத்தாலும் சைத்தானின் சூழ்ச்சியாலும் ஏற்பட்டவையாகும்.

سبحانك اللهم وبحمدك أشهد أن لا إله إلا أنت أستغفرك وأتوب إليك
وصلى الله عليه وسلم على نبينا محمد وعلى آله وصحبه وسلم
وآخر دعوانا أن الحمدلله رب العالمين